
வெளியீடு-12

# கணினிக்களம்

நவீன தொழில்நுட்ப ஆய்வுத்தொடர் சஞ்சிகை

2012 | ASIAN EDITION | விலை 85/=

கண் சிமிட்டினால் மறைந்து விடுவீர்கள்




பக்கம் 10

கைத்தொலைபேசியில் கூகிளின் ஆதிக்கம்



பக்கம் 33



புலனாய்வாளர்கள் பாதுகாப்புடன் பேச புதிய தொழில்நுட்பம்

பக்கம் 25

தகவல்களை பரிமாற திறந்த வெளியில் சிறந்த வழி




பக்கம் 19

# USB பாதுகாப்பு



- உங்கள் தகவல்களும் திருடப்படலாம்
- பெறுமதிமிக்க ஆவணங்கள் தொலைந்து விட்டால்?

ப-13



இணையத் தளங்களை உடைத்து உள்நுழைபவருடன் ஒரு நேர்காணல்

ப-44



## iPhone 4s

ரூபா 6000 மட்டுமே

ப-26



## பிரபல்ய இணையத்தளம் திடீர் முடக்கம்.

- 6.8 மில்லியன் வாடிக்கையாளர்கள் தவிப்பு.
- ஸ்தாபகர்கள் பொலிஸ் பிடியில்

ப-43





# தொழில்நுட்ப தகவல்கள் குறுஞ்செய்திகளாக உங்கள் கைகளில்....

## கணினிக் களத்தின் இன்னுமோர் இலவச சேவை

தொடராக வெளிவரும் இந்த கணினிக்களம் சஞ்சிகையில் இந்த பக்கத்தில் உள்ள தொடர் இலக்கத்தினை உங்கள் கைத்தொலைபேசியில் **type** செய்து 0721296281 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு **sms** ஒன்றினை அனுப்பி வையுங்கள்.

இவ்வாறு அனுப்பி வைக்கப்படும் எமது கணினிக்கள வாசகர்களின் கைத்தொலைபேசி இலக்கங்களுக்கு உடனுக்குடன் வெளிவரும் தொழில்நுட்பம் மற்றும் பல்வேறுபட்ட பன்னாட்டுச் செய்திகள் அடுத்த கணினிக்களம் சஞ்சிகை வெளிவரும்வரை குறுஞ்செய்திகள் இலவசமாக வாசகர்களை வந்தடையும்

- **தொழில்நுட்பம்**
- **கல்வி**
- **பொது அறிவு**
- **வர்த்தகம்**
- **மருத்துவம்**
- **பன்னாட்டுச்செய்தி**




உங்கள் தொடர் இலக்கம்: 12120437

இது எங்கள் வாசகர்களுக்கு மட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினிக்களம்

*Published By*
**Microwin Electronics**
**CH - Switzerland**

Editor - in - Chief
*Tambi*

**Kanini-Kalam-Magazine is a Registered trade Name, Owns and Operated by Microwin Electronics, Switzerland**

**கணினிக்களம் தொடர் சஞ்சிகையில் வெளிவரும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அனுமதியின்றி மறுபிரசுரம் செய்வது சட்ட ரீதியாக தடை செய்யும் வகையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**கணினிக்களம் சஞ்சிகையில் விளம்பரங்களில் தெரிவிக்கப்படும் விபரங்களிற்கு விளம்பரதாரர்களே பொறுப்பானவர்கள்**

**Microwin Electronics**
Truttikerstrasse - 8
8475 Ossingen
Switzerland

| | |
|---|---|
| Switzerland | 0041 (31) 52 68 256 |
| Sri Lanka | 0094 (077) 86 88 517 |
| Germany | 0049 180 100 9272 7878 |
| Austria | 0043 72 051 75 62 |
| E-mail | filetolee@yahoo.com |
| skype | pckalam |
| website | www.thamilsms.com |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கணினிக்களம் தொடர்புகளுக்கு:

**திங்கள் முதல் வெள்ளி வரை இலங்கை நேரம்**
**காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை**
**எமது தொலைபேசிச் சேவை வாசகர்களுக்காக இயங்கும்.**


**ஆசிரியபீடம்:**

| | |
|---|---|
| இலங்கை : | 077 8688517 / 0112 980 382 |
| ஐரோப்பா : | 0041 3152 68256 |
| தொலை நகல்: | 0094 (112) 980 382 |
| செய்தி/படங்கள் : | 0094 (077) 86 88 517 |
| விளம்பரம்: | 0094 (077) 86 88 517 |
| மின்னஞ்சல்: | filetolee@yahoo.com |
| இணைய முகவரி: | www.thamilsms.com |

**இலங்கை முகவரி**
Microwin Electronics (Pvt) Ltd ,
107/26, Balagala Road,
Hendala, Wattala. Sri Lanka.
Fax : +94 (0112) 980 382
E-mail: filetolee@yahoo.com.

**ஐரோப்பிய முகவரி**
Microwin Electronics,
Truttiker str 8,
8475 Ossingen,
Switzerland.
Fax : 0041(31)52 68 256
E-mail : filetolee@yahoo.com
skype : pckalam


### உங்கள் கவனத்திற்கு...

CD/ DVD/ சஞ்சிகைகளில் ஆய்வு செய்து வெளியிடப்படும் மென்பொருட்களுக்கு கணினிக்களம் சஞ்சிகையோ அல்லது Microwin Electronics நிறுவனமோ அதற்கான முழுமையான மென்பொருள் ஆதரவை வழங்கமுடியாது.

அந்த மென்பொருட்களை உற்பத்தி செய்த நிறுவனங்களிடம் இருந்து மட்டுமே முழுமையான ஆதரவை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

### வாசகர் கருத்து / விமர்சனம்

கணினிகளம் சஞ்சிகையை மேலும் உயர்தரத்திற்குக் கொண்டு வருவதற்கு வாசகர்களின் கருத்துக்களையும் விமர்சனங்களையும் எப்போதும் வரவேற்கின்றோம்.

### உங்கள் முயற்சியை ஊக்குவிப்பதற்காக....

உங்கள் நகரம் அல்லது கிராமங்களில் இடம்பெறும் தொழிநுட்பம் தொடர்பான செய்திகள் அல்லது தொழிநுட்பம் சார்பான கண்டுபிடிப்புகளிலும் முயற்சிகளிலும் ஈடுபடுபவர்கள் பற்றிய தகவல்களை எமக்கு அறிய தாருங்கள். அது தொடர்பாக எமது ஆசிரியர் பீடம் ஆய்வு செய்து அதற்கான ஊக்குவிப்புக்களையும் உதவிகளையும் எமது நிறுவனம் மேற்கொள்ளும்.


"கணினிக்களம்" சஞ்சிகை சுவிற்சர்லாந்தை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் Microwin Electronics (Pvt) Ltd நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டு இலங்கையிலுள்ள அதன் கிளை நிறுவனத்துடன் இணைந்து கல்விச் சேவைக்காக பிரசுரிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வாசகர்களுக்கு வணக்கம்,

**மாணவர்களின் வேண்டுகோளிற்கிணங்க குறைந்த விலையில் சஞ்சிகை :** Microwin Electronics நிறுவனமானது ஐரோப்பாவில் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக நவீன தொழில்நுட்பவிடயங்களை ஆராய்ந்து அறிமுகப்படுத்தி வருகிறது. அதன் ஓர் கல்விச் சேவையாக இளம் தலைமுறையினருக்கு தொழில்நுட்ப அறிவை உட்புகுத்தும் நோக்கோடு " கணினிக்களம் " எனும் சஞ்சிகையை சுவிற்சர்லாந்தில் இருந்து வடிவமைக்கப்பட்டு ஐரோப்பாவில் மட்டுமன்றி கடல் கடந்து உலகெங்கும் தொடர் சஞ்சிகையாக வெளியீடு செய்து வருகிறது.

வெளியீடு 11 வரை முழுவர்ணத்துடன் ரூபா180/- ற்கு தொடராக வெளிவந்த இச்சஞ்சிகையானது இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் உள்ள மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தற்போது குறைந்த விலையில் (ரூபா 85/-) மாதாந்த சஞ்சிகையாக வெளியிடப்பட்டுள்ளது. அந்த வகையில் ஏற்கனவே வெளிவந்த கணினிக்களம் சஞ்சிகையானது புதுப்பொலிவுடனும், புதிய தொழிநுட்ப விடயங்களுடனும் உங்கள் ஆர்வத்தையும், ஆவலையும் தூண்டும் வகையில் கணினிக்கள இறுவெட்டுடன் இணைந்து இன்னொரு சஞ்சிகையாக வெளிவரவுள்ளது.

**தொழில்நுட்பம் குறுஞ்செய்திகளாக :** உலகத்தின் எந்த ஒரு மூலையிலும் தொழில்நுட்பத்தில் நடக்கும் ஆராய்ச்சியையும் கண்டுபிடிப்பையும் மிகதுல்லியமாக ஆராய்ந்து அதனை கணினிக்களம் சஞ்சிகை ஊடாக தொழில்நுட்ப செய்திகளை உடனுக்குடன் வெளியிட்டு வரும் Microwin Electronics நிறுவனமானது, ஒரு படி உயர்ந்து அதனை குறுஞ்செய்திகளாக உங்கள் உள்ளங்கைகளில் கைத்தொலைபேசி ஊடாக இலவசமாக வந்தடைய வழியமைத்துள்ளது. அச்செய்திகளை நீங்களும் உடனுக்குடன் பெற்று நவீன உலகிற்கு ஏற்ற வகையில் நீங்களும் கணினி வல்லுனராக மாறுங்கள். ( இச்செய்திச்சேவை பற்றிய முழுவிபரம் 2 வது பக்கத்தில் )

S . Naganathan
(Managing Director)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகப் பாரிய பற்றரி
## சுவிற்சர்லாந்தில் தயாரிப்பு

**சுவிற்சர்லாந்தில் பாரிய தொழில்நுட்பகருவிகளை உருவாக்கும் ABB நிறுவனமும் , மின்சாரசபையும் இணைந்து பாரிய Battery ஒன்றை மின்விநியோகப்பகுதியில் இணைத்துள்ளனர்.**




9 மாத கடும் உழைப்பின் பயனாக சுவிற்சலாந்தில் Zurich நகரப்பிரிவிலுள்ள Dietikon எனும் இடத்தில் இந்த Battery தயாரிக்கப்பட்டுள்ளது.

Battery களிலிருந்து மின்சக்தியை புதுப்பித்து மீளப்பெறும் நோக்கோடு இவை தயாரிக்கப்பட்டுள்ளன. மிகக்கூடியளவு சக்தியை சேமிக்கவல்ல இந்த Battery ஆனது 500 kw/h சக்தி சேமிப்பைக் கொண்டது. இது சராசரியாக நான்கு பேரைக்கொண்ட ஒரு வீட்டிற்கு ஒரு நாள் மின்சக்தியை தரவல்லது.

சக்தியை புதுப்பிக்கவல்ல இந்த battery ஆனது எதிர்காலத்தில் மின்சக்திப் பாவனைக்கு மிகவும் பயன்தரக்கூடிய ஓர் படைப்பாகும்.

# கோள்களை கண்டுபிடிப்பதற்காக தொலைநோக்கிகளுக்கு உதவும் ஆகாயக்கப்பல்

விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் நட்சத்திரங்களைச் சுற்றித் திரியும் கோள்களைக் கண்டறிய அடிப்படையான இரு முறைகளைக் கையாண்டனர். அதாவது நட்சத்திரமானது கோள் ஒன்று அதன் முன்னால் செல்லும் போது மின்னிக்கொண்டிருக்கும். அல்லது கோள் அதனை சுற்றிச் செல்கையில் ஊசலாடிக்கொண்டிருக்கும் என்பதேயாகும். இவ்விரு முறைகளும் கோள்களை நேரடியாகப்பார்வையிடச் சிறந்த முறைகள். ஆனால் காற்றில் மிதக்கும் பெரிய ஆகாயக்கப்பல்கள் ( Giant Zeppelin / star shade ) இக்கோள்களை அவதானிக்க எவ்வாறு உதவுகிறது என்பதை சுருக்கமாக பார்ப்போம்.




நீங்கள் சில சமயங்களில் நேரடியாகச் சூரியனைப்பார்க்க நேரிடும் போது உங்கள் கைகளால் கண்களை மறைப்பது இயல்பு. இதன் மூலம் கண்களில் நேரடியாக சூரியக்கதிர்கள்படாது தவிர்க்கப்படுகிறது. இந்த Zeppelin கள் செயற்படுவதன் நோக்கமே இதுதான்.




தொலைநோக்கிகளுக்கும்,நட்சத்திரங்களுக்கும் இடையில் அமைந்து, நட்சத்திரங்களில் இருந்து வரும் பெரும்பாலான ஒளியை மறைத்து தொலைநோக்கி மூலம் கோள்களை இலகுவாகப்பார்க்க முடிகிறது. இதனடிப்படையில் 80000 மைல்களுக்கு அப்பால் உள்ள தொலைநோக்கிக்கு 3 வருடங்கள் அதன் ஒளியைக்கட்டுப்படுத்தி 10 பில்லியன் கோள்களை அவதானிக்க உதவு-கிறது. இந்த தொழில்நுட்பமானது சூரிய மண்டலத்தில் 32 ஒளியாண்டுகளுக்குட்பட்ட பல்லாயிரக்கணக்கான கோள்களை அவதானிக்கப் பயன்படுகிறது.

2018 ஆம் ஆண்டில் இந்த ஆகாயக்கப்பலானது (Zeppelin) நடைமுறைப் படுத்தப்பட உள்ளது. ஆனால் அதற்கு முன் NASA அதைவிட சிறிய அளவிலான Zeppelin ஐத் தயாரித்து தொலைநோக்கியுடன் செயற்படுத்த தீர்மானித்துள்ளனர்.

இது ஓர் பரீட்சார்த்த நடவடிக்கையாகும். NASA Eureka எனும் 246 அடி அளவிலான carbon இழைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட வெடிக்காத helium மூலம் தயாரித்த மேல் உறையைக் கொண்ட நவீன Zeppelin ஐ பரீட்சித்துப்பார்க்கும் முகமாக அனுப்பியுள்ளது. இதன் மூலம் பெரிய அளவில் ஏதேனும் கண்டுபிடிக்க முடியாவிட்டாலும் இந்த 3 மில்லியன் டொலர் பெறுமதியுள்ள Zeppelin எதிர்காலத்தில் மேலும் பல ஆராய்ச்சிகளுக்கு உதவும் என நம்பப்படுகிறது.

**தெரிந்து கொள்ளுங்கள்:** ஒரு ஒளியாண்டு = 5.87849981 × 1012 மைல்கள் அல்லது 9,454,254,955,488 கிலோ மீட்டராகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவித்த காட் டிஸ்குகளை வாங்குமுன்

# HDDன் உடல் நலம் எப்படி? வயது என்ன?

## அறிந்து வாங்குங்கள்





**உங்கள் வன்தட்டு (Hard Drive) பழுதடைவதைப்பற்றி கவலைப்படுகிறீர்களா? HDD life எனும் மென்பொருளைப் பிரயோகித்து பாருங்கள்.**

முன்னெச்சரிக்கையுடன் இது உங்கள் HDD ஐ கவனிக்கிறது. இந்த பாதுகாக்கும் மென்பொருளானது malfunction மற்றும் தரவுகளை அழியாமல் 100% பாதுகாக்கிறது .

HDD life ஆனது smart தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு pc மற்றும் பெரிய அளவிலான network களுக்கும் தொழிற்படுகிறது. HD உற்பத்தியாளர்கள் மூலம் இந்த smart தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நம்பத்தகுந்த தொழில்நுட்பமானது HD இல் ஏதாவது பிழைகள் ஏற்படும்போது முன்னெச்சரிக்கையுடன் தரவுகளை back up செய்வதுடன் HD ஐ மாற்றியமைக்கிறது.

HDD-life ஆனது windows தொடங்கும்போது 10 செக்கனில் load ஆகி அனைத்து தரவுகளையும் சரிபார்த்துக் கொள்ளும் இதற்கு உண்மையில் memory இல்லை.




இந்த மென்பொருளை பாவிப்பதற்கு அடிப்படை கணினி அல்லது Harddisk பற்றிய அறிவு தேவையில்லை. கடந்த 4 வருடங்களில் 10000 ற்கும் மேற்பட்ட HDகள் பரிசோதிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இந்த புதிய தொழில்நுட்பத்தின் மூலம் உங்கள் HD களின் ஆரோக்கியத்தையும் செயற்பாடுகளையும் அறியக்கூடியதாக இருக்கும்.

**HD life ஆனது பின்னணியில் இருந்து கொண்டு உங்கள் HD யின் செயற்பாடுகளைக் கவனித்து ஒவ்வொரு இடைவெளிகளிலும் உள்ள தரவுகளை பாதுகாக்கிறது.**

இதற்காக சிறிதளவு memory ஐ எடுத்துக்கொள்ளும். அத்துடன் தேவையில்லாத செய்திகள் வருவதையும் தவிர்க்கிறது. சிலவேளை உங்கள் HD பழுதடைந்து விட்டால் அதை முன் கூட்டியே தெரிவிப்பதோடு HD ஐ மாற்ற வேண்டிய நிலைமை ஏற்படும் போது அதையும் தெரிவிக்கிறது.

நவீன ரக கணினிகள் தொழிற்படும்போது கூடியளவு வெப்பமடைகிறது. இதற்காக cooler கள் பயன்படுத்தப்படுகின்றன. HD களும் விதிவிலக்கல்ல. HDகள் வேகமாக தொழிற்படும் போது அதிகளவு சூடேறுவதால் இதற்கும் cooler கள் பயன்படுத்தப்படுகின்றன.

அதன் வெப்பநிலை 10°C இனால் கூடும்போது அதன் செயற்பாடும் இருமடங்கு குறைகிறது. இதனால் தான் அதன் வெப்ப நிலையையும் கட்டுப்படுத்துதல் அவசியம்.

HDD life ஆனது இந்த பிரச்சினையைத் தீர்ப்பதோடு disk இன் வெப்ப நிலையையும் உங்கள் system-த்தில் தெரியப்படுத்துகிறது. (Notification Area வில்) அத்துடன் உயர் வெப்பநிலையை அடைந்தால் அதையும் தெரியப்படுத்துகிறது.

**HDD LIFE PRO மென்பொருளின் சில தொழிற்பாடுகள் சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளது.**

- ஒப்பற்ற உயர்பாவனை
- monitor ஐ பாதுகாத்தல்
- அடிக்கடி தற்பாதுகாப்பு
- Disk ல் உள்ள free space ஐ அறிவித்தல்
- Disk ன் thermometer ஆக தொழிற்படல்
- HD ன் ஆயுட்காலத்தை கணக்கிடல்
- சத்தம் மற்றும் AAM level ஐ சரி செய்தல்
- தன்னிச்சையாக தொழிற்படல்

| | |
|---|---|
| இயங்குதளம் | : XP / 2003 / Vista |
| கோப்பின் அளவு | : 7.2 MB |
| கட்டணம் | : USD 29.00 |
| தேவையானது | : IDE, Serial ATA, SCSI |
| Code: | : KS12-01 |

## புதிய அறிமுகம்




**1GB அளவுள்ள கோப்புகளை வெறும் 10MB அளவாக மாற்றித்தருகிறது.**

## KGB Archiver

பொதுவாக நாம் அதிககொள்ளளவு கொண்ட கோப்புகளை WinZip,7-Zip போன்ற மென்பொருட்களின் துணையுடன் தான் கோப்புகளை Compress செய்து பயன்படுத்துவோம்.

இந்த மென்பொருளானது மேற்கண்ட மென்பொருட்களைக் காட்டிலும் பத்து மடங்கு குறைவான கொள்ளளவு கொண்ட கோப்புகளாக மாற்றித் (compression) தருகிறது.

மென்பொருளின் பெயர்: KGB Archiver

இம்மென்பொருளானது நம்முடைய கோப்புகளை மிகவிரைவாக,குறைவான அளவுள்ள கோப்புகளாக மாற்றித் தருகிறது. 1GB அளவுள்ள கோப்புகளை வெறும் 10MB அளவாக மாற்றித்தருகிறது.


இவ்வாறு குறைந்த அளவாக

(தொடர்ச்சி 8ம் பக்கத்தில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய அறிமுகம்




# Screen Hunter Plus

Screen hunter plus ஆனது screen capture செய்வதற்கான ஓர் புதிய மென்பொருளாகும் . இது பல அனுகூலங்களுடன் கூடிய 100 image கள் வரை capture மற்றும் edit செய்யமுடியும்.

உயர்தரத்தில் zooming , resizing , cropping பிரயோகிக்க முடியும். அத்துடன் text வடிவங்களையும் அதுமட்டுமல்லாது desktop லிருந்தோ அல்லது internet இல் இருந்தோ fileகளை drag&drop செய்யவும் முடியும்.

| | |
|---|---|
| இயங்குதளம் | :Windows XP / 2003 |
| கோப்பின் அளவு | :10.6 MB |
| கட்டணம் | :USD 19.95 |
| தேவையானது | :Pentium 166MHz PC |
| Code: | :KS12-03 |

## புதிய அறிமுகம்




# Clean shut down

File களை தரவிறக்கம் செய்யும் பொழுது அல்லது CD களை மறுபிரதி செய்து கொண்டிருக்கும் பொழுது நாம் அவசர அலுவலாக வெளியில் செல்ல வேண்டியிருக்கும்.

இந்நிலையில் கணினியை இடையில் நிறுத்த முடியாது. கணினியில் நடைபெறும் செயற்பாடுகள் முழுமையாக முடிவடைந்த பின் கணினி தன்னிச்சையாகவே நிறுத்தப்பட வேண்டுமாயின் இந்த மென்பொருள் மிகச்சிறந்ததாகும்.

இந்த மென்பொருளில் Computer ஐ shut-down செய்வதற்கு இரு பட்டன்கள் மட்டுமே உள்ளன. அவை OK மற்றும் Cancel. நிறுத்த வேண்டிய நிமிடங்களை தெரிவுசெய்து ok பட்டனை கிளிக் செய்தால் போதும். கணினி தன்னிச்சையாகவே நிறுத்தப்பட்டுவிடும்.

| | |
|---|---|
| இயங்குதளம் | : Windows |
| கோப்பின் அளவு | : 235 KB |
| கட்டணம் | : Freeware / $0 |
| தேவையானது | : Java |
| Code: | : KS12-04 |

## 1GB அளவுள்ள கோப்புகளை...

( 7ம் பக்க தொடர்ச்சி )

Compress செய்து தருவதால் அதிக கொள்ளவுகொண்ட file களையும் நாம் எளிதாக பரிமாற்றம் செய்துகொள்ள முடிகிறது. இது விண்டோஸ் மற்றும் லினக்ஸ் இயங்கு தளங்களை ஆதரிக்கிறது.

compression அளவுகளை உங்கள் விருப்பப்படி Very Weak, Low, Normal, Maximum, High என்னும் வகையில் நாம் அமைத்துக் கொள்ளலாம். இந்த மென்பொருளை நிறுவ உங்கள் கணி-னியில் 1.5 GHz Precesser, குறைந்த பட்சம் 256 MB Ram நிச்சயம் இருக்க வேண்டும்.

குறிப்பு: இம்மென்பொருளைக் கொண்டு compression செய்த File-களை இதே மென்பொருளைக் கொண்டுதான் விரிக்க முடியும். எனவே இம்மென்பொருளானது உங்கள் நண்பர்களிடத்தும் நிச்சயம் இருக்க வேண்டும். இம்மென்பொருளின் மூலம் வீடியோ கோப்புகளை compress செய்யமுடியாது.

மற்ற வகைக் கோப்புகளை எளிதாக Compression செய்து தருகிறது. மற்ற Compression Software-களைக் காட்டிலும். கோப்புகளை குறைந்த அளவிற்கு சுருக்கித் தருவதால் இந்த மென் பொருள் உண்மையிலேயே அதிக பயன்தரக்கூடிய ஒன்று.

அடிக்கடி அதிக கொள்ளளவு கொண்ட கோப்புகளை பரிமாற்றம் செய்து கொள்ளும் நண்பர்களுக்கு இந்த மென்பொருள் உதவும் என்பதில் சந்தேகமில்லை.


| | |
|---|---|
| இயங்குதளம் | : Windows 2K / XP / 2003 |
| கோப்பின் அளவு | : 3.7 MB |
| கட்டணம் | : Freeware |
| தேவையானது | : NET Framework |
| Code: | : KS12-02 |

## புதிய அறிமுகம்

# Globo Note – 1.2.2

Desktop Note களை எடுப்பதற்கான புதிய மென்பொருள் Globo Note. இது எந்தவொரு Operating Systerm த்திலும் வேலை செய்யக் கூடியது.இதன் சில தொழிற்பாடுகள் இங்கு தரப்பட்டுள்ளது.

- Windows அல்லது Linux இல் தொழிற்படக்கூடியது.
- Notes ஐ group இல் ஒழுங்குபடுத்தும்.
- Text editing (bold,italic, colour etc) செய்ய முடியும்.
- Save / Load செய்ய முடியும்
- Notes இல் images ஐ புகுத்தமுடியும்.
- Delete ஆகிய Notes ஐ restore செய்ய முடியும்.
- Note கள் delete ஆகாமல் இருக்க முடியும்.
- Notes ஐ customize செய்ய முடியும். அதாவது colour, font, மற்றும் Behavier ஐ மாற்றமுடியும்.




| | |
|---|---|
| இயங்குதளம் | : Windows 2K / XP / Vista / |
| கோப்பின் அளவு | : 4.6 MB |
| கட்டணம் | : GPL / $0 |
| தேவையானது | : Java 6 |
| Code: | : KS12-05 |

## இணையதள சேமிப்பகத்திலிருந்து...

*இங்கு ஆய்வுசெய்யப்படும் மென்பொருட்களை www.mydrive.ch எனும் இணைய தள சேமிப்பகத்தினுள் இருந்து எமது வாசகர்கள் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.*

*இணையதள முகவரி : www.mydrive.ch*
*Username : kalam @kalamsoftware*
*Password: kalamuser*
*சஞ்சிகையின் வெளியீட்டினை தெரிவுசெய்தபின் நீங்கள் விரும்பும் மென்பொருளின் Code இனை தெரிவுசெய்து பதிவிறக்கிக் கொள்ளுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்புக்களை பகிர்தல் என்றால் என்ன?



## File sharing

கோப்புகளை பகிர்தல் (File sharing) என்பது பல்வேறு தொழிற்பாடுகள் மூலம் computer data களை வெளிப்படையாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ பகிர்வது ஆகும்.


நீங்கள் நேரடியாக ஏதாவது ஒரு CD இல் file களை பகிர்வதும் , ஓர் network இல் file களை அனுப்புவதும் உதாரணமாக mail அனுப்புவதும் file sharing என்னும் தலைப்பிற்குள்ளே அடங்கும். file sharing மூலம் சில நபர்களுக்குள் குறிப்பிட்ட விடயங்களை பார்த்து வாசிக்கவோ எழுதவோ திருத்தியமைக்கவோ copy அல்லது print செய்யவோ முடியும். பாவனையாளர்கள் ஒரே மாதிரியான அல்லது வித்தியாசமான தொழிற்பாடுகள் மூலம் செயற்படுவார்கள்.

File sharing முக்கியமாக mainframe மற்றும் multi user computer system த்தின் மூலம் பல வருடங்களாக பிரயோகிக்கப்பட்டது. Internet இன் பிரவேசத்தின் பின் இம்முறையில் File Transfer Protocol (FTP) பெரும்பான்மையாக உபயோகிக்கப்பட்டது.

FTP ஆனது FTP Server மூலம் சில குறிப்பிட்ட நபர்களுக்கிடையில் password ஐ பிரயோகித்து வாசிக்கவோ எழுதவோ பயன்படுத்தப்படுகிறது. அநேகமான FTP தளங்கள் பாவனையாளர்களுக்கு file sharing மற்றும் பார்த்து download செய்வதன் மூலம் copy செய்யவும் அனுமதியளிக்கிறது. அநேகமான website ஐ அபிவிருத்தி யாளர்கள் webserver இல் தமது file களை upload செய்யவும் webfile களை பார்வையிடவும் FTP ஐ உபயோகிக்கின்றனர்.

ஆனால் பெரும்பான்மையான file sharing இற்கும் தொடர்ச்சியான download அல்லது copy செய்வதற்கும் World Wide Web களையே பாவனையாளர்கள் உபயோகிக்கின்றனர். சில file sharing முறையானது எந்த muti-user operating system த்தின் ஊடாகவும் வழங்கக்கூடும். ஆனால் அனைத்திலும் சிறந்ததாக கருதப்படுவது network file system (NFS). இது sun microsystem த்தினால் Unix systemஐ அடிப்படையாகக்கொண்டு விருத்தி செய்யப்பட்டதாகும்.

## கோப்புகளை பகிர்தல்... சட்டபூர்வமானதா ? சட்டபூர்வமற்றதா ?





கோப்புகளை பகிர்தல் (file sharing) ஆனது 100% சட்டபூர்வமானதாகும். எந்தவொரு நாட்டிலும் இது சட்டபூர்வமற்றதாக ஆக்கப்படவில்லை. நீங்கள் பிரதிபதிப்புரிமை - உடையவற்றை அதாவது copy rights உள்ளவற்றை sharing செய்வீர்களேயானால் அது சட்டப்படி குற்றமாகும்.

**சில உதாரணங்கள் தரப்பட்டுள்ளன.**

- Copy rights உள்ள திரைப்படங்களை download செய்தல்
- Copy rights ல் உள்ள பாடல்களை அதை வாங்காத நபர்களுக்கிடையில் sharing செய்தல் அல்லது நீங்கள் அதை வாங்காமல் வாங்கியவர்களிடம் இருந்து download செய்தல்.
- Computer software களை sharing அல்லது download செய்தல் (மென்பொருள் ,விளையாட்டுக்கள்)

### பதிப்புரிமை உள்ளதா என்பதை எப்படி அறிவது?



பாடல்கள் , திரைப்படம் அல்லது software ஐ வாங்கும்போது பொதுவான விதிமுறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும்.

பிரபல்யமான பாடல்களை online இல் அல்லது கடையில் வாங்கும்போது திரைப்படத்தை திரையரங்கில் பார்க்கும் அல்லது DVD இல் வாங்கும்போது,TV நாடகங்கள் DVD வடிவில் விற்கப்படும் போதும், software/program அல்லது game ஐ கடையில் வாங்கும் போதும் பரீசிலித்து வாங்கவேண்டும்.

**Direct connect , eDonkey , Kazaa , Limewire, Napstar, Degado, Bittorrent போன்றவை சட்டபூர்வமானவையா?**

Program கள் அல்லது தொழில்நுட்பங்கள் சட்டபூர்வமற்றவையல்ல. ஆனால் copy rights உள்ள மற்றவர்வகளுடைய data களை

Bittorent அல்லது மற்றைய file sharing programme களை download செய்வது அல்லது game demo , movie trailer போன்றவற்றை update செய்வது சட்டபூர்வமானதாகும். எப்படி இருப்பினும் அதே program ஐ பயன்படுத்தி புதிய பாடல்களை அல்லது திரையரங்குகளில் திரைப்படத்தை பார்ப்பது சட்டபூர்வமற்றதாகும்.



**இத்தகைய செயல்களின் மூலம் கைதுசெய்யப்பட்டால் என்ன தண்டனை?**

**இது உங்களின் உள்ளூர் சட்டநடவடிக்கையிலேயே தங்கியுள்ளது. பெரும்பாலும் பாடல், திரைப்படம் அல்லது software ஐ share அல்லது download செய்தமைக்காக தண்டப்பணம் கட்டவேண்டியிருக்கும்.**

**நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களை அல்லது file களை download செய்தால் மிகப்பெரிய தொகை செலுத்த வேண்டும்.**


**Hongkong மற்றும் ஜேர்மன் நாட்டைச்சேர்ந்த நபர்களுக்கு BitTorent website இலிருந்து file களை share செய்த குற்றத்திற்காக சிறைத்தண்டனை கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணைச்சிமிட்டுங்கள்......
# நீங்கள் தொலைந்துவிடுவீர்கள்!

கண்ணைச்சிமிட்டுங்கள் நீங்கள் தொலைந்துவிடுவீர்கள். இந்த இலவச Luxand blink மென்பொருளானது webcam இன் மூலம் உங்களுக்கு கணினி இயங்கு தளத்தினுள் உட்பிரவேசிப்பதற்கான மேலும் ஒரு பாதுகாப்பை வழங்குகிறது.




User name, மற்றும் password ஐ கொடுத்து webcam ஐ பார்த்துக் கொண்டிருக்கும் போது உங்கள் computer ஐ start செய்ய முடியும்.

இந்த program ஐ install செய்தவுடன் அதன் setup இற்கான ஓர் அறிவுப்படலம் தோன்றும். இது உங்கள் webcam ஐ தன்னிச்சையாகக் கண்டறியும்.

அதற்குப்பின்வரும் திரையை click செய்ததும் இந்த மென்பொருளானது 10 வினாடிக்குள் உங்களுடைய முகத்தை (image) scan செய்து அதன் database இல் பதியப்படும்.





இந்த luxand மென்பொருளானது உங்கள் முகவடிவமைப்புக்களை மிகத்துல்லியமாக உணர்ந்தறியக்கூடியது. உதாரணமாக கண்களில் அணிந்துள்ள கண்ணாடி, முகஉரோமங்கள் போன்றவற்றை மிகத்துல்லியமாக அறிந்துகொள்ளும்.


| | |
|---|---|
| இயங்குதளம் | : Windows OS |
| கோப்பின் அளவு | : 19.5 MB |
| கட்டணம் | : USD 29.95 |
| தேவையானது | : Compatible webcam. |
| Code: | : |

ஒரே பரிசோதனையில் பாவனையாளர் ஒருவரின் print செய்யப்பட்ட colour photo வைக்கூட இலகுவில் இனங்காணப்பட்டது. வெயில் காலத்தில் அணியும் குளிர் கண்ணாடி (sunglasses) இன் ஊடாக 3 வினாடிகளில் அம்முக அமைப்பை scan செய்தது.

இதேயளவு நேரத்தில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட முகத்தையும் கண்டறியக் கூடியதாக இருந்தது. இது webcam இனுடனான உங்கள் computerக்குப் பாதுகாப்பை தருவது மட்டுமல்லாது ஒரு computer ஐ பலபேர் பாவிக்கநேரிடும்போது அதை log-on செய்யவும் உதவுகிறது.

## முப்பரிமாண பிரிண்டர்கள் இல்லாமலே முப்பரிமாணங்களை பெற்றுக்கொள்ள முடியும்





ஸ்கல்ப்டியோ iOS ஆப் (Sculpteo iOS app) ஒரு 3D பிரிண்டர் (printer) இல்லாமலே 3D யை அச்சிடுகிறது.

ஸ்கல்ப்டியோ ஒரு புதிய iOS ஆப்-பை வெளியிட்டுள்ளது. இதன் மூலம் நீங்கள் விலை உயர்ந்த 3D பிரிண்டர்களை விலைக்கு வாங்காமலே 3Dயை அச்சிட முடியும்.

புதிய ஸ்கல்ப்டியோ iOS அப் என்பது அப்பிள் ஸ்டோர்-ரில் கிடைக்கிறது. மற்றும் இது குறித்து CES ல் செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டுள்ளது.

ஸ்கல்ப்டியோ iOS அப்- உடன், நீங்கள் உங்கள் iOS கருவிகளை (iOS devices) பயன்படுத்தி உங்கள் வீட்டிற்கான ஒரு தனித்துவமான விருப்பத்திற்கேற்ற தொகுப்பை உருவாக்க முடியும்.

எப்படியெனில் அதை ஸ்கல்ப்டியோ-வின் 3D-பிரிண்டிங் கிளவுட் என்ஜின் (cloud engine) மூலமாக உயிர்கொடுக்க முடியும். அதாவது ஒரு குவளை அல்லது பூச்சாடியின் மீது அச்சிட்டுக்கொள்ள முடியும்.


இந்த 3D-பிரிண்டிங்-கை முடித்து உங்களுக்கு அனுப்பிவைக்க ஸ்கல்ப்டியோ-வுக்கு 30நாட்கள் தேவைப்படும் என சொல்லப்படுகிறது.

அப்பிள் அப் ஸ்டோர்-ரில் இருந்து ஸ்கல்ப்டியோ iOS அப்-பை இலவசமாக பதிவிறக்கம் செய்ய முடியும். ஆனால் குவளைகள் அல்லது பூச்சாடிகளின் விலைகள் $30, முதல் $300 வரை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய அறிமுகம்



### இழந்த தரவுகளை மீளப்பெறுவதற்கு
# Odin Data Recovery


Odin data recovery professional ஆனது கையில் எடுத்துச்செல்லக்கூடிய harddrive, USB drive, SD card , memory card போன்ற சகல சேமிப்பகங்களுக்கும் மிகவும் முக்கியமான மென்பொருளாகும்.

இதன் மூலம் Recycle bin இலிருந்து அழிக்கப்பட்ட தரவுகள் , harddisk partition செய்யும்போது அழிக்கப்பட்ட தரவுகள், மற்றும் virus மூலம் அழிக்கப்பட்ட தரவுகள் யாவற்றையும் மீளப்பெற்றுத்தர உதவுகிறது.

தொலைந்து போன கோப்புக்களைக்கூட திரும்பப்பெற முடியும். மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு இந்த இலவச Odin Data Recovery Professional மென்பொருளை பயன்படுத்தி நாம் இழந்த பெறுமதிமிக்க தரவுகளை மீளப் பெறமுடியும்.

| | |
|---|---|
| **இயங்குதளம்** | : Windows All |
| **கோப்பின் அளவு** | : 733 KB |
| **கட்டணம்** | : USD 49.95 |
| **தேவையானது** | : 1GHz CPU |
| **Code:** | : KS12-06 |

## புதிய அறிமுகம்



# Password Age visualizer
### Password ன் வயது என்ன?

உங்கள் கடவுச்சொல்லின் (Password) வயதை கற்பனை செய்து பாருங்கள் உங்களுக்குத் தெரியுமா? உங்களுடைய password ஐ அடிக்கடி மாற்றவேண்டும் என்று


Firefox இன் புதிய வடிவமாக password age visualizer எனும் மென்பொருளானது உங்களுடைய password ஐ நீங்கள் எவ்வளவு காலமாக உபயோகிக்கிறீர்கள் , எவற்றை நீங்கள் மாற்றவேண்டும் என்பதை அறியத்தருகிறது.

நீங்கள் கொடுத்துள்ள password ஐ இது நிரல்படுத்திக் காட்டும். இதில் 200 நாட்கள் பழமை வாய்ந்தவற்றை சிவப்பு நிறத்தால் குறித்துக்காட்டும்.

இதை மாற்றும் போதும் மற்றும் password manager ஐ update செய்யும்போதும் அதன் bar திரும்பவும் நீல நிறத்தில் மாற்றமடையும்.

| | |
|---|---|
| **இயங்குதளம்** | : Windows All |
| **கோப்பின் அளவு** | : 275 KB |
| **கட்டணம்** | : Mozilla Public License |
| **தேவையானது** | : Firefox 10.0 - 11 |
| **Code:** | : KS12-07 |

## புதிய அறிமுகம்



# Fresh web suction

இந்த fresh web suction எனும் மென்பொருளானது webpage களை தரவிறக்கம் (Download) செய்து நீங்கள் offlineல் இருந்து கொண்டு அவற்றைப் பார்க்க உதவுகிறது. இதன் மூலம் Internet இற்கான கட்டணத்தை நீங்கள் குறைக்க முடியும்.

இதன் உபயோகப்படிமுறைகள் மிக இலகுவானது, நீங்களே எங்கேயாவது போக வேண்டியிருந்தால், இந்த மென்பொருளுடாக இணைய address ஐ type செய்து அதனை தரவிறக்கம் செய்ய விட்டுவிடுங்கள்.


இது ஏறத்தாழ 50 file களை உங்கள் வன்தட்டிற்கு ( hard drive ) பதிவிறக்கம் செய்கிறது. அதாவது உங்கள் Internet speed எவ்வாறு இருப்பினும் இதன் மூலம் நீங்கள் webpage களை இலகுவாகத் தரவிறக்கம் செய்து பார்வையிடமுடியும்.

| | |
|---|---|
| **இயங்குதளம்** | : Windows All |
| **கோப்பின் அளவு** | : 1 MB |
| **கட்டணம்** | : Freeware / $0 |
| **தேவையானது** | : Internet connection |
| **Code:** | : KS12-08 |

**மென்பொருள்களை நிறுவுவதை எளிதாக்குகிறது இந்த சிறிய மென்பொருள்**

இந்த App Snap application ஆனது software installation ஐ எளிதாக்குகிறது. இந்த மென்பொருள் தன்னிச்சையாகவே புதிய version களைக் கண்டுபிடித்து அதனை download செய்கிறது. இது Windows இற்காகவே உருவாக்கப்பட்டதாகும்.

Code: KS12-09



**இணையதள சேமிப்பகத்திலிருந்து...**


**இங்கு ஆய்வுசெய்யப்படும் மென்பொருட்களை www.mydrive.ch எனும் இணைய தள சேமிப்பகத்தினுள் இருந்து எமது வாசகர்கள் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.**

*இணையதள முகவரி : www.mydrive.ch*
*Username : kalam @kalamsoftware*
*Password: kalamuser*
*சஞ்சிகையின் வெளியீட்டினை தெரிவுசெய்தபின் நீங்கள் விரும்பும் மென்பொருளின் Code இனை தெரிவுசெய்து பதிவிறக்கிக் கொள்ளுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய அறிமுகம்




## Smilla Enlarger

Opensource மென்பொருளான smilla Enlarge ஆனது உங்கள் digital photo களை சிறந்த தரத்துடன் பெரிதாக்க உதவுகிறது.
முழுமையான படத்தையோ அல்லது படத்தின் ஒரு பகுதியையோ எந்தவொரு பாதிப்பும் இன்றி மாற்றுகிறது. இந்த மென்பொருளானது குறைந்த resolution இல் உள்ள படங்களை (image)ஐ கூடியளவு resolution இற்கு மாற்றித்தருகிறது.

உங்கள் புகைப்படத்தின் ஒரு பகுதியை அதே அல்லது அதற்குக்கூடிய resolution இல் உயர்தரத்தில் பெரிதாக்க முடியும். இதன் மூலம் உங்கள் புகைப்படத்தை உடன் Preview செய்து பார்க்கவும் முடியும்.

| | |
|---|---|
| இயங்குதளம் | : Windows Vista |
| கோப்பின் அளவு | : 6.6 MB |
| கட்டணம் | : $0 |
| தேவையானது | : |
| Code: | : KS12-09 |

புதிய அறிமுகம்




## Avast anti virus

வர்த்தக ரீதியற்ற பாவனையாளர்களுக்காக இலவசமாக அமைந்த Anti virus மென் பொருள் Avast ஆகும். இதிலுள்ள scanner ஆனது உள்வரும், வெளிச்செல்லும் உங்கள் மின்னஞ்சல்களை scan செய்து virus களைக் கண்டுபிடிக்கிறது. இந்த Antivirus windows explorer இன் right click menu வில் இணைக்கப்பட்டுள்ளது.

அத்தடன் உங்கள் computer பாவனையில் இல்லாத போது அதிலுள்ள பிரத்தியோக screen sever ஆனது system த்தை scan செய்கிறது. Update களானது தரவிறக்கம் மூலம் நடைபெறுகிறது.
30 நாட்கள் நீங்கள் பரீட்சித்துப்பார்க்க இதன் home page இல் நீங்கள் பதிவு செய்யும் போது இலவச Activation-key மின்னஞ்சல் மூலம் உங்களுக்கு கிடைக்கும்.

| | |
|---|---|
| இயங்குதளம் | : XP / Vista / 2008 / Vista64 / 7 |
| கோப்பின் அளவு | : 71.2 MB |
| கட்டணம் | : $0 |
| தேவையானது | : 200 MB hard disk space |
| Code: | : KS12-10 |




## WiFi-Direct

WiFi-Direct என்கிற புதிய தொழில்நுட்பம் தற்பொழுது எல்லோராலும் அதிகமாக பேசக்கூடிய ஒரு தொழில் நுட்பமாக அமைந்துள்ளது. ஆனால் மிகச்சரியாக WiFi-Direct தொழில்நுட்பம் என்றால் என்ன?

அடிப்படையில் பல கருவிகளை ஒன்றோடு ஒன்று Router இல்லாமல் இணைக்கக்கூடிய கம்பியில்லாத தொழில் நுட்பம். இதன் மூலம் ஒரு கருவியில் இருந்து கம்பி இல்லாமல் அச்சடிக்க உதவுகிறது. அல்லது இரண்டு கருவிகளை ஒன்றோடு ஒன்று இயங்கச் செய்ய கூடியது.



இந்த புதிய தொழில்நுட்பம் தற்போதைய செயல் முறையில் இரண்டில் ஒரு கருவியில் மட்டும் WiFi Direct இருந்தால் போதுமானது. ஆனால் வழக்கமாக இதற்கு முன் வரையில் இரண்டு கருவிகளும் WiFi Direct ஆக இருந்தால் மட்டுமே தகுதியாக அமைந்தது.

இந்த புதிய தொழில்நுட்பம் ஆனது Bluetooth இணைப்பை போன்றது. ஆனால் அதனை காட்டிலும் மிக வலு-மையானதாகவும் சிறந்த இணைப்பாகவும் உள்ளது. மேலும் எளிமையாக சென்றடைய உதவுகிறது.இந்த புதிய தொழில்நுட்பத்தை பற்றி இப்போது காணலாம்.




இந்த WiFi Direct வழக்கமாக உபயோகிக்கின்ற கம்பியில்லாத தொழில் நுட்பத்தை காட்டிலும் அதிகமாக சென்றடையவில்லை.

( இதன் தொடர்ச்சி 16ம் பக்கத்தில் )

புதிய அறிமுகம்



## கணினியில் அடுத்தவர்களின் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கான அசத்தலான மென்பொருள்

உங்களது கணினியை வேறு நபர்கள் உபயோகித்தால், அவர்களின் செயற்பாடுகள் குறித்து எளிதில் அறிந்து கொள்ளலாம்.இதற்கு Key logger என்ற மென்பொருள் பயன்படுகிறது. கணினியில் ஒருவர் என்னென்ன செய்கிறாரோ என அனைத்தையும் அறிந்து கொள்ளலாம். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை கண்காணிப்பதற்கு இந்த மென்பொருளை உபயோகிக்கலாம்.இந்த மென்பொருள் குறிப்பிட்ட ஒரு நேரத்திற்கு ஒருமுறை கணி-னியின் செயற்பாடுகளை ஸ்கிறீன்ஷொட் எடுத்து வைத்திருக்கும். அத்துடன் Chat History, History Log file என்பவற்றையும் சேமித்து வைத்திருக்கும்.
இதன் சிறப்பம்சங்கள்: (தொடர்ச்சி 18ம் பக்கத்தில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# USB-Stick/Pen Drive பாதுகாப்பு:

## Pendrive தொலைந்து போவதற்கு முன் நீங்கள் செய்யவேண்டியது என்ன?




USB flash copy 1.5 மென்பொருளானது கணினியில் pendrive னை இணைத்ததும் அதனுள் உள்ள தகவல்கள் அனைத்தையும் கணினியில் நாம் குறிப்பிடும் இடத்தினுள் தன்னிச்சையாகவே backup செய்து வைக்க வழிவகுக்கிறது.

Pendrive னால் எழும் முக்கிய பிரச்சினை என்னவெனில் இதனை கையில் எடுத்து செல்லக்கூடிய மாதிரி இருப்பதால் அது கணினியில் எப்போதும் இணைக்கப் பட்டிருப்பதில்லை. அதுமட்டுமன்றி backup மென்பொருளை பயன்படுத்தி அதனுள் உள்ள தகவல்களை எடுத்து வைக்கவும் முடியாது.


சில வேளை எமது pendrive தொலைந்து போனாலோ அல்லது திருடப்பட்டாலோ, அதனுள் பதிவு செய்யப்பட்ட கோப்புக்கள் மற்றும் ஆவணங்களை நாம் இழக்க நேரிடும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் USB flash copy எனும் மென்பொருள் இதற்கான தீர்வினை எமக்கு வழங்குகின்றது.

இந்த மென்பொருளானது கணினியின் பின்னணியில் இயங்கியவாறே, USB முனையத்தில் ஏதேனும் pendrive கள் இணைக்கப்படுகிறதா? என்பதனை அவதானித்துக் கொண்டே இருக்கும். அவ்வாறு Pendrive கள் இணைக்கப்படும் பொழுது அதில் உள்ள தகவல்களை தன்னிச்சையாகவே கணினியில் குறிப்பிட்ட இடத்தில் பிரதி செய்ய ஆரம்பிக்கிறது.

Pendrive கணினியில் இணைக்கப் பட்டிருக்கும் பொழுதுUSB flash player ஆனது கணினியில் இணைக்கப்பட்ட pendrive னுள் உள்ள தகவல்களை ஒவ்வொரு 60 நிமிடங்களுக்கு ஒரு தடவை ஆராய்கிறது. அதனுள் ஏதேனும் புதிய தகவல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதா? அல்லது அதனுள் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதா? என்பதையும் ஆராய்ந்து அவ்வாறு ஏதேனும் நடைபெற்றிருந்தால் அவற்றினை தன்னிச்சையாகவே அந்த மாற்றங்களை கணினியின் வன் தட்டினுள் பதிவு செய்கிறது.

**அவதானம்** ⚠

***தன்னிச்சையாகவே தகவல்கள் pendriveல் இருந்து வன்தட்டு (HDD)க்கு பிரதி செய்யப்படுகின்ற போதிலும் கணினியில் இருந்து அதனை அகற்றுவதற்கு முன் pendrive ல் உள்ள தகவல்கள் வன் தட்டினுள் முழுமையாக பதிவு செய்யப்பட்டுள்ளதா? என்பதை நீங்கள் manual ஆகவே உறுதிப்படுத்திக்கொள்வது நல்லது.***




USB flash copy ஆனது இரண்டு வகைகளில் வெளிவருகிறது. அதில் முதலாவது வகை basic mode ஆகும். இந்த மென்பொருள் முற்றிலும் இலவசமானது. இரண்டாவது வெளியீடானது பாதுகாப்பான (Stealth-mode) ஆகும். இதன் விலை ஏறத்தாழ 30யூரோக்கள். இவை இரண் டிற்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன வெனில் இலவச மென்பொருளை பயன்படுத்தும் பொழுது pendriveல் இருந்து தகவல்கள் வன்தட்டுக்கு பிரதி செய்யப்படும் பொழுது அங்கு நடை பெறும் செயற்பாடு என்ன என்பதை திரையில் தோன்றச் செய்யும்.

## USB-Flash Copy 1.5

மற்றைய வெளியீடான பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளும் மென்பொருளானது இதற்கு எதிர்மாறானது ஆகும். அதாவது pendriveல் இருந்து வன்தட்டுக்கு தகவல்கள் பதிவு செய்யும் பொழுது கணினித்திரையில் தோன்றாது மறைத்து விடும். அங்கு என்ன நடைபெறுகிறது என்பது மற்றவர்களுக்கு தெரியாமல் போய்விடும்.இதனூடாக மற்றவர்களின் pendrive ல் இருந்து தகவல்களை திருடவும் முடியும்.

**சுருக்கமாக...**

- USB flash copy ஆனது மிகவும் இலகுவான முறையில் pendriveவிருந்து வன்தட்டுக்கு தகவல்களை தன்னிச்சையாகவே பிரதிசெய்கிறது.
- Pendrive தொலைந்தாலோ அல்லது திருடப்பட்டாலோ அதனுள் இறுதி வரை பிரதி செய்யப்பட்ட விடயங்களை கணினியின் வன்தட்டிலிருந்து மீளப் பெற்றுக்கொள்ள முடியும்.
- பல்வேறுபட்ட pendrive களை கண்டுபிடித்து அதற்கேற்ற வகையில் தகவல்களை உறுதிப்படுத்துகிறது.
- சீரியல் இலக்கங்களை தெரிந்து கொண்டு ஒவ்வொரு pendrive க்கும் வழங்கப்பட்ட விதிமுறைகளுக்கு ஏற்ற வகையில் செயற்படுத்துகின்றது.

இதனை எவ்வாறு செயற்படுத்துவது என்று பார்ப்போம். (இதன் தொடர்ச்சி 14ம் பக்கத்தில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செய்முறை :**

USB-Flash copy ஆனது உடனடி செயற்பாட்டு copy ஆகும். இதனுடைய அர்த்தம் என்னவென்றால் இந்த மென்பொருளை Installationசெய்ய தேவையில்லை. windows explorer இனைத் திறந்து “ C ” drive இனுள் USB Flash copy எனும் பெயரில் புதிய folder ஒன்றை உருவாக்குங்கள்.

அதன் பின் எமது இணையத்தள சேமிப்பகத்தில் இருந்து மென்பொருளை download செய்து USB Flash copy.exe எனும் file ஐ நீங்கள் உருவாக்கிய புதிய folder இனுள் copy செய்து விடுங்கள். இறுதியில் desktop இல் இதற்கான ஒரு shortcut ஐயும் உருவாக்கிவிடுங்கள். Desktop இல் இருந்து இரண்டு click களுடன் இதனை வேகமாக திறக்கக்கூடியதாக இருக்கும்.


Desktop இல் shortcut ஐ உருவாக்குவதற்கு நீங்கள் உருவாக்கிய USB flash copy எனும் folder ஐ திறந்து USB flash copy.exe எனும் file தெரிவுசெய்து அதன்மேல் mouse இன் right button ஐ click செய்து அதில் தோன்றும் menu வில் sent to desktop இல் click செய்வதன் மூலம் இந்த மென்பொருளுக்கான shortcut ஐ உருவாக்கிவிடலாம்.

இவ்வாறு செய்வதன் மூலம் உங்கள் desktop இல் இந்த மென்பொருளுக்குரிய symbol ஒன்று புதிதாக தோன்றும்.

**மென்பொருளை இயக்குதல் :**

Desktop இல் புதிதாக வந்த symbol மீது இருதடவை click செய்து USB flash copy மென்பொருளை இயக்குங்கள். (இவ்வாறு செய்வதன் மூலம் windows சில பாதுகாப்பு எச்சரிக்கைகளை வழங்கலாம்.) USB Flash copy மென்பொருள் இயங்கிய உடனும் சிறுப்பிக்கப்பட்டுவிடும்.

இதன் அர்த்தம் இந்த மென்பொருளை திறக்கும்போது மற்றைய program கள் போன்று திரைகள் ஏதும் தோன்றாது. ஆனால் இந்த மென்பொருள் windows இன் பின்னணியில் இயங்கத்தொடங்கிவிடும். எப்போது நீங்கள் ஒரு pendrive ஐ USB முனையத்தில் இணைக்கிறீர்களோ அப்போதுதான் இந்த மென்பொருளுக்குரிய திரை தோன்றும்.




**வேகமான பாதுகாப்பு :**

Pendrive ஒன்றினை USB முனையத்தில் இணையுங்கள். windows இயங்குதளமானது அந்த pendrive க்குரிய driver ஐ load செய்ததும் USB flash copy மென்பொருளுக்கான திரை உடனும் தோன்றும். புதிய pendrive ஒன்றை கண்டுபிடித்துவிட்டதான செய்தியை உங்களுக்கு அறிவிக்கும். அந்த pendrive இற்குரிய செயற்பாடுகள் எவ்வாறு இருக்கவேண்டும் என்ற தெரிவுகளை தெரிவு செய்யக்கூடிய வகையில் திரை ஒன்றை தோற்றுவிக்கும். இதில் வேகமான அதே நேரத்தில் எந்த வித குழப்பமும் இல்லாமல் pendrive இல் உள்ள விடயங்களை பாதுகாக்க வேண்டுமாயின் use default profile என்பதை தெரிவு செய்யுங்கள். இதன் போது USB flash copy மென்பொருளானது pendrive இல் உள்ள அனைத்து தரவுகளையும் தன்னிச்சையாக இந்த "My Documents\Removable Media Backups"எனும் folder இனுள் பதிவு செய்து விடும்.

**தனித்தனியான பாதுகாப்பு :**

Pendrive இல் உள்ள தகவல்களை யாராவது தாங்கள் விரும்பும் folder இனுள் பதிவு செய்ய நினைத்தால் அவர்கள் புதிய profile ஒன்றை உருவாக்கவேண்டும். இந்த profile ஆனது விசேடமானது.

ஒவ்வொரு வேறுபட்ட தனித்தனியான pendrive களுக்கும் வித்தியாசமான profile களை தெரிவு செய்யலாம்.

ஒவ்வொரு தடவையும் வித்தியாசமான pendrive களை USB முனையில் இணைக்கும் போது அதனுடைய serial இலக்கங்களை கண்டுபிடித்து அதற்கான profile எவ்வாறு உருவாக்கப்பட்டதோ ( செயல்படு முறை) அதற்கேற்ற வகையில் தன்னிச்சையாகவே அந்த pendrive இல் உள்ள தகவல்கள் தெரிவுசெய்யப்பட்ட folder இனுள் பதிவு செய்யப்பட்டுவிடும்.

புதிதாக ஒரு pendrive ஐ இணைத்தால் மட்டுமே புதிய pendrive கண்டுபிடித்த செய்தியையும் அதற்கான profile ஐ உருவாக்கவேண்டிய தெரிவுகளையும் தோன்றச்செய்யும்.

| | | |
|---|---|---|
| இயங்குதளம் | : | Windows XP / Vista / 7 |
| கோப்பின் அளவு | | 254 KB |
| Code: | : | KS12-11 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் இலவசமாக இணையத்தளம் ஒன்றை உருவாக்கவேண்டுமா ?






**நீங்கள் எப்பொழுதாவது இலவச இணையதளமொன்றை உருவாக்க முயற்சித்துள்ளீர்களா? ஆனால் எங்கிருந்து அதை ஆரம்பிப்பது?**

இப்போது நீங்கள் இது குறித்து அறிய முடியும். தற்போது நீங்கள் uCoz: Website Creation (iBook) என்ற இணைய உத வியுடன் இதை வடிவமைத்துக் கொள்ளலாம். இதனை Apple iTunes களஞ்சியங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

uCoz: Website Creation ஓர் iBook ஆகும். (eBookபோன்றது) இது இணையதள விருத்தி, இணையதள வியாபாரம் ஆகிய செய்திகளுடன் ஆரம்பிக்கிறது.


புதியவர்கள் இத்தளத்தின் ஊடாக நீண்ட பயணத்தை மேற்கொள்ளலாம். அதேசமயம் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் போன்றோர் அநேக நன்மைகளை பெற முடியும். வியாபாரிகள் தம் வியாபார நடவடிக்கையை விருத்தி செய்யவும் இதனைப் பயன்படுத்த முடியும்.

வடிவமைத்தல், கட்டுமானம், இணையதள ஒப்புனர் சேவையை வழங்குதல் ஆகியன இன்றிருக்கும் நிலைமையை போல, முன்பு இலகுவாக இருக்கவில்லை. uCoz இணையத் தளமானது பாவனையாளர்களுக்கு இணையத்தள வடிவமைப்பில் உதவி நல்குவது மாத்திரமல்லாமல் எல்லையற்ற இணைய ஒப்புனர் சேவைகளையும் நல்குகிறது.

மக்கள் இலவச இணையத்தள ஒப்புனர் சேவையை பயன்படுத்தும் போது அவர்கள் அதனை வழங்கும் நிறுனத்தின் ஆதரவையும், சேவைகளையும் பற்றிக் கவலையடைகிறார்கள். ஆனால் நீங்கள் uCoz தளத்தை கொண்டிருந்தால் கவலையடையத் தேவையில்லை.

**http://www.ucoz.com/**



# வேகமாகவும் பாதுகாப்பாகவும் உங்கள் தரவுகளை ஒத்திசைக்க.....

**வேகமாகவும் பாதுகாப்பாகவும் உங்கள் தரவுகளை ஒத்திசையச் செய்யுங்கள்.**


Team Drive இன் உதவியுடன், பல்வேறு கணினிகளுக்கிடையே, உங்கள் தரவுகளை, இலகுவாகவும் தன்னியக்கமாகவும் ஒத்திசையச் செய்யலாம். எந்த வகையான இசை, விம்பங்கள், ஆவணங்கள் அல்லது கோப்புகளை இதன் உதவியுடன் நண்பர்கள், குடும்பத்தினர் அல்லது சக பணியாளர்களுடன் பகிர்ந்து கொள்வது என்பது குழந்தைப்பிள்ளை விளையாட்டுப் போல இருக்கும்.

Online அல்லது Offline கூட்டு முயற்சியாக ஆவணங்கள் மீது வேலை செய்வதற்கென, இலகுவாக அணிகளை உருவாக்குவதை Team Drive சாத்தியமாக்கியிருக்கிறது.

ஒன்றிணைக்கப்பட்ட மாற்றுரு முகாமைத்துவ அமைப்பின் மூலம் அனைத்து ஆவணங்கள் மற்றும் கோவை-களில் செய்யப்படும் மாற்றங்கள் தன்னியக்கமாகப் பதிவு செய்யப்படும். எனவே ஒவ்வொரு மாற்றத்தையும் தடம் தொடர முடியும். உங்களுடைய தரவின் பாதுகாப்பும் அந்தரங்கத் தன்மையும் Team Drive இன் ஆகக்கூடிய முந்துரிமை பெற்றவையாக இருக்கின்றன. Team-Drive உங்கள் தரவுகளை அனுப்பும் முன்னதாக, உங்கள் கணினியில் வைத்தே அவற்றை மறையாக்கம் செய்யும் (AES 256).

உங்களுடைய தரவுகளை யார் யார் பெறலாம் என்பதை நீங்கள் மட்டுமே முடிவு செய்வீர்கள். ULD இனுடைய அந்தரங்கத் தரவு பாதுகாப்பு முத்திரை Team Drive இற்கு வழங்கப் பட்டிருக்கிறது.

உங்களுடைய தரவுகளை ஒத்திசைய செய்யவும் பாதுகாக்கவுமென, இரண்டு மாற்றீட்டு தெரிவுகளை Team Drive தருகிறது. ஒன்றில், நீங்கள் Team Drive வழங்கிகளைப் பயன்படுத்தலாம். அல்லது நீங்கள் உங்களுடைய சொந்த வழங்கி களைப் (server) பயன் படுத்தலாம்.




**http://www.teamdrive.com/**


- உங்களுடைய அனைத்து தரவுகளினதும் மறையாக்கம் செய்யப்பட்ட பின்னாதரவு பிரதியொன்று Team Drive இன் வழங்கி ஒன்றில் தன்னியக்கமாகச் சேமிக்கப்படும்.
- நீங்கள் உங்களுடைய கணினியை இழந்து போனால் அல்லது அது செயலிழந்து போனால் நீங்கள் உங்கள் தரவுகளை இலகுவாக மீளப்பெறமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவர்களுக்கான அட்டவணை மென்பொருள்

**ஊழியர்கள் அல்லது சக பணியாளர்களுடன் நாள்காட்டியைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய மென்பொருள்**



பணிக்குழு மருத்துவ அட்டவணையின் ஒரு ஆற்றல் மிக்க பயன்பாடு சரியான நேரத்தில் நாள்காட்டி தகவல்களைப் பகிர்ந்துகொள்ள உதவுகிறது. இந்த எளிதான திட்டமிட்ட மென்பொருள் இதற்குப் பொருத்தமானதாக உள்ளது.

நீங்கள் விரைவில் முழு ஊழியர்களுக்குத் தேவையான அட்டவணையை உருவாக்க இது உதவும். நினைத்த நேரத்தில் உங்களுக்குத்தேவையான தேதிக்குச் சென்று வரவேற்பு மணி மற்றும் தரப்புகளைத் திருத்த முடியும். நீங்கள் ஒரு விரிவான நாள் அட்டவணையை ஒரு சுருக்கமான காலாண்டில் நேரம் இடைவெளியில் மாற்ற மிகவும் பொருத்தமான அட்டவணையாக இருக்கிறது.

நீங்கள் தேர்வு செய்ய வேண்டியது செங்குத்துத் தேர்வு அல்லது கிடைமட்ட காலவரிசை மற்றும் 12 அல்லது 24 மணி நேரம் வடிவமாகும்.


மருத்துவ அட்டவணை சேமிக்கும் அனைத்து தகவல்களையும் கடவுச் சொல்லைக் கொண்டு அங்கீகாரமற்ற அணுகலிடமிருந்து தவிர்க்க முடியும்.

## WiFi Direct..

(12ம் பக்க தொடர்..)

ஆதலால் இந்த WiFi Direct தொழில்நுட்பம் அதனின் அனுபவத்தை உயர்த்துவதற்கே தவிர வழக்கமாக உபயோகின்ற கம்பியில்லாத தொழில்நுட்பத்திற்கு பதிலானது அல்ல.

மேலும் WiFi Direct கருவிகளை ஒழுங்குபடுத்தி கட்டுபடுத்துவதற்கு கடினமானது. ஆதலால் WiFi Direct கருவிகளை பாதுகாப்பு சம்பந்தமான அடிப்படையில் இணைக்கப்படுகிறது.




இறுதியாக WiFi Direct சிறிய கருவிகளுக்கு கம்பியில்லாத் இணைப்பாகவும் வீட்டு சாதனங்களுக்கு ஒரு வரவேற்ககூடிய கருவியாகவும் மேலும் இந்த தொழில்நுட்பம் Netgear NC போன்ற tech giants கருவிகளில் ஏற்கனவே அமைந்துள்ளது. மேலும் இந்த தொழில்நுட்பம் மிக எளிதான கருவியாக விரைவில் பட்டியல் இடப்படும்.

## பேனா வடிவிலான Mouse



ஒவ்வொரு இலத்திரனியல் உற்பத்தியாளர்களும் தங்கள் வியாபாரப் பொருட்களையும், ஆற்றலையும் வெளிக்காட்டுவதற்கு பல்வேறு வகைகளில் முயற்சிகளை மேற்கொள்கின்றனர். அதற்கு சிந்தனை முக்கியமாக விளங்குகிறது.



இந்த சிந்தனை வடிவில் உருவானதுதான் பேனா வடிவிலான mouse. இதனை ஒரு பேனாவாகவும் தேவையேற்படும்போது mouse ஆகவும் பயன்படுத்தலாம். wireless இனாலான Laser sensor ஐக் கொண்ட இந்த பேனா mouse ஆனது penclic நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# IPV6

**இணையத்தின் அடுத்த பரிணாமமான IPV6 அறிமுகம்**

இணையத்தின் புதிய தொழிநுட்பமான IPV6(Internet Protocol Version 6) அறிமுகம் செய்யப்படுகிறது.

ஒவ்வொரு வீட்டிற்கும், அலுவலகத்திற்கும் எப்படி ஒரு விலாசம் இருக்குமோ, அது போன்று தான் ஒவ்வொரு இணையத்திற்கும் ஒரு விலாசம் உண்டு. இதனை IP Address என்று அழைப்பர்.

இதன் மூலம் நீங்கள் டைப் செய்யும் இணைய முகவரி சரியான சேர்வருக்கு (Server)அழைத்துச் செல்லப்படும்.

உதாரணத்திற்கு நீங்கள் www.facebook.com என்று உங்கள் கணினியில் டைப் செய்தால், உடனே இந்த இணைய முகவரி சரியான சேர்வருக்கு அழைத்து செல்லப்படும். இதற்கு உதவுவது தான் இந்த இன்டர்நெட் புரோட்டோகால்.

இதுவரையிலும் இதற்கு நாம் IPV4-ஐ தான் பயன்படுத்திக் கொண்டிருந்தோம். இது 4-32 Bit Techonology, 430 Unique Address மட்டுமே இருக்க முடியும்.

உதாரணத்திற்கு:
IPV4 – முகவரி, 70.33.247.68.

எனவே IPV4 முடிவடையும் தருவாயில் உள்ளதால், இதனை கருத்தில் கொண்டு IETF(Internet Engineering Task Force), புதுவித அம்சங்களுடன் கூடிய IPV6-ஐ அறிமுகம் செய்ய உள்ளது.

இது 128 Bit Techonology, பல லட்சக் கணக்கில் Unique Address களை பெற முடியும். மேலும் IPV4-ல் இருந்த முக்கிய பிரச்சனையான NAT(Network Address Translation) இதில் இருக்காது. இதனால் பல நபர்கள் ஒரே IP Address-ஐ பயன்படுத்த முடியும்.

உதாரணத்திற்கு: IPV6-முகவரி
2001:db8:ffff:1:201:02ff:fe03:0405

கீழே உள்ள லிங் ஊடாக உங்களது நெட்வெர்க் IPV6 க்கு தயாரா என்பதை தெரிந்து கொள்ளலாம்.


**http://test-ipv6.com/**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Zbar


# ஒரு கணினிக்கு பல திரைகள் பல்வேறு அலங்காரங்களில்



காலப்போக்கில் windows ஆனது பல monitor ( கணினித்திரை )களைக் கையாளுவதில் முன்னேற்றம் கண்டுள்ளது.இருப்பினும் windows 7 இயங்கு தளத்தினால் செய்யமுடியாத சில அடிப்படை விடயங்கள் உள்ளது. Task bar ஐ ஒவ்வொரு monitor இலும் அமைக்கமுடியாமை மற்றும் வித்தியாசமான wallpaper ( திரை அலங்காரம் )களை ஒவ்வொரு monitor இலும் செய்யமுடியாமை ஆகும்.

இந்த செயற்பாட்டுக்கான மூன்றாம் தரப்பு உதவி தேவைப்படுவோருக்கு அதி திறமையான ( வியாபார ரீதியான ) Display fusion அல்லது ultra mon எனும் கருவி தேவைப்படும்.

இருப்பினும் zbar எனும் மிகச்சிறிய இலவசமான மென்பொருளைப் பாவிப்பதன் மூலம் ஒவ்வொரு கணினிக்கும் திரையலங்காரம் ( wallpaper ) ,மற்றும் task bar ஆகியவற்றை அமைத்துக் கொள்ளலாம்.




Zbar குறுகிய செயற்பாட்டை உடையது. திரையலங்காரம், task bar எனும் இரண்டும் தீர்க்கமான செயற்பாடுகளை வழங்குகிறது.

| | |
|---|---|
| இயங்குதளம் | : Windows XP / Vista / 7 |
| கோப்பின் அளவு | : 122 KB |
| கட்டணம் | : **Freeware / $0** |
| தேவையானது | : |
| Code: | : KS12-12 |


# அச்சடிக்கப்பட்ட எழுத்துக்களை மீண்டும் அழிக்கக்கூடிய அச்சு இயந்திரம்.

<u>தாள்களையும், மைகளையும் சேகரிக்கும் புதிய தொழில்நுட்பம் Toshiba வினால் அறிமுகம்</u>




**Toshiba வினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த அச்சியந்திரமானது (Printer) அச்சுத்தாள்களை சேகரிக்கும் வகையில் அமைந்துள்ளது. அதாவது சாதாரண அச்சுத்தாளில் அச்சடிக்கப்பட்ட எழுத்துக்களை அழிக்கக்கூடியதாக உள்ளது.**

இதிலுள்ள toner இன் நிறமானது வெப்பமடையும் போது அதன் நிறத்தை இழக்கக்கூடியது.



அத்துடன் இதனோடு ஒத்துப் போகும் எந்தவொரு இயந்திரத்தினுடனும் இது சேரக்கூடியது.

ஒரு தாளை ஆகக் குறைந்தது 5 தரம் நீங்கள் print செய்ய உபயோகிக்கலாம்.

இது அநேகமாக வரும் குளிர்காலத்தில் ஐரோப்பாவில் சந்தைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கணினியில் அடுத்தவர்களின் ...**

(12ம் பக்க தொடர்)

**Record Each Keystroke:**
கீபோர்டில் அழுத்தப்படும் அத்தனை எழுத்துக்களையும் பதிவு செய்து வைக்கிறது.

**Instant Chat Messages Recording:**
பேஸ்புக், Google Talk, Yahoo Messenger போன்றவற்றில் நீங்கள் சாட் செய்தவற்றை அப்படியே பதிவு செய்கிறது.

**Track Emails:**
கணினியில் இருந்து அனுப்பப்படும், மற்றும் பெறப்படும் மின்னஞ்சல்களைக் கண்காணிக்கிறது.

**Monitor Websites:**
கணினியில் இருந்து உலாவும் இணையத்தளங்களை கண்காணித்து பதிவு செய்து வைக்கிறது.

**Review Every Downloaded File:**
தரவிறக்கம் செய்யும் ஒவ்வொரு File பற்றிய தகவல்களையும் பதிவு செய்கிறது.

**இந்த மென்பொருளை பதிவிறக்கம் செய்வதற்கு:**

**http://keyloggerdownload.net/**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றே அமைத்திடுங்கள் உங்கள் கனவு இணையத் தளத்தினை!

உலகத்தரம் வாய்ந்த சேவை யாழ் மண்ணிலிருந்து. எமது இணைய வழங்கிகள் [Server] அமெரிக்காவின் உலகத்தரம் வாய்ந்த தரவு மையங்களில் [Data Center] இருந்து இயங்குகின்றன. நியாயமான கட்டணத்துடன் உங்கள் தேவைக் கேற்ப தெரிவு செய்யும் வசதி. இணையத்தளப் பெயர் பதிவு, இணையத்தள வடிவமைப்பு அனைத்தும் ஒரே இடத்தில். தமிழ் மொழி மூலமான தொழில்நுட்ப உதவி.

**Webster Networks**
**214, Yarl-manipay Road, Jaffna**

.com .net .org .mobi .tv .Asia .Me .tel .ca .us .info .BIZ

**WEB HOSTING - BASIC**

500 MB Space
5,000 MB Bandwidth
cPanel Control Panel
Host UNLIMITED Domains
50+ Free Scripts

**WEB HOSTING - PRO**

2,000 MB Space
20,000 MB Bandwidth
cPanel Control Panel
Host UNLIMITED Domains
50+ Free Scripts

**WEB HOSTING - ULTRA**

10 GB Space
UNLIMITED Bandwidth
cPanel Control Panel
Host UNLIMITED Domains
50+ Free Scripts

**WEB HOSTING - ULTIMATE**

UNLIMITED Space
UNLIMITED Bandwidth
cPanel Control Panel
Host UNLIMITED Domains
50+ Free Scripts

**Advanced Web Designing**

- 100% Custom Design
- Flash Animition if Needed
- Free Domain Name - First Year
- Free Web Hosting - First Year
- Satisfaction Guaranteed
- Interactive & Flexible design
- Up to 5 xhtml pages

**$99** Special

webster networks
MAKING DREAMS REALITY

php MySQL cPanel HTML 5

www.websternetworks.lk | support@websternetworks.lk

**0094 21 222 0261**
**0094 779 471 771**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் விருப்பப்படி இணையத்தளங்களை முடக்கவேண்டுமா?




மாபெரும் தகவல் களஞ்சியமாக விளங்கும் இணையமானது பல்வேறு வழிகளில் நன்மை பயக்குகின்றபோதும் சில சந்தர்ப்பங்களில் பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்துவதுண்டு.

இதனால் அவ்வாறான இணையத் தளங்களை நாம் நிரந்தரமாக எமது கணினியில் முடக்குவதற்கு வசதி உண்டு.அதேபோல சில இணையத் தளங்களை குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டும் முடக்கவேண்டிய சந்தர்ப் பங்களும் ஏற்படலாம்.

அதற்கு FocalFilter என்ற மென்பொருள் பெரிதும் பயனுள்ளதாக காணப்படுகின்றது. இந்த மென்பொருளை உங்கள் கணினியில் நிறுவி தரப்பட்டுள்ள படிமுறைகளை பின்பற்றுவதன் மூலம் நீங்கள் விரும்பிய இணையத்தளங்களை குறிப்பிட்ட நேரத்திற்கு முடக்க முடியும்.




இங்குள்ள இணைப்பிற்கு (http://www.focalfilter.com/) சென்று FocalFilter மென்பொருளை தரவிறக்கி உங்கள் கணினியில் நிறுவிக்கொள்க. இந்த மென்பொருள் இயங்குவதற்கு Microsoft'ன் .NET Framework கணினியில் நிறுவப்பட்டிருத்தல் அவசியமாகும்.

- FocalFilterஐ செயற்படுத்தி அதில் காணப்படும் Edit my Site List என்பதை அழுத்தவும்.
- அதன்பின் தோன்றும் விண்டோவில் முடக்குவதற்கு விரும்பும் இணையத் தளங்களின் முகவரிகளை கொடுத்து Save செய்யவும்.
- பின்னர் தோன்றும் விண்டோவில் Block for என்பதற்கு அருகில் காணப்படும் பொப்பப் மெனுவை அழுத்தி நேரத்தை தெரிவு செய்து Block my Site List என்பதை click செய்யவும்.

## Firefox-ல் தானாகவே இணையத் தளங்களைத் திறக்க அட்டவணை


இணையத்தளங்களை தன்னிச்சையாகத் திறப்பதற்கு firefox இன் default installation மூலம் எமக்கு இருவகையான தெரிவுகள் உள்ளன.

முதலாவது தெரிவாக கணினியை ஆரம்பிக்கும்போதோ அல்லது புதிய Tab ஒன்றைத் திறக்கும்போதோ ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட home page களைத் திறப்பதற்கு browser ஐ configure செய்தல். இரண்டாவது தெரிவாக browser ஆரம்பிக்கும் போது முன்னைய browsing session இல் திறத்தல்.

வருடத்தில் ஒரு தடவை அல்லது கிழமைக்கு ஒரு தடவை அல்லது குறிப்பிட்ட ஒரு நாளில் என கிரமமுறையாக இணையத் தளங்களைத் திறப்பதற்கு எந்த வித தெரிவும் இல்லை. Morning coffee extension ஆனது குறிப்பிட்டஓர்நாளில் மட்டும் இணையத் தளங்களைத் திறப்பதற்கு உதவுகிறது. இது இதைத்தவிர வேறெந்த தெரிவுகளுக்கும் இடமளிப்பதில்லை.

இதை ஒத்த extension ஆன my weekly browsing ஆனது morning coffee ஐ விட கூடுதலான அனுகூலங்களைக் கொண்டுள்ளது.

இது கிழமையில் குறிப்பிட்ட ஓர் நாளில் மாதம் அல்லது வருடத்தில் குறிப்பிட்ட திகதியில் மற்றும் குறிப்பிட்ட நேரத்தில் இணையத்தளங்களை அட்டவணைப்படுத்துகிறது




உங்கள் domain registrar அல்லது web hoster இன் இணையத்தளத்தை வருடத்திற்கு ஒரு முறை திறப்பதற்கு add-on ஐ configure செய்யவேண்டும். உதாரணமாக domain ஐ மீளப்புதுப்பிக்கவும், அன்னையர் தினத்தில் (Mothers day) பூக்கடையைத் திறக்கவும் பிறந்த நாளிற்கு முன் online shopping போன்றனவாகும்.

புதிய தளங்களை இணைப்பதற்கு Add New, Add current page, அல்லது Add from bookmarks ஐக் click செய்யவேண்டும். அனைத்துத் தளங்களும் பிரதான முகத்திரையில் நிரல்படுத்தப்பட்டிருக்கும். இதில் நீங்கள் அட்டவணைப்படுத்தப்பட்ட இணையத்தளங்களின் கிழமைநாட்கள் , குறிப்பிட்ட திகதிகள் போன்றவற்றை மாற்றியமைக்கலாம்.

Show option ஐக் click செய்யும்போது இணையத்தளங்களைப் பற்றிய விபரமான menu வைக் காணலாம். இதில் அவற்றைப் பற்றிய விபரம் மற்றும் அவை எப்போது திறக்கப்படுகின்றன என்பதைக் காணக்கூடியதாக இருக்கும். Firefox ஆரம்பிக்கும் போது ஒரு நாளில் குறிப்பிட்ட நேரத்தில்கூட இணையத்தளங்களைத் திறப்பதற்கு அட்டவணைப்படுத்தலாம்.


அட்டவணைப்படுத்தப்படாத இணையத்தளங்கள்catchup எனும் அம்சத்தில் உள்ளடக்கப்பட்டுவிடும். இதனால் நீங்கள் எந்த இணையத்தளத்தையும் தவறவிட வாய்ப்பில்லை. Weekly browsing schedule ஐ Tools menu அல்லது addon-barஇல் configurationசெய்யமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மை நெருங்குகிறது Google..


*Google எமது உடலை நெருங்குகிறது. Google-கண்ணாடி எல்லாவற்றையும் சொல்லுகிறது. அப்படி என்னதான் சொல்ல விரும்புகிறது?*




காலை எழுந்தவுடன் கைத்தொலைபேசியை எடுக்கிறோம் மின்னஞ்சல், காலநிலை , நாட்டின் நடப்புகள் இப்படியெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கும் எமக்கு எதிர்காலத்தில் இவைகள் அனைத்தையும் ஒருகண்ணாடி மூலமாக எமக்கு தெரியப்படுத்த இருக்கிறது.

இன்டர்நெட் உலகத்தையே ஆட்டிப் படைக்கும் கூகுள் நிறுவனம், உலகின் முதல்தர தேடுபொறியாக உள்ளது. இந் நிறுவனம் பல பில்லியன் டாலர்களைச் செலவுசெய்து புதுப்புது தொழில் நுட்பத்தைக் கண்டு பிடிக்கிறது. இதன் ஒருவடிவமாக கூகுள் கண்ணாடியை அது தயாரித்துள்ளது.

இக் கண்ணாடி 2012ம் ஆண்டு இறுதியில் விற்பனைக்குவர உள்ளது. கம்பியூட்டர் செயல்பாடுபோல இயங்கும் இக் கண்ணாடியில் உள்ள அம்சங்களே தனி. இதில் ஜி.பி.எஸ் என்னும் செயற்கைக்கோள்(சட்டலைட்) வழிநடத்தல் இருக்கிறது. இதனூடாக நடை பயணிகள் ஒரு சாலையை அல்லது வீட்டினை இலகுவாகக் கண்டுபிடிக்க முடியும்.







இதன் ஊடாக வீடியோ படமும் எடுக்க முடியும். எடுத்த படத்தை நண்பர்களுக்கு 1 செக்கனில் அனுப்பவும் முடியும். அதுமட்டுமா ! நாம் சொல்லும் கட்டளைகளை அது நிறைவேற்ற வல்லது. படம் எடு என்று மட்டும் சொன்னால் போதும் அது உடனே படம் எடுக்க ஆரம்பித்துவிடும். 4ம் தலைமுறை இன்ரர்நெட் வசதிகொண்டதாகவும் அது அமைந்துள்ளது.

சிறந்த தேடுபொறியாகவும் இதனைப் பயன்படுத்தலாம் மொபைல் தொலைபேசி உள்ளது. அழைக்கும் நபரின் உருவம் கண்ணாடியில் தோன்றும். பிறிதொருவர் இதேபோல ஒரு கண்ணாடியை அணிந்திருந்தால், அவர் உங்கள் நண்பராக இருந்தால் அதனையும் அது காட்டவல்லது. அந்த நபர் எவ்வளவு தூரத்தில் இருக்கிறார் என்பதனைக் கூட இக் கண்ணாடி துல்லியமாகக் காட்டிவிடும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்பொருள் இயக்கி ( Driver ) என்றால் என்ன?




Hardware அல்லது மற்றைய உபகரணங்களுடன் ( Device ) உங்கள் computerஐ இயங்கவைக்கும் மென்பொருளே வன்பொருள் இயக்கி அதாவது( Driver ) ஆகும். உதாரணமாக video card அல்லது webcam போன்ற Device கள் driver இல்லாவிடின் சரிவர இயங்கமாட்டாது.

பெரும்பாலும் பிரபல்யமான driver ஆனது windows உடன் இணைந்திருக்கும். Windowsன் control panelல் உங்களுக் கான driver கிடைக்காவிடின், நீங்கள் வாங்கிய உபகரணத்துடன் உள்ள CD இல் அல்லது தயாரிப்பாளரின் இணையத்தில் ( Manufacture website ) கிடைக்கும்.




ஒரு system த்தில் driver களானது மிக முக்கிய பங்கினை வகிக்கிறது. இவை உங்கள் systemத்திற்கும் மற்றைய hardware களுக்குமிடையில் ஓர் தூதுவராகப் பணிபுரிவது மட்டுமல்லாது signal களை விளங்கிக்கொண்டு சிறந்த தொடர்பாடலையும் நிகழ்த்துகின்றது. இந்த driver கள் இல்லாவிட்டால் உங்கள் device கள் இயங்கமாட்டாது.




பொதுவாக இவை உங்கள் device களுடன் CD/DVD வடிவில் சேர்ந்து வரும் அல்லது தயாரிப்பாளரின் இணையத்தளத்தில் இருந்து தரவிறக்கம் செய்ய சிறந்த வழியும் ஆகும்.

சிலவேளைகளில் CD/DVD காணாமல் போய்விட்டால் அல்லது தொலைந்துவிட்டால் அல்லது தயாரிப்பாளரின் இணையத் தளத்திலிருந்து கிடைக்காமல் போய்விட்டால் அதாவது சில தயாரிப்பாளர்கள் hardware ஐ இயங்கவைக்கும் driver களை விநியோகம் செய்வதை நிறுத்தியிருப்பின் என்ன செய்வது? இந்தசமயத்தில் driver கள் கிடைத்தால் பெரும்வரபிரசாதமாக அமையும் அல்லவா? இந்தக் கவலையைப் போக்குவதற்குத்தான் உள்ளது Driver backup software . இந்த மென்பொருள் பதிவு ( Installed ) செய்யப்பட்ட driver களை மட்டுமல்லாமல் windows உடன் வரும் driver களையும் backup செய்கிறது. அதாவது பிரதி எடுத்து வைக்கிறது.


உங்களிடம் CD இல்லாமல் போனாலோ அல்லது driver எங்கேயும் கிடைக்காமல் போனாலோ உங்கள் system த்திலுள்ள driver களை back up எடுத்து வைப்பது நல்லது.

ஏன் உங்களிடம் driver CD இருந்தாலும் கூட அதை மீண்டும் ஒருமுறை backup எடுத்துப் பாதுகாப்பான இடத்தில் வைப்பது நல்லது. அதுமட்டுமல்லாமல் driver களை backup செய்வதற்கு ஒரு மென்பொருளை மட்டும் உபயோகிக்காமல் வேறுபட்ட மென்பொருளை உபயோகித்து backup எடுத்துவைப்பது சிறந்தவொரு யோசனையாகும். ஏனெனில் சில சமயங்களில் சில மென்பொருட்கள் சில driverகளை back up செய்யும் போது தவறவிட்டிருக்கலாம். அல்லது அவை சரியாக இயங்காது போகலாம்.

## driver களை backup செய்யவும் மீண்டும் restore செய்யவும் உதாரணமாக ஓர் மென்பொருளைப்பற்றிப் பார்ப்போம்.

மென்பொருளின் பெயர்: Double driver

இந்த மென்பொருளானது மிகவும் இலகுவான இடைமுகப்பைக்கொண்டது. Offline இல் உள்ள system த்திலிருந்தோ, boot செய்யமுடியாமலுள்ள system த்திலிருந்தோ driver களை இலகுவாக backup செய்கிறது.




மேல்காணும் படத்தில் backup செய்வதற்காக non windows driver கள் அதன் பட்டியலில் default option இல் தெரிவு செய்யப்பட்டுள்ளன. பாவனையாளர்கள் தங்களுக்கு வேண்டிய driver ஐ தெரிவு செய்யலாம். இதில் சுருக்கப்பட்ட கோப்பாகவோ ( compressed folder ) அல்லது தனிவிரிவாக்கப்பட்ட கோப்பாகவோ ( single self extract file ) driver கள் backup செய்யப்படும்.


( இதன் தொடர்ச்சி: 22 ம் பக்கத்தில்..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Bluetooth இணைப்புக்களை விண்டோஸில் கண்காணித்தல்

BluetoothLog View என்பது டெவலப்பர் உருவாக்கிய புதிய நிரல். இந்த நிரல் Nirsoft வலைத்தளத்தில் கிடைக்கிறது. மேலும், விண்டோஸ் பயனர்கள் இதைப் பதிவிறக்கம் செய்யலாம். இந்த நிரலால் உங்களைச் சுற்றியுள்ள Bluetooth இணைப்புகளைக் கண்காணிக்க முடியும்.




பெயர்த்தகு பயன்பாடு புதிய Bluetooth சாதனங்கள் அங்கீகரிக்கப்படும் பொழுது அதன் பதிவில் ஒரு உள்ளீட்டைச் சேர்க்கிறது. அது வேலை செய்ய கணினியில் நிலையான விண்டோஸ் Bluetooth தொகுதி ஆதரவு வேண்டும். Bluetooth ஆதரவு உள்ளமைக்கப்பட்ட விண்டோஸின் அனைத்துப் பதிப்புகளிலும் இது இயங்கும்.

அடிப்படையில் Windows XP SP2-ல் இருந்து விண்டோஸ் வரைக்கும் அனைத்துப் பதிப்புகளுக்கும் துணை புரிகிறது. மூன்றாம் தரப்பு ப்ளூடூத் ஸ்டாக்குகள் இப்போது சரியாக இல்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு Bluetooth சாதனமும் இடைமுகம் பட்டியலிடப்படும்பொழுது அதன் பெயர், முகவரி, தேதி மற்றும் இணைப்பு நேரம் மற்றும் துண்டிக்கப்படும் நேரம் ஆகியவற்றுடன் இடம்பெறும். மென்பொருளானது கணினியைச் சுற்றியுள்ள பகுதியில் இருக்கும் Bluetooth சாதனங்களைக் கண்காணிக்கிறது.





புதிய உள்ளீடுகள் கால வரிசைப்படி பட்டியலில் சேர்க்கப்படும். நீங்கள் சாதனங்களுக்கு விளக்கத்தைச் சேர்த்து அடையாளத்தை மேம்படுத்த முடியும். விளக்கம் என்பது நீங்கள் தேர்ந்தெடுக்கும் தனிப்பயன் வார்த்தை அல்லது சொற்றொடர் நிரலின் விளக்கத்தின் திட்டத்தில் காட்டப்படும். நீங்கள் சாதனங்களுக்கு விளக்கத்தைச் சேர்த்து அடையாளத்தை மேம்படுத்த முடியும்.

மற்றும், நிரல் கட்டமைப்பு கோப்பில் சேமிக்க முடியும். நீங்கள் இந்த விளக்கத்தைச் சாதன வரிசையை (Device orders) இரட்டை கிளிக் செய்வதன் மூலம் அமைக்க முடியும்.

ஆர்வமுள்ள விண்டோஸ் பயனர்கள் epH sofer வலைத்தளத்தில் இருந்து இலகுவாக இந்த மென்பொருளை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

வன்பொருள் இயக்கி... (21 ம் பக்க தொடர்ச்சி)

இதன் இன்னுமொரு சிறப்பான அம்சம் என்னவெனில் கணினியில் இணைக்கப்படாத device களுக்கான driver களையும் backup செய்கிறது. உதாரணமாக backup செய்யும் நேரத்தில் webcam இணைக்கப்படாவிட்டாலும் கூட அதற்குரிய driver ஐ backup எடுத்து வைத்துக்கொள்ளும்.




Double driver மென்பொருளானது driver களின் பட்டியலை textfile ஆகச் சேமிக்கும் வசதியையும் கொண்டுள்ளது. அதுமட்டு மல்லாமல் அதைப் print செய்யவும் முடியும்.

Install செய்யப்பட்ட driver களின் பெயர், version number, hardware ID மற்றும் திகதி என்பனவற்றைக் கூட இதன் மூலம் பார்த்து தெரிந்து கொள்ளமுடியும்.

இதன் மீளச்சேமிக்கும் முறையும் (restoration) மிகவும் இலகுவானது. தேவையான driver உள்ள folder ஐத் தெரிவுசெய்து அதிலுள்ள option களில் restore ஐத் தெரிவுசெய்தால் போதும். அதன் செய்முறைகள் மிகவும் வேகமாக நடைபெறும்.

| | |
|---|---|
| இயங்குதளம் | : XP / Vista / 7 |
| கோப்பின் அளவு: | 2.1 MB / Wi2.1 MB |
| கட்டணம் | : Freeware / $0 |
| தேவையானது | : |
| Code: | : KS12-13 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன், பின் திரைகளைக் கொண்ட இரட்டைநோக்கு (Dual-view) கமரா





சாம்சங் தனது இரட்டை-நோக்கு கமரா-க்கள் வரிசையில் புதிய சாம்சங் DV300 அறிமுகத்தின் மூலம் புதுப்பித்துள்ளது. இரட்டை திரைகள் (dual screens), ஒரு முன்புறம்-எதிர்நோக்கியுள்ள மற்றும் பின்புறம்-எதிர்நோக்கியுள்ள LCD திரைகள் ஆகியவற்றை இந்த கமரா கொண்டுள்ளது. முன்புற LCD திரை என்பது, பயனர்கள் தங்கள் சுய உருவப்படத்தை தாங்களே எளிதாக எடுப்பதற்கு உதவு-கிறது. மேலும் இந்த முன்புற LCD திரையில் அனிமேஷன்(Animation)-கள் தெரிவதால், குழந்தைகள் தங்களுக்கான படங்களை எடுக்கும்போது அங்குமிங்கும் முகத்தை திருப்பாமல் திரையையே நோக்கியிருக்க செய்கிறது.


7.76மி.மீ 16 மெகாபிக்சல் CCD சென்சர் (sensor) களையும் கொண்டுள்ளது. இது 4.5-22.5மி.மீ (5X zoom) f4.5 லென்ஸ்சில் இருந்து ஒளியை பெறுகிறது. நல்ல ஒளி அமைவு நிலைமைகளில் இது சிறப்பாக செயல்படும், ஆனால் குறைந்த-ஒளி அமைவு நிலைமைகளில் சில பிரச்சினைகளை எதிர்கொள்ளலாம். விம்பம் நிலைப்பித்தல் தொழில்நுட்பம் (image stabilization tech-nology), WiFi இணைப்பு, பல்வேறு இணையவழி புகைப்படம் வீடியோக்களை பகிர்தல் அல்லது பேஸ்புக், யூடியூப், பிக்காசா, பிளிக்கர் உள்ளிட்ட சமூக வலைப்பின்னல் தளங்களுக்கு பதிவேற்ற முடியும்.


சாம்சங் DV300F, இதர சாம்சங் கேமரா-க்களைப் போல, ஸ்டில் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை கலக்கிற (mix) திறன், ஒரு நகர்கிற பொருளை சுற்றியுள்ள அனைத்தையும் உறையச் செய்கிற "உறைநிலை நேரம்" ("freeze time") உள்ளிட்ட பல சிறப்பம்சங்களை இந்த கமரா தன்னகத்தே கொண்டுள்ளது.

# உலகின் சிறிய PC




இதில் காணப்படுவது என்ன என்று யோசிக்கிறீர்களா? உலகின் முதலாவது 3 inch அளவுடைய சிறிய PC இது Cotton-candy என அழைக்கப்படுகிறது. இது FXI தொழில்நுட்பத்தில் அமைந்த Norwagen கம்பனியின் படைப்பாகும்.






இது சிறியதாக இருந்தாலும் இதில் Samsung 1GHz ARM cortex. - A9 processor மற்றும் GPU உள்ளது. அத்துடன் HDMI Output, Wi-fi, Micro USB port இது Android அல்லது Ubuntu operating system த்துடன் வெளிவருகிறது. MPEG - 4 மற்றும் Video format களையும் கையாளக்கூடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்பியா TV உங்கள் PC உள்ளடக்கங்களை பெரிய HDTV திரையில் தோன்றச் செய்கிறது

**வார்பியா நிறுவனம் " வார்பியா TV " என்கிற தனது புதிய தயாரிப்பை அறிவித்திருக்கிறது. இது ஒரு PC-யை TV-யுடன் இணைக்கிற தீர்வாக விளங்குகிறது. இதில் கம்பியில்லா இயக்கம் கட்டுப்படுத்தி (wireless motion controller) மற்றும் குறிப்படம்-அடிப்படையிலான (icon-based) வீடியோ உலாவல் மென்பொருள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.**

வார்பியா TV மூலமாக, உங்கள் கணினி திரையில் காண்கிற அனைத்தையும் நீங்கள் ஒரு பெரிய HDTV திரையில் கண்டுகளிக்க முடியும். அதாவது நீங்கள் அனைத்து விளையாட்டுவகைகள், மென்பொருள் பயன்பாடுகள், அனைத்து வகையான செய்திகள் மற்றும் பொழுதுபோக்குகளை உங்கள் கணினியில் இருந்து ஒரு பெரிய TV திரைக்கு கொண்டு சென்று பார்த்து மகிழ முடியும்.

30 அடிகள் தொலைவு வரை வார்பியா TV-உடன் இணைக்க முடியும். அதே வேளையில், கம்பியில்லா இயக்கம் கட்டுப்படுத்தியை பயன்படுத்தி உள்ளடக்கங்களின் முழுமையான கட்டுப்பாட்டையும் பராமரிக்க முடியும். வீடியோ, படங்கள், திரைப்படங்கள், விழாக்காட்சிகள் மற்றும் யூடியூப், ஃபேஸ்புக், டுவிட்டர், நெட்ஃபிலிக்ஸ் போன்ற இணைய உள்ளடக்கம் உள்ளிட்ட உங்கள் உள்ளடக்கத்தின் அனைத்து வகையையும் பெரிய TV திரையில் முழுமையான HD தெளிவுத்திறனில் கண்டு இரசிக்க முடியும்.





வார்பியா TV-யின் மேலும் முழுமையான தொகுதியாக வார்பியா TV கம்பியில்லா பதிப்பு (Wireless Edition) விளங்குகிறது. இதன் விலை $200 ஆகும். கம்பியில்லா இயக்கம் கட்டுப்படுத்தி, வார்பியா TV உலாவி, HDMI கேபிள், கம்பியில்லா USB பெறும் கருவி, கம்பியில்லா USB PC அடப்டர், விரைவு தொடக்க வழிகாட்டி, நிறுவுதல் CD உள்ளிட்ட பல்வேறு பொருட்களுடன் இணைந்தே கிடைக்கிறது. இதன் அடிப்படை பதிப்பு $80 விலையிலும் கிடைக்கிறது. மேற்கூறிய இரண்டு பதிப்புகளும் இப்போது Warpia.com வலைத்தளத்தில் விற்பனைக்கு வந்துள்ளது.

# உள்ளங்கைக்குள் 9.4 மில்லியன்

## உலகின் மிகவும் விலை உயர்ந்த ஐஃபோன் 4S



ஸ்டுவர்ட் ஹியூக்ஸ் (Stuart Hughes) நிறுவனம் மீண்டும் ஒரு வாயைப் பிளக்கவைக்கும் பிரமாண்டத்துடன் கம்பீரமாக களமிறங்கியுள்ளது. அது தனது அண்மைய அப்பிளின் iOS கருவியான ஐஃபோன் 4S-ல் தங்கம் மற்றும் வைரங்களை பதித்து "தகதக" என ஜொலிக்கவைத்துள்ளதே இந்த களோபரத்திற்கு காரணம்.

ஐஃபோன் 4S எலைட் (iPhone 4S elite) என அழைக்கப்படுகிற இதன் விலையோ... நெஞ்சின் படபடப்பை கொஞ்சம் தாங்கிப் பிடித்துக்கொண்டு வாசியுங்கள்... $9.4 மில்லியன் ஆகும். (யம்மாடியோவ்....) இந்த ஐஃபோன் 4S-ன் இமாலய விலைக்கு காரணம் அதனை சுற்றி அலங்கரிக்க பதிக்கப்பட்டுள்ள வைரங்களும் அவற்றின் தொன்மையுமே ஆகும்.

ஐஃபோன் 4S எலைட்-டின் உளிச்சாயுமோரம் (bezel) நூக்கமரத்தில் இருந்து கைவேலைப்பாடுடன் செய்யப்பட்டுள்ளது. இதில் 100கரட் மதிப்புள்ள ஏறத்தாழ 500 குறைபாடற்ற வைரங்கள் பதிக்கப்பட்டுள்ளன. ஐஃபோன் 4S எலைட்-டின் உளிச் சாயுமோரம் (bezel) நூக்கமரத்தில் இருந்து கைவேலைப் பாட்டுடன் செய்யப்பட்டுள்ளது.

இதில் 100கரட் மதிப்புள்ள ஏறத்தாழ 500 குறைபாடற்ற வைரங்கள் பதிக்கப்பட்டுள்ளன. இதன் பின்புறம் 24 கரட் தங்கத்தை பயன்படுத்தி செய்யப்பட்டுள்ளது மற்றும் அப்பிள் இலச்சினை 24கரட் தங்கத்தாலும் 53 வைரங்களாலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. முக்கிய தெரிமுறை செலுத்து நெறி (navigation) தங்கத்தால் செய்யப்பட்டுள்ளது, மேலும் 8.6கரட் வைரத்தையும் தாங்கியுள்ளது. இதுபோக, தற்போதுள்ளதை மாற்றிவிட்டு அரியவகை 7.4கரட் ஒற்றை வெட்டு குறைபாடற்ற இளஞ்சிவப்பு வைரம் பொருத்தப்பட்டுள்ளது.




விலை உயர்ந்த வைரங்கள் மற்றும் தங்கங்கள் மட்டுமல்ல..டைனோசர் இனத்தைச் சேர்ந்த டி-ரெக்ஸ் (T-rex) விலங்கின் எலும்புத்துண்டு மற்றும் ஓப்பல், பியட்டர்சைட், சாரோய்டே, ரூடைல் குவார்ட்ஸ், ஸ்டார் சன்ஸ்டோன் அரியவகை கற்களும் அழகாக தூவப்பட்டுள்ளன.. உங்களிடம் $9.4 மில்லியன் பணம் இரும்புப்பெட்டிக்குள் கவலையின்றி தூங்குகிறது எனில், ஸ்டுவர்ட் ஹியூக்ஸ்-சின் இந்த நவநாகரீக சொகுசு ஐஃபோனை சொந்தமாக்கிக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க பாதுகாப்புத் துறையினரிடமும் Android இயங்குதளம் கொண்ட கைத்தொலைபேசி



கைத்தொலைபேசிகளின் ஊடாக உரையாடுவது பாதுகாப்பான விடயமே அல்ல. ஆனால் மிகவும் பாதுகாப்பான முறையில் உரையாடுவதற்கு Google நிறுவனம் தனது ஒத்துழைப்பை அமெரிக்க பாதுகாப்புத்துறையினருக்கு வழங்கியுள்ளது.

இதற்குரிய தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது மட்டுமின்றி Google நிறுவனத்தின் android இயங்குதளமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது .

NSA (National Security Agency) என்பது அமெரிக்காவின் உயர் நிலை புலனாய்வு, பாதுகாப்பு துறையாகும்.

இந்த NSA புலனாய்வுத்துறையானது சிறப்புமிக்கதும் உச்ச பாதுகாப்பானதுமான Smart Phone ஒன்றை உருவாக்கியுள்ளது. இதனூடாக புலனாய்வுத்துறைக்குள் உட்பட்டவர்களுடன் பாதுகாப்பான முறையில் உரையாடும் வசதியை ஏற்படுத்தியுள்ளது.

இதில் 100 கைத்தொலைபேசிகள் மட்டுமே தற்போது உருவாக்கப்பட்டு ஆய்வுக்காக அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## சாரதிகளை மட்டும் பாதுகாத்த Airbags இனிமேல் பாதசாரிகளையும் பாதுகாக்கும்

**பல்லாயிரக்கணக்கான பாதசாரிகளின் உயிர்களைப் பாதுகாக்க வொல்வோவின் புதிய தொழில்நுட்பம்**


வொல்வோ நிறுவனம் புதியபாதசாரி எயார்பேக்கை(Airbag) அறிமுகப்படுத்துகிறது. புதியபாதுகாப்பு அம்சத்தால் பல்லாயிரக் கணக்கான உயிர்களை இந்த தசாப்தத்தில் காப்பாற்ற முடியும்.

ஆண்டு தோறும் பல்லாயிரக் கணக்கான பாதசாரிகள் கொல்லப்படுகின்றனர், அல்லது காயமடைகின்றனர்.


இவைகள் எல்லாவற்றையும் கவனத்தில் எடுத்த வொல் வோ நிறுவனம் வித்தியாசமாக சிந்தித்து, புதிய தொழில்நுட்பம் ஒன்றை அறிமுகப்படுத்துகிறது.

விபத்துக்கள் நடந்தால் சாரதி-களை மட்டுமே பாதுகாக்க உருவாக்கப்பட்ட Air-bag க்குகள் விபத்துகளில் அகப்படும் பாதசாரிகளையும் காப்பாற்ற வொல்வோ நிறுவனத்தால் Air-bag கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பாதசாரிகளோடு கார் மோதல் ஏற்படும் போது வுட் சிறிது உயர்ந்து எழும்புகிறது மற்றும் ஒரு U – வடிவ காற்றுப்பை அடிமெத்தை போன்று கண்ணாடியை சுற்றி எழுகிறது.



இந்த தொழில்நுட்பத்தை V40 யில் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த கார் பாதசாரிகள் பாதுகாப்பிற்கான பல்வேறு அம்சங்களைக் கொண்ட தொகுப்பினை உள்ளடக்கியுள்ளது.



**அவற்றுள் ஒரு தானியங்கி பிரேக்கிங் சிஸ்டம் வடிவமைக்கப்பட்டு கூடிய வேகத்தால் ஏற்படும் தாக்கத்தை குறைக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.**

## வலுவேற்றி

LG இன் இன்னொரு புதிய படைப்பாக LG WCD-800 smartphone charging cradle வெளிவந்துள்ளது. அதாவது இது ஒரு நிலைநிறுத்தி வைக்கக்கூடிய தாங்கி (stand) போன்ற வடிவில் உள்ள ஒரு வலுவேற்றி (charger) ஆகும். உங்கள் phone ஐ நிமிர்ந்த நிலையில் அல்லது சரிவாக வைத்து வலுவேற்றலாம்.





நீங்கள் அழைப்புக்களை மேற்கொள்கையிலோ அல்லது, குறுஞ் செய்திகளை அனுப்புகையிலோ, இந்த வலுவேற்றியுள் இருக்கும் மின் இழைக-ளானது காந்தப்புலன்கள் மூலம் உங்கள் phone இற்கு வலுவேற்றுகிறது.

இதில் ஓர் ஆச்சரியப்படத்தக்க விடயம் என்னவென்றால் phone ஐ wire உள்ள வலுவேற்றியில் charge அடையும் வரை காத்திருக்கத்தேவையில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூச்சு விட்டால் சார்ச் ஏறும்

## நுரையீரல்களுக்கு நல்ல பயிற்சி அளிக்கவும், iPhone ஐ வலுவேற்றவும் உதவும் புதிய கருவி AIRE Mask.

உங்கள் நுரையீரல்களுக்கு நல்ல பயிற்சி அளிக்கவும், iPhone ஐ வலுவேற்றவும் உதவும் புதிய கருவி AIRE Mask. நுரையீரல்களை வலுவடையச்செய்வதுடன் உங்கள் சுவாசத்தின் மூலம் உங்கள் iPhone ஐ வலுவேற்றவும் செய்கிறது.

இந்தக் கருவியானது உங்கள் சுவாசத்திற்கு புதிய வலுவைக்கொடுத்து சிறிய காற்றழுத்தத்தை நுரையீரலுக்குக் கொடுக்கிறது. இதனால் இங்கு உங்கள் iphone இற்கான மின்சாரம் உருவாக்கப் படுகிறது. iOS device ஐ AIRE Mask உடன் இணைத்து வழமைபோல் நீங்கள் சுவாசித்தால் போதும்.






இதை தினமும் நீங்கள் செய்து வர நுரையீரல்களின் கொள்ளளவு அதிகரிக்கிறது. இதனால் சுவாச சம்பந்தமான நோய்கள் உங்களை அணுகாது. நீங்கள் ஏதாவது வேலைசெய்யும் போதோ, iPhone அல்லது iPod இன் மூலம் பாடல்களைக்கேட்கும் போதோ இதை அணியலாம்




iPhone 4S clone ஆனது உண்மையிலேயே iphone 4Sஐ பார்வை யளவில் ஒத்ததாக வெளிவந்துள்ளது. இதன் விலை $60 ஆகும். ஆனால் இதன் இயங்குதளமானது iOS 5 ( Operating system) அல்லாமல் Java தொடர்புடைய இயங்கு தளத்தில் தொழிற்படுகிறது.

அதுமட்டுமன்றி microsim இற்குப் பதிலாக பாவனையாளர்கள் உபயோகிக்கும் சாதாரண sim ஐப் பாவிக்க முடியும். இதன் பின்புறத்தில் "Assembled in Taiwan " என்று பொறிக்கப்பட்டுள்ளது. ஆனால் உண்மையான Apple iPhone 4S இல் " Assembled in China " எனக்காணப்படுகிறது.







ஆச்சரியப்படத்தக்க வகையில் iPhone 4S clone ஆனது உண்மையில் Apple iPhone ஐப் போலவே Apple charger, iOS sync cable, sim card removal tool மற்றும் manual அடங்கிய பெட்டியில் இலகுவாக கையாளத்தக்க வகையில் அமைந்துள்ளது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பனை உபகரணம்




**நீங்கள் புகைப்படங்களை ஒப்பனை செய்ய செயல்படுத்த அனுமதிக்கும் ஒப்பனை உபகரணம் ஒரு சித்திரமென்பொருள் ஆகும். இதன் எளிய விளக்கக் காட்சிகள் நீங்கள் விரைவாக அது எவ்வாறு செயல்படுகிறது என புரிந்துகொள்ள உதவுகிறது.**

நீங்கள் உதட்டுச்சாயக் கருவியைத் தேர்வு செய்து பல்வேறு நிறங்களில் உதட்டுச்சாயத்தை மாற்றும் முயற்சி செய்யலாம். ஒப்பனை உபகரணத்தைப் பயன்படுத்தி உங்கள் உருவப்படத்தை நீங்கள் எளிதாக மேம்படுத்த முடியும்.

இந்த நிரலைப் பயன்படுத்தி நீங்கள் முகத்தின் சுருக்கங்கள், முகப்பரு, மற்றும் டாட்டுக்கள், முகம் தோல் குறைபாடுகளைச் சுத்தம் செய்யலாம். ஒப்பனை உபகரணம் உங்கள் சொந்த டிஜிட்டல் ஒப்பனை பையில் உள்ளது. உங்கள் உதட்டுச்சாயம் உருவப்படத்தில் துடைக்கப்பட்டு வருகிறது என்று கவலைப்படத்தேவையில்லை.

இந்த உபகரணத்தின் மூலம் எந்த ஒரு பெண்ணின் டிஜிட்டல் புகைப்படங்களிலும் ஒப்பனையைச் செயல்படுத்தி சுருக்கங்களைக் குறைக்கவும், தோல் கறைகளை (ஸ்பாட் மற்றும் பருக்கள்) நீக்கவும் முடியும். மேலும், கண்களின் நிறங்களை மாற்றி சிவந்த கண்களைப் பெற ஒரு கிளிக் போதும்.

உங்கள் கூந்தலைச் சுத்தமாக்கி பொலிவு மற்றும் மாற்றங்களை உங்கள் உருவப்படத்தில் மாற்றிப் பாருங்கள். தேவதை-கதை உருவப்படங்களைச் செய்ய, உடலை மெலிதாக்க, பச்சை குத்தியிருந்ததை நீக்க, தேதி முத்திரைகள், தண்ணீர் குறிகள், கீறல்கள், கறைகள், சுருக்கங்கள், மற்றும் தேவையற்ற பொருட்களை டிஜிட்டல் புகைப்படங்களில் இருந்து நீக்கவும் பயன்படுகிறது.




மென்பொருளை பதிவிறக்கம் செய்துகொள்ள:

http://www.makeupinstrument.com/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்டோஸ் 8 இயங்குதளம் குறித்து அதிகாரபூர்வ தகவலை மைக்ரோசாப்ட் வெளியிட்டுள்ளது.

மைக்ரோசாப்ட் நிறுவனம் தான் பெருமையுடன் அடுத்து அறிமுகப்படுத்த இருக்கும் விண்டோஸ் 8 இயங்கு தளம் குறித்த முதல் அதிகாரபூர்வ தகவலை வெளியிட்டுள்ளது. முதலில் இயங்கு தளம் சார்ந்து புரோகிராம் வடிவமைப்பவர்களுக்கு வழங்கப்பட்டது.

பின்னர் நுகர்வோருக்கான சோதனைப் பதிப்பு வெளியானது. தற்போது இதன் பெயர் மற்றும் பதிப்புகள் குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த புதிய இயங்கு தளத்தின் பெயர் விண்டோஸ் 8 ஆகத் தான் இருக்கும். இதில் மாற்றம் எதுவும் இல்லை. அடுத்ததாக, இயங்கு தளம் ஒன்றின் பல்வேறு வகை பதிப்புகளை வெளியிடுவது மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் வழக்கம்.


இதனால் மக்கள் எதனை விடுத்து, எதனைப் பெறுவது என்பதில் குழப்பம் அடைவார்கள். தற்போது அந்தக் குழப்பத்திற்கு இடம் அளிக்க விரும்பாமல், மொத்தம் மூன்றே மூன்று பதிப்புகள் மட்டுமே வெளியாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. X86/64 ப்ராசசர் அடிப்படையில் இயங்க விண்டோஸ் 8 மற்றும் விண்டோஸ் 8 ப்ரோ வழங்கப்படுகிறது.


விண்டோஸ் 8 அதிகமான நுகர்வோர் விரும்பித் தேர்ந்தெடுக்கும் வகையில் இருக்கும். இது விண்டோஸ் 7 ஹோம் பிரிமியம் பதிப்பின் இடத்தில் இடம் பெறும். இதில் மேம்படுத்தப்பட்ட விண்டோஸ் எக்ஸ்புளோரர், டாஸ்க் மானேஜர் மற்றும் கூடுதலான மானிட்டர்களைப் பயன்படுத்தும் வசதி ஆகியவை இதில் இருக்கும்.

மேலும் மொழிகளுக்கிடையே மாற்றிக் கொள்வது இந்த இயங்கு தளத்தில் மிகவும் எளிதாகவும் வேகமாகவும் இருக்கும். இந்த வசதி முன்பு அதிக பணம் செலுத்தி வாங்கக் கூடிய இயங்கு தளத்தில் மட்டுமே தரப்பட்டது. விண்டோஸ் 8 ப்ரோ சிஸ்டம் வர்த்தக, தொழில்நுட்ப வல்லுனர்களுக்கானது.

- சுருக்கிய பார்மட்டில் அமைக்க BitLocker என்கிரிப்ஷன் வசதி
- விண்டோஸ் இணைய தள இணைப்பு ஆகியவை கிடைக்கும்.
- கணிப்பொறி இயக்கத்தினை அமைத்துச் சரி பார்க்கும் வசதி
- விர்ச்சுவல் ஹார்ட் டிஸ்க்கிலிருந்து பூட் செய்திடக் கூடிய வசதி
- பெர்சனல் கம்ப்யூட்டர் (Personal Computer)வடிவமைப்பு
- செயல்முறை நிர்வாகம்

தற்போது இந்த வசதிகள் யாவும் Windows 7 Ultimate மற்றும் Enterprise சிஸ்டத்தில் மட்டுமே கிடைக்கும்.






இந்த இயங்கு தளத்திற்கு மட்டும் மீடியா பேக் (Windows Media Pack) என அழைக்கப்படும் விண்டோஸ் மீடியா சென்டர் இயக்கம் ஒரு கூடுதல் தொகுப்பாகக் கிடைக்கும். இந்த இரண்டும் தனியாகவும், பெர்சனல் கணினிகளில் அவற்றை விற்பனை செய்திடும் நிறுவனங்களால் பதியப்பட்டும் கிடைக்கும்.

இவை தவிர வேறு வகை சிஸ்டம் கிடைக்காது. ஆனால் சீனா மற்றும் வளர்ந்து வரும் சில நாடுகளில் மட்டும், அந்த நாட்டு மொழியில் விண்டோஸ் 8 சிஸ்டம் வழங்கப்படும் எனவும் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஏ.ஆர்.எம். சிப்களில் இயங்கக் கூடிய விண்டோஸ் 8 சிஸ்டத்தினை மைக்ரோசாப்ட் விண் ஆர்.டி. (Windows Runtime (WinRT) என அழைக்கிறது. இது பெர்சனல் கம்ப்யூட்டர் மற்றும் டேப்ளட் பிசி (Tablet Pc) களுக்கானதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்டோசின் டிஸ்க் மிர்ரர்


## ஒரே தரவுகளை பல்வேறு drive களில் பதிய வேண்டுமா?

மிகச் சிறந்த Backup தீர்வின்படி வழிகளை மேற்கொண்டு கோப்புகள் அனைத்தையும் Backup எடுத்து வந்தாலும், ஹார்ட் டிஸ்க் கிராஷானால் (Harddisk-Crash ) சில மணி நேர வேலையாவது வீணாகிப் போய்விடும். இதனையும் சரி செய்திட விண்டோஸ் 7 இயங்குதளம் ஒரு வழி காட்டுகிறது. அதன் பெயர் ட்ரைவ் மிர்ரரிங் (drive mirroring).

இந்த வசதி விண்டோஸ் 7 சிஸ்டத்தின் புரபஷனல் (professional) என்டர்பிரைஸ் (enterprise) மற்றும் அல்டிமேட் (ultimate) பதிப்புகளில் கிடைக்கிறது. இதன்படி இரண்டு அல்லது அதற்கும் மேலான டிஸ்க்குகள் ஒரே டேட்டாவினைக் கொண்டிருக்கும்.

கோப்புகள் அனைத்தும் ஒருங் கிணைக்கப்பட்டு இவ்வகையில் பதிவாகும். இதனால் ஒரு டிஸ்க் கிராஷ் ஆனாலும், நாம் நம் டேட்டாவினைச் சிறிது கூட இழக்க மாட்டோம்.

இங்கு ஒன்றைக் கவனிக்க வேண்டும். மிர்ரரிங் என்பது தொழில்நுட்ப ரீதியாகப் பார்த்தால் Backup தீர்வாகாது. எடுத்துக்காட்டாக நீங்கள் உங்களை அறியா- மலேயே ஒரு கோப்பை அழித்தால் ஹார்ட் டிஸ்க்கின் இரண்டு ட்ரைவ்களிலும் அது அழிக்கப்படும். அந்த கோப்பை வேறு மூன்றாம் தரப்பு புரோகிராம் மூலம் திரும்பப் பெறலாம் என்றாலும், இந்த மிர்ரர் ட்ரைவ் செயல்பாட்டினால் திரும்பப் பெற முடியாது.




மேலும் இது போல மிர்ரர் டிஸ்க்கில் பதிந்து வைத்தவற்றை, அண்மைக் காலத்தில் பயன்படுத்தப்படும் விண்டோஸ் இயக்கத்தின் வழி மட்டுமே மீட்டுப் பெற முடியும்.

### இருக்கின்ற ட்ரைவினை மிர்ரரிங் செய்வது


டிஸ்க் மிர்ரரிங்கினை மேற்கொள்ள நமக்குக் குறைந்தது ஒரு வெறுமையான டிஸ்க் இருக்க வேண்டும். எப்படி மிர்ரர் ட்ரைவில் உள்ள டேட்டாவினை இழக்காமல், இருக்கும் டிஸ்க்கினை மிர்ரர் டிஸ்க்காக அமைப்பது குறித்து இங்கு விரி- வாகப் பார்க்கலாம்.

ஸ்டார்ட் பட்டினில் கிளிக் செய்து Search box இல் partitions என டைப் செய்திடவும். உடன் கிடைப்பதில் Create and format hard disk partitions என்பதில் கிளிக் செய்திடவும்.

நீங்கள் Search-box இனை செயல்படாமல் வைத்திருந்தால், Win+Rனை அழுத்தி ரன் விண்டோ பெற்று அதில் diskmgmt.msc என டைப் செய்திடவும். இப்போது Disk Management விண்டோ காட்டப்படும்.

நம்மிடம் Old Data என்ற பெயருடன் ஒரு சிறிய டிஸ்க் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அதே அளவிலான இன்னொரு டிஸ்க்கினை இதன் மிர்ரராக வைத்துக் கொள்ள விரும்புகிறோம்.

இதில் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். இப்போது இருக்கும் டிஸ்க்கின் மிர்ரர் ஆக அமைக்க இருக்கும் டிஸ்க், பங்கிட்டு ஒதுக்கப்படாததாக இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் இருந்தால், ரைட் கிளிக் செய்து, கிடைக்கும் மெனுவில் Delete Volume என்பதில் கிளிக் செய்திடவும். இதன் மூலம் அது பங்கிட்டு ஒதுக்கப் படாததாக மாற்றப்படுகிறது.




இதன் மூலம் அந்த ட்ரைவில் ஏதேனும் டேட்டா இருந்தால் அது அழிக்கப்படும். அடுத்து எந்த டிஸ்க்கிற்கு மிர்ரர் ஏற்படுத்த விரும்புகிறீர்களோ, அதில் ரைட் கிளிக் செய்திடவும். இதில் கிடைக்கும் மெனுவில் Add Mirror என்பதில் கிளிக் செய்திடவும். இப்போது ஓர் எச்சரிக்கை செய்தி கிடைக்கும்.

இந்த செயல்பாடு இப்போது உள்ள டிஸ்க்கினை basic நிலையிலிருந்து dynamic நிலைக்கு மாற்றி விடும் என அந்த செய்தி கூறும். இந்த செயல்பாடு அந்த டிஸ்க்கில் உள்ள டேட்டாவினை அழிக்காது என்பதனையும் நினைவில் கொள்ள வேண்டும்.


இந்த புதிய டிஸ்க் mirror என குறிக்கப்படும். இது ஏற்கனவே உள்ள ட்ரைவிலிருந்து டேட்டாவினை கொப்பி செய்து வைக்கத் தொடங்கிவிடும். இந்த ட்ரைவ்கள் ஒருங்கிணைக்கப்படும். இதற்கு சிறிது நேரம் ஆகலாம். இதன் பின்னர் E: ட்ரைவில் சேர்க்கப்படும் எந்த டேட்டாவும், இரண்டு ஹார்ட் ட்ரைவ்களிலும் இருக்கும்.

இது போல ட்ரைவ் மிர்ரரிங் செய்து வைத்துக் கொள்வது நமக்கு ஹார்ட் டிஸ்க் கிராஷ் ஆகும்போது மிகவும் உதவியாக இருக்கும். ஆனால் இந்த அமைப்பை ஏற்படுத்திய பின்னரும், வழக்கம் போல Backup எடுத்து வைப்பது நல்லது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களத்தின் விடையும் விளக்கங்களும்

# “ உங்கள் கணினி அறிவு எப்படியிருக்கிறது? ”





***வினா எண் : 1***
***சரியான பதில் : C***

**விளக்கம்:** புதிய தொழில்நுட்ப கோப்பு அமைப்பு (NTFS). சர்வர்களுக்காக விண்டோஸ் NT அறிமுகப்படுத்தியது மற்றும் இதை முக்கிய விண்டோஸ் கோப்பாகக் கொண்டு விண்டோஸ் XP தொடங்கும். முந்தைய விண்டோஸ் பதிப்புகள் கோப்பு ஒதுக்கீட்டு அட்டவணையைப் (FAT) பயன்படுத்தியது. பெரும்பாலான கோப்புகளின் Unix, Linux மற்றும் Mac OSX ஃபாஸ்ட் கோப்பு அமைப்பை அடிப்படையாகக் கொண்டவை.




**வினா எண்: 2**
**சரியான பதில் : A**

**விளக்கம்:** அசல் SD அட்டை விவரக்குறிப்பு (Original SD card) 2 GB SD கார்டுகளை மட்டுமே ஆதரிக்கும். விவரக்குறிப்புக்கான ஒரு சிறிய மாற்றம் 4GB அட்டைகளை சாத்தியமாக்கியது. ஆனால் SD உயர்திறன் (SDHC) அட்டைகளை சாத்தியமாக்கும். அது விவரக்குறிப்பை முழுவதுமாக பழுதுபார்த்து. பழைய சாதனங்கள் வன்பொருள் மற்றும் மென்பொருளின் வரம்புகளினால் 2 அல்லது 4GB . அட்டைகளை மட்டுமே ஆதரிக்கும். சில சாதனங்கள் firmware மேம்படுத்தல்களைக் கொண்டு அட்டைகளை ஆதரிக்கும். ஆனால் பெரும்பாலான பழைய வன்பொருள்களில் firmware மேம்படுத்தல்கள் இல்லை.





**வினா எண்: 3**
**சரியான பதில் :C**

**விளக்கம்:** Wi-Fi Protected Access (WPA) ஆனது கம்பியில்லா வீட்டு பிணையத்தைப் (wireless home network.) பாதுகாக்க விருப்பமான வழியாகும். Wired Equivalence Protection (WEP) ஆனது உடைத்து உள்நுழைபவர்களுக்கு (Hackers) எதிராக வீட்டு வலையமைப்புகளைப் பாதுகாக்காது. மெய்நிகர் தனியார் பிணையம் (VPN) கம்பியில்லா வலையமைப்பிற்காக மட்டும் அல்ல. எனினும் சரியாக அமைக்கப்பட்டால் இது உடைத்து உள்நுழைபவர்களுக்கு எதிரான சிறந்த பாதுகாப்பு அளிக்கிறது.



**வினா எண்:4**
**சரியான பதில்: A**

**விளக்கம்:** உங்கள் ஃபயர்வாலை (firewall) முடக்க வேண்டாம். உங்கள் கணினியில் சில வளங்களைப் பயன்படுத்தும் பொழுது குறிப்பிடத்தக்க பாதுகாப்பு வழாங்குகிறது. மின்கல திறனில் இயங்கும் மடிக்கணினி இயங்குதளம் (OS) பயன்பாட்டில் இல்லாத பொழுது அதன் வன்தட்டை தானாக நிறுத்தி சிறிய சக்தியை சேமிக்கும். Wi-Fi அதிகபட்ச வேகத்தில் கூட மிகுந்த சக்தியைப் பயன்படுத்துவதில்லை. ஆனால் பிரகாசமான, உயர் தீர்மானம் கொண்ட திரைகள் ஒரு கணிசமான தொகையைப் பயன்படுத்துவதால் திரையின் பிரகாசத்தைக் குறைத்தால் நிறைய உதவி செய்ய முடியும்.



**வினா எண்:5**
**சரியான பதில்: B**

**விளக்கம்:**DSL ஆனது வீட்டில் இருக்கும் தொலைபேசி இணைப்பை அடிப்படையாகக் கொண்டது. பல கம்பிகள் மூலம்தான் தரவுகளை பரிமாற்ற முடியும். எனவே DSL நிறுவனம் தேர்வு செய்ய வேண்டியது:
அவர்கள் மிதமான பதிவிறக்க மற்றும் பதிவேற்ற வேகம் கொண்ட இணைப்பை (DSL) விற்க அல்லது அவர்கள் வேகமான பதிவிறக்கம் மற்றும் மெதுவான பதிவேற்றங்கள் கொண்ட இணைப்பை (ADSL) விற்க வேண்டும். அவர்கள் விற்க தேர்வு செய்து வேகமான பதிவிறக்கங்கள் மற்றும் வழக்கமாக பதிவேற்றங்கள் குறைவாக இருக்கும் என்று குறிப்பிட தவிர்க்கவில்லை. ADSL–ல் A என்பது ஒத்திசைவற்ற (asynchronous) என்று குறிக்கிறது. இது சமமற்ற இன்னொரு வார்த்தை.

( தொடர்ச்சி 31ம் பக்கத்தில்.. )




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## " உங்கள் கணினி அறிவு எப்படியிருக்கிறது? "

**வினா எண்:6**


**சரியான பதில்:B**



**விளக்கம்:** உங்கள் கணினியின் உள்ளே வெடிபொருட்கள், incendiaries, அல்லது பிளாஸ்டிக் சேமிக்கும் பொழுது குறைவான உருகும் புள்ளியில் வைத்தால் உங்கள் கணினி வெடிக்கவும், உருகவும், தீப்பிடிக்கவும் முடியாது. உங்கள் மதர்போர்டில் கட்டப்பட்ட ஒரு சென்ஸார் உங்கள் கணினியின் வெப்பநிலையைக் கண்காணித்து, அந்த வெப்பநிலை மிகுதியாகும் பொழுது கணினியைத் தானாகவே அணைத்துவிடும். இந்த பாதுகாப்பு அமைப்பு உங்கள் கணினியின் பேரழிவு மற்றும் சேதத்தைத் தடுக்கிறது. ஆனால் உங்கள் கணினி நாட்பட வெப்பமடைந்து அதனால் ஏற்படும் நிலையான சேதத்தை இந்த பாதுகாப்பு அமைப்பால் பாதுகாக்க முடியாது. உங்கள் கணினி தானாக அணைந்தால், வெப்பமடைவதற்கான பிரச்சனையைக் கண்டுபிடித்து உங்கள் கணினியைக் குளிர்ச்சியான இடத்திற்கு மாற்றவும்.

**வினா எண்:7**

**சரியான பதில்: D**





**விளக்கம்:** மிகவும் நவீன மேசைக்கணினிகளுக்கு ஒரு நினைவகம், ஒரு நிகழ்படம் மற்றும் வட்டு இயக்கி (Disk-Drive)ஆகியவை முக்கிய இயங்குதளத்தைத் துவக்குவதற்குத் தேவையாகும். ஆனால் ஒரு நவீன கணினிக்கு விசைப்பலகை தேவையில்லை. 1995-க்கு முன்னர் கட்டப்பட்ட பழைய கணினிகளுக்கு விசைப்பலகை, மற்றும் பல சேவையங்களைத் துவக்க ஒரு வீடியோ அட்டை அல்லது வட்டு இயக்கி தேவைப்படும். CPU மீது நேரடியாக கட்டப்பட்டிருந்தாலும் சில நினைவகம் எப்பொழுதும் தேவைப்படுகிறது.

**வினா எண்:8**

**சரியான பதில்: B**



**விளக்கம்:** மலிவான நீல கைரேகை வருடிகளை (Finger Print Scanner) நுகர்வோர் மடிக்கணினியில் வைத்தால் அலுவலக பொருட்களை எளிதாக ஏமாற்ற முடியாது. குறைந்தபட்சம் ஒரு நபர், மலேஷியாவில் இருக்கும் கணக்காளரின் விரல் கார்த்திருடர்கள் கும்பல் மூலமாக மெர்சிடஸ் காரை திருடும் பொழுது துண்டிக்கப்பட்டது. ஆனால் இது அவருக்கு மட்டுமே தெரிந்த ஒரு உண்மையான விரல் திருட்டு. கைரேகை ஸ்கேனரின் முக்கிய தீமை என்னவென்றால் உங்கள் கைரேகையை மாற்றினால் உங்கள் தரவு அணுகலை இழந்துவிடுவீர்கள். உதாரணத்திற்கு நீங்கள் ஒரு விபத்தைச் சந்தித்தால் அல்லது தண்ணீர் மற்றும் வயது வெளிப்பாட்டின் காரணமாக விரல் சுருக்கம் அடைந்தால் உங்கள் தரவு அணுகலை இழந்துவிடுவீர்கள்.




**வினா எண்:9**

**சரியான பதில்:D**

**விளக்கம்:** இரண்டு காரணி அங்கீகாரங்கள், இரண்டு ஆதாரத் துண்டுகளைக் கொண்டு உங்கள் கணக்குகள் நுழையும். ஒருவேளை உங்களுக்கு வங்கி பாதுகாப்பு வைப்பு முறை தெரிந்திருந்தாலும், பெரும்பாலான வங்கிகளில் நீங்கள் உங்கள் அடையாள அட்டையைக் காட்டி நீங்கள் அங்கீகரிக்கப்பட்டவர் என்று நிரூபித்து குறிப்பிட்ட பாதுகாப்பு பெட்டகத்தை அணுக முடியும், மற்றும் அதைத் திறப்பதற்கு முன்பாக உங்களிடம் ஒரு சாவி இருக்க வேண்டும்.

**வினா எண்:10**

**சரியான பதில்: C**



**விளக்கம்:** டூப்லக்ஸ் ஆக்கம் (duplex) இருக்கும் அச்சுப்பொறியைக் கொண்டு ஒரு தாளின் இருபுறமும் அச்சிட முடியும். ஏறக்குறைய அனைத்து நவீன டூப்லக்ஸ் ஆக்கம் கொண்ட அச்சுப்பொறிகளால் ஒரே அச்சுத் தலையைப் பயன்படுத்தி ஒரு தாளின் இருபுறமும் அச்சிட முடியும். எனவே நீங்கள் ஒவ்வொரு நிமிடத்திற்கும் அச்சிடப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கையை இரட்டை முறைமையைப் பயன்படுத்துவதால் எதிர்பார்க்க முடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரூ.4,000

# வெல்லுங்கள் பரிசு

போட்டி இல 1

$65_{10}$ எனும் இலக்கத்தை துவித எண் தொகுதி (Binary)இலக்கமாக மாற்றும் போது வருவது?

**A. 01000001 B.10000001 C.11000000 D.11110000**

உங்கள் விடைகளை PC1 A/B/C/D _<your name>,<address> என்பவற்றை **type** செய்து **0772395895** என்ற இலக்கத்துக்கு அனுப்பி வைக்கவும்.

MCS நிறுவனத்தின் அனைத்து கற்கைநெறிகளுக்கும்

# After O/L or A/L What Next?

* **Computer Engineering-USA** ICTA Scholarship
* **Media & Visual Communication**
* **BIT-University of colombo**

**Free5** Course fee*

Diploma Courses..

*MsOffice, AutoCAD, *Web Designing *Hardware *Accounting *DTP *English

**Our Awards :** Best Performance Award for BIT by University of Colombo

Silver Partner Award by Microsoft- USA

# MCS

Supported By **UNDP/JRRP**

Authorized Training Partners & Testing Centers of CIMA, Microsoft, GRE, GMAT, Oracle Campus, COMTIA, CISCO, HP, Linux, Toefl, ICDL, Adobe & BCS

324, Palaly Road,Jaffna

www.mcsitcampus.org

SMS Your name & Course to 0772 395 895 & get Scholorship


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ட்ராய்ட் (Android) தொலைபேசி




**ஒரு அண்ட்ராய்ட் தொலைபேசி TM என்பது கூகுள் TIM உருவாக்கிய அண்ட்ராய்ட் TM ஆபரேடிங் சிஸ்டம் மற்றும் பிளாட்ஃபார்ம் (platform) பயன்படுத்துகிற ஒரு செல்ஃபோன் (cellphone) ஆகும்.**

கூகுள் நிறுவனம், அண்ட்ராய்ட் பிளாட்ஃபார்மில் TM இயங்கக்கூடிய முதல் மொபைல் தொலைபேசியான (mobile phone) G1 செல்ஃபோனுக்கான வன்பொருளை (hardware) உருவாக்க, ஹை டெக் கம்ப்யூட்டர் கார்பொரேஷன் (HTCC) உடன் கூட்டுசேர்ந்தது. 2008ம் ஆண்டில், T-மொபைல் (T-Mobile) நிறுவனம் G1 அண்ட்ராய்ட் தொலைபேசியை மக்களுக்கு அறிமுகப்படுத்தியது.


தொழில்நுட்ப பகுதியில் பார்க்கப்போனால், ஒரு அண்ட்ராய்ட் தொலைபேசி TM அண்ட்ராய்ட் TM ஆபரேடிங் சிஸ்டம், முக்கிய பயன்பாடுகள் மற்றும் இடைப்பொருள் (middleware) ஆகியவற்றால் இயங்குகிறது. இது லினக்ஸ் கெர்னல்-அடிப்படையிலானது. அதன் பயன்பாடுகள் ஜாவா மொழியில் எழுதப்பட்டுள்ளது மற்றும் C மொழியில் எழுதப்பட்டுள்ள பயன்பாடுகளையும் கூட இயக்கவல்லது. இது ஓப்பன் ஹேண்ட்செட் அலையென்ஸ் (Open Handset Alliance) நிறுவனத்தின் பகுதி தயாரிப்புப் பொருளாகவும் விளங்குவதால், செல்ஃபோன்களுக்கான ஓப்பன் சோர்ஸ் (open source) மென்பொருளை பயன்படுத்தவும் அதன் முன்னேற்றத்தை ஊக்குவிக்கவும் செய்கிறது.

அண்ட்ராய்ட் TM பிளாட்ஃபார்ம்-மில் இயங்குகிற ஒரு தொலைபேசிக்கும் மற்றவைகளுக்கும் உள்ள மிகப்பெரிய வித்தியாசங்களில் ஒன்று என்னவெனில், மென்பொருள் அண்ட்ராய்ட் TM ஒரு சிக்கலான ஆபரேடிங் சிஸ்டத்தை பயன்படுத்துவதாகும்.

இதற்கு மாறாக, நடைமுறை செயல்பாட்டில் உள்ள செல்ஃபோன்களில் பெரும்பான்மையானவை பழமையான நிகழ் நேர பயன்பாடுகளை இயக்குகின்றன. அண்ட்ராய்ட் TM தொலைபேசியானது அதன் இணைய செயல்வல்லமைகளை பொறுத்தவரை, G1-ன் குரோம் லைட் பிரவுசரை (Chrome Lite browser) முழுமையாக தன்னுள் கொண்டு செயல்படுத்துவதற்காக வெப்கிட்-டை (WebKit) பயன்படுத்துகிறது.

ஏனென்றால், வெப்கிட்-டானது மேலும் ஐஃபோன் (iPhone)-னின் சஃபாரி (Safari)-யையும் முழுமையாக தன்னுள் கொண்டு செயல்படுத்துகிறது.

பயனர்களின் மேம்பட்ட வலை அனுபவங்களின் வரையறைகளில் ஐஃபோன்-னுக்கு ஒரு போட்டியாளராக G1 உள்ளது.




ஒரு அண்ட்ராய்ட் TM தொலைபேசியால் மேலும் பல்வேறு பயன்பாடுகளை ஒரே நேரத்தில் இயக்க முடியும்.

மற்றும் ஒரு தொலைபேசியின் பின்புலத்தில் பல்பணி ஒருங்கிணைப்பை எளிதாக்கி, இதர செல்ஃபோன்களைக் காட்டிலும் தொலை பேசியின் செயல்பாடுகளை மேலும் நெகிழ்வுடையதாக்குகிறது


அண்ட்ராய்ட் TM தொலைபேசிகள், அதன் ஓப்பன் சோர்ஸ் (open source), மொபைல் பிளாட்ஃபார்ம் (mobile platform) ஆகியவற்றின் காரணமாக சில விடயங்களில் புரட்சிகரமானதாக கருதப் படுகின்றன.

அனைத்து மேம்படுத்துநர்களும் (developers)அவர்கள் துறைஞான மிக்கவர்களோ அல்லது பொழுதுபோக்காக செய்பவர்களோ, அண்ட்ராய்ட் TM ஆபரேடிங் சிஸ்டம்-மிற்காக புரோகிராம்கள் மற்றும் பயன்பாடுகள் ஆகியவற்றை எழுதவும் அவற்றை அண்ட்ராய்ட் TM சந்தைக்கு சமர்ப்பிப்பதன் மூலம் வளர்ந்து வருகிற அண்ட்ராய்ட் TM திட்டப்பணிக்கு பங்களிக்கவும் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

அதன் பிறகு, G1 பயனர்கள் தங்கள் ஹேண்ட்செட்-டில் (handset) உள்ள பயன்பாடு நூலகத்தை அணுகிப்பெறுதல் மூலமாக பயன்பாடுகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்திக் கொள்ள முடியும்.

மேம்பாட்டு கருவிகள் தொகுதியை (Software Development Kit) அண்ட்ராய்ட் TM வழங்குகிறது.

தொலைபேசியின் செயல்பாடுகளுடன் ஒத்திசைவான பயன்பாடு களிடம் இருந்து பாது காக்கும் பொருட்டு, அண்ட் ராய்ட் TM ஆபரேடிங் சிஸ்டம்-மின் சில பகுதிகள், அப்பாச்சி உரிமத்தின் (Apache License) கீழ் பாதுகாக்கப் பட்டுள்ள அதே வேளையில், பெரும் பாலான பகுதிகள் பொது மக்கள் உரிமத்தின் கீழ் வெளியிடப் பட்டுள்ள காரணத்தால், இது புதுமை யான மாற்றங்களை செய்ய மேம்படுத்துநர்களை ஊக்கு -விக்கிறது.



இதன் தொடர்ச்சி 37 ம் பக்கத்தில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Java வின் வரலாறு

## Java என்றால் என்ன? வின் அவசியம் என்ன?

ஒரு தொழில்நுட்பத்தை நடைமுறையில் பயன்படுத்துவதற்கு முன்பு அதனுடைய வரலாறு மற்றும் பின்னணியை சிறிது தெரிந்துகொள்வது நல்லது.

Java–விற்கும் இந்தோனேஷியாவில் உள்ள "தீவு Java-விற்கும்" எந்த தொடர்பும் இல்லை. 'SET-TOP-BOX' விண்ணப்பம் உருவாக்கும்பொழுது சன் மைக்ரோ சிஸ்டத்தால் தொடக்கப்பட்டது.

1990-களில் எந்த மைக்ரோ-சிப்பிலும் இயங்கும் ஒரு பெயர்த்தகு பயன்பாடு ஒன்றை உருவாக்க முயன்றனர். ஆச்சரியப்படும் விதமாக, இந்தக் குழு C++-ஐ பணியை நிறைவேற்ற தேர்வு செய்தது. C++-இல் பல அம்சங்கள் உள்ளது என்பது கண்டறியப்பட்டது. அது கையடக்கமாக இருப்பதைத் தடுத்தது. எனவே, தளத்தைச் சார்ந்திருக்கும் சிறப்பம்சங்களை எடுத்தது. அவ்வாறு செய்வதால், அவர்கள் ஒரு புதிய நிரலாக்க மொழியை உருவாக்க முடிந்தது.

இதற்கு Oak என பெயரிட்டனர். இம்மொழிக்கு Oak என பெயரிட்டதற்கான காரணம் ஜேம்ஸ் கோஸ்லிங் பெரும்பாலான நேரத்தை Oak மரத்தடியில் ஒதுக்கியதே என்று கூறுகின்றனர்.

1995-இல் www (உலகளாவிய வலை) பிரபலமானது மற்றும் இணையம் பரவலாக வீடுகளின் மத்தியில் பயன்படுத்த வந்தது. இது Oak–ற்கு பெரிய வரமாக அமைந்தது. www-வும் 'Set-Top-Box' மென்பொருளில் இருந்த சிக்கல்களையும் பிரச்சனைகளையும் வழுங்கியது.

உலகம் முழுவதும் பல்வேறு தளங்களில் வேறுபட்ட இயக்கத் தளங்கள் இருந்ததால் Portable-களுக்கான அவசியம் இருந்தது. Platform Independent செய்நிரல் மொழி நிரல்களை எழுதவும், வெவ்வேறு தளங்களில் இயங்கவும் பயன்பட்டது.

சன் மைக்ரோசிஸ்டம்ஸ் சில மாற்றங்களுடன் Oak மொழியை "Java" என மாற்றம் செய்து தொடங்கியது. உலகம் முழுவதும் இருக்கும் பயனர்கள் Java-இன் சாத்தியங்களைக் கண்டுபிடித்து புயல் வேகத்தில் எடுத்துக்கொண்டனர்.

### Java என்றால் என்ன?

Google-இல் 'Java கருத்துகள்' மீது ஒரு தேடலில் 329,000,000 பக்கங்கள் தோ-ராயமாக கொடுக்கிறது. எனவே, வலைதளத்தில் Java பிரபலமாயிற்று. Java Portable மற்றும் Platform Independent நிரலாக்க மொழியாக இருக்கிறது.

ஆனால் காலம் செல்லச் செல்ல அது பல்வேறு சாதனங்கள் மற்றும் அமைப்புகளின் மூலம், பெயர்த்தகு மென்பொருளைக் கணக்கிடுவதற்கு ஒரு Complex மேடையாக மாற்றமடைந்துள்ளது.

### Java-இன் அவசியம் என்ன?


பல நிரலாக்க மொழிகள் ஏற்கனவே இருக்கும்பொழுது மற்றொரு செய்நிரல் மொழியின் அவசியம் என்ன? இதைப் புரிந்துகொள்ள Sony TV ரிமோட் கண்ட்ரோலில் இயங்கும் ஒரு திட்டத்தை உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். இந்த நிரல் எழுதப்பட்டிருக்கும் மொழி X என எடுத்துக்கொள்வோம்.

ரிமோட் கண்ட்ரோலில் In-built Chip-இல் நிரலானது இயங்கும். நாம் ஒரு தொலைக்காட்சியின் தொலை செயற் பாடுகளைப் பார்த்தால் கிட்டத்தட்ட அனைத்து பிரமாண்ட தொலைக்காட்சிகளுக்கும் அது ஒன்றாகத்தான் இருக்கும். எனவே ஒரே நிரலை எந்த பிராண்ட் டிவி ரிமோட்டிலும் பயன்படுத்தலாம்.

உண்மையில் அது இல்லை. ஏன்? ஏனெனில் வெவ்வேறு தொலைக்காட்சி ரிமோட்களில் இருக்கும் Built in chip வெவ்வேறாகும்.

ஒரே நிரல் இந்த இரண்டு சிப்களையும் இயக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் இருக்கும் இயக்கத் தளங்களில் வெவ்வேறு சிப்களைப் பொருத்த மீண்டும் தொகுக்கப்பட வேண்டும்.

100 வெவ்வேறு பிராண்டுகள் இருந்தால், இந்த செய்நிரல் 100 முறை மறு தொகுக்கப்பட்டு வெவ்வேறு பிராண்டுகளை வழக்கில் கொண்டுவர வேண்டும். எனவே புதிய நிரலாக்க மொழி தேவை. அதற்கான பதில் Java.




### Java இந்த பிரச்சனையை எவ்வாறு தீர்க்கும்?

Java வடிவமைப்பாளர்கள் "Java Virtual Machine" என்ற சிறந்த கருத்துடன் வெளியே வந்தார்கள்.

Java மற்ற மொழிகளில் பல பகுதிகளிலிருந்து வேறுபட்டதாகும். Java மற்ற மொழிகளைப் போல் தொகுக்கப்படும் பொழுது MACHINE CODE உருவாக்காமல் BYTE CODE ஐ உருவாக்கும். இந்த BYTE CODE Machine Independent ஆகும். Java Virtual Machine இயந்திரத்தில் இருக்கும் இயந்திரத்திற்குப் புரியும் வகையில் Bytecode-ஐ மாற்றும்.

TV ரிமோட் உதாரணத்தை எடுத்துக் கொள்ளலாம்.நிரல் X-ஐக் காட்டிலும் Java கொண்டு உருவாக்கப்பட்டிருந்தால் ஒரே நிரலைத் தொலைக்காட்சியின் வெவ்வேறு பிராண்ட்களில் பயன்படுத்தலாம். மேலும், அதில் Java Virtual Machine (JVM) நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

அனைத்திலும் JVM இருந்தால் அது ஒரே நிரலை அனைத்து பிராண்ட் டிவி ரிமோட்கள் புரிந்துகொள்ளும் அளவிற்கு மாற்றிவிடும். இது மிகவும் எளிமையானது. மேலும் நிரலை கையடக்கமாகச் செய்ய திறன்மிக்க முறையாகும். இம்முறையில் Java சிக்கலைத் தீர்க்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Lte தொழில்நுட்பம் என்பது என்ன?

உண்மையாகவே ஒரு நாலாவது தலைமுறையாக இருக்கின்ற அல்லது 4G வலையமைப்பில் மொபைல் அகல அலைவரிசை சேவையை பயன்படுத்துனருக்கு வழங்குவதற்கு, ஒரு வழங்குனர் தங்களுடைய முழு வலையமைப்பு உட்கட்டமைப்பையும் முழுமையாக தரமுயர்த்த வேண்டும். மொபைல் அலைவரிசை வழங்குனர்களால் தற்போது கருத்திலெடுக்கப்படும் இவ்வாறான ஒரு தொழில்நுட்பமாக, நீண்டகால அடிப்படையிலான கூர்ப்பு (Long Term Evolution- LTE) இருக்கிறது.

தொலைத்தொடர்பு தொழில் துறையினரால் உத்தியோக பூர்வமாக 4G தொழில்நுட்பம் என தற்போது வகைப்படுத்தப்பட அதிக வாய்ப்புகளை கொண்ட தொழில்நுட்பங்களில் ஒன்றாக இது இருக்கிறது. மொபைல் அகல அலைவரிசை வழங்குனர்கள் LTE தொழில்நுட்பத்தை தமது வலையமைப்புகளில் பயன்படுத்த தொடங்கும் போது அது பயன்படுத்துனர்களுக்கு பல்தரப்பட்ட நன்மைகளையும் புதிய வசதிகளையும் பெற்றுத்தரும். இது அவர்களது மொபைல் அகல அலைவரிசை சேவையிலிருந்து இப்போதையதை விட அதிக விடயங்களை பெற வழிவகுக்கும்.




மொபைல் அகல அலைவரிசை செயற்படுத்துனர்கள் LTE தொழில்நுட்பத்தை பயன்படுத்த தொடங்கும் போது பயன்படுத்துனர் தங்களது தற்போதைய 3G இணைப்புகளிலிருந்து பெறுவதை விட அற்புதமான புதிய அனுகூலங்கள் பலவற்றைப் பெறுவார்கள். இவற்றுள் முன்னையதைவிட மிக வேகமான இணைப்பு வேகமும் இருக்கிறது. இது பயன்படுத்துனர்கள் உயர்தர ஓடியோ வீடியோக்களை இணையத்தில் வேகமாக அனுப்புவதற்கு இடமளிக்கும்.

அத்தோடு தற்போது தங்கள் 3G சேவையிலிருந்து பெறுவதைவிட அதிகரித்த அளவிலான தரவுக் கோவைகளை தரவிறக்கம் செய்யும் இயலுமையும் பெற்றுத்தருகிறது. மொபைல் வலையமைப்பு வழங்குனர்களைப் பொறுத்தவரை, LTE தொழில்நுட்பமானது அவர்களது வலையமைப்பில் தற்போது உள்ளதை விட அதிக பயன்படுத்துனர்களுக்கு ஆதரவு வழங்க இடமளிப்பதோடு அதிகரிக்கும் அலை அகலத்தின் காரணமாக, தற்போதையதை விட அதிக தரவுகளின் நகர்வுகளை ஓய்வொழிச்சல் இல்லாத வேளைகளிலும் கையாள வழிவகுக்கிறது.

LTE தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் பொழுது தற்போதுள்ளதைவிட அதிக சிறப்பான வலையமைப்பு Coverage கிடைக்கும். இந்த மேலதிக Coverage ஐப் பெற வழங்குனர்கள் குறைந்தளவு உபகரணங்களையே நிறுவவேண்டியிருக்கும். இது அவர்களுடைய வலையமைப்பை தரமுயர்த்துவதற்கான செலவை பெருமளவில் குறைத்து விடுவதோடு இப்போதையவிட மிக மலிவான சேவைகளை வழங்கவும் இடமளிக்கிறது. நிலையாக பொருந்திய இணைப்பு மற்றும் அகல அலைவரிசை சேவைகளை பெறுவது மட்டுப்படுத்தப் பட்டிருக்கும். நாட்டின் ஊரக மற்றும் தொலைத் தூர இடங்களில் வாழும் பயன்படுத்துனர்கள் இந்த தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்படுவதால் மற்றவர்களை விட அதிக பயன்பெறுவார்கள். அவர்களால் கொள்வனவு செய்யக்கூடிய உயர்வேக அகலஅலைவரிசை இணைப்பின் மூலம் இணையத்தளத்தை எட்டும் வசதி அவர்களுக்குக் கிடைக்கும்.

LTE தொழில்நுட்பத்தை பயன்படுத்த தொடங்கும்போது, வேகம், வலையமைப்பு, கொள்ளளவு, Coverage என்ற வகையில் பெறப்படவிருக்கும் மேம்பாடுகள் மொபைல் அகல அலை வரிசையை பல பயன்படுத்துனர்களுக்கு எல்லாவற்றையும் விட கூடிய நடைமுறை சாத்தியம் கொண்ட விருப்பத் தெரிவாக ஆக்கிவிடும். அவர்கள் தனிப்பட்ட முறையில் அல்லது வர்த்தக நோக்கங்களுக்காக இதனைப் பயன்படுத்தினாலும் இதுதான் நிலைமையாக இருக்கும். இப்போதையை விட வேகமான இணைப்பு வேகங்களும், Coverage மட்டங்களும் கிட்டத்தட்ட இலங்கையில் எந்த இடத்தில் இருக்கும் பயன்பாட்டாளர்களுக்கும் இணையத்தளத்தை, நிலையாக பொருத்தப்பட்ட அகல அலைவரிசை இணைப்பினுடையதை ஒத்த வேகத்தில் எட்டவழி வகுக்கும். தற்போது தாங்கள் பயன்படுத்தும் சேவையைவிட சிறப்பான சேவைக்கு தரமுயர விரும்பும் பயன்படுத்துனர்களினதும் LTE தொழில்நுட்பம் தாங்கள் விரும்பிய அனைத்தையும் செய்ய இடமளிக்கும் என எண்ணும் புதிய பயன்படுத்துனர்களினதும் மனங்களை கவர்வதாக இது இருக்கும்

தற்போது LTE தொழில்நுட்பத்துக்கு ஆகப்பெரிய போட்டியாளராக இருப்பது WiMax தான். அவர்களும் கிட்டத்தட்ட LTE தருவதை ஒத்த வேகம் மற்றும் Coverage ஐத் தந்தாலும் அந்த தொழில்நுட்பங்கள் முற்றிலும் வித்தியாசமானவை.

இந்த இரண்டு தொழில்நுட்பங்களுக்குமான செலவும் வேறுபடும். வழங்குனர்கள் இவற்றுள் எந்த தொழில்நுட்பத்தை நாடுவார்கள் என்பதின் மீது இது முக்கிய தாக்கத்தை விளைவிப்பதாக இருக்கும்.

LTE தொழில்நுட்பம் பலமுறை வெற்றிகரமாக பரீட்சித்துப் பார்க்கப்பட்டிருந்தாலும் அடுத்த தலைமுறை வலையமைப்புகளில் அவர்கள் இதைத்தான் பயன்படுத்துவார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் செலுத்துவதற்கு கடன் அட்டை தேவையில்லை கைத்தொலைபேசி இருந்தால் போதும் NFC தொழில்நுட்பம்

**கடந்த சில வருடங்களாக புதிய பல தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் மிக முக்கியமாக கருதப்படுவது NFC தொழில்நுட்பமாகும். இத்தொழில்நுட்பமானது அருகிலுள்ள இரு device களுக்கிடையில் Radio அலைகள் மூலம் தொலைத்தொடர்பை ஏற்படுத்துகிறது. இது பாதுகாப்பான பணப்பரிமாற்றங்களுக்கு உதவுகிறது. இதன் மூலம் வேகமான, பாதுகாப்பான தகவல் பரிமாற்றம் நடைபெறுகிறது.**

முதல் தடவையாக இத்தகைய தொழில்நுட்பமானது கையடக்கத் தொலைபேசிகளின் sim card இல் புகுத்தப்பட்டது. இதன் மூலம் பாவனையாளர்கள் படங்கள் file கள் மற்றும் data களை எளிமையான பாதுகாப்பான வகையில் பரிமாறிக்கொள்ளலாம்.




தற்போது இதில் நடாத்தப்பட்ட ஆய்வின் போது தெரியவந்துள்ளதாவது மூன்றில் இரண்டு பகுதி வாடிக்கையாளர்கள் தமது பணப்பையை எடுத்துச்செல்வதிலும் பார்க்க கையடக்கத் தொலைபேசி மூலம் பணம் செலுத்துவது பாதுகாப்பானது என நம்புகின்றனர்.

**இத்தொழில்நுட்பம் மூலம் நடைபெறும் சில அம்சங்கள் :**

- கையடக்கத்தொலைபேசி போன்ற கையடக்க கருவிகள் மூலம் பணம் செலுத்துதல்
- கையடக்க கருவிகளுக்கு கடன் அட்டை (credit card) மூலம் தொகையீடு செய்தல்
- prepaid மூலம் தொகையீடு செய்தல்
- பயணங்களின் போது Electronic ticket களை பெறுதல்
- புகையிரத நேர அட்டவணையை பதிவிறக்கம் (download) செய்தல்
- விமானம் மற்றும் Hotel பதிவுகளை மேற்கொள்ளல்
- Camera, Cell phone, Multimedia இசை மற்றும் படங்களை பதிவிறக்கம் செய்தல்
- இரு Wireless கருவிகளுக்கிடையில் இலகுவான தகவல் பரிமாற்றங்களுக்கான இணைப்பை P2P (Peer to Peer) ஏற்படுத்துதல்

முதலாவது NFC தொழில்நுட்பமானது தொலைத்தொடர்பு சாதனங்களின் முன்னணி நிறுவனமான Nokia விலேயே அறிமுகப்படுத்தப்பட்டது.

கடந்த வருடம் சித்திரை மாதம் monaco வில் நடந்த NFC தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட மாநாட்டில் Nokia ஆனது NFC தொழில்நுட்பத்தை முழுமையாக கொண்ட மூன்றாவது Nokia 6216 classic ஐ வெளியிட்டது.

# ScreenCamera 3.0.4

**கணினியின் டெக்ஸ்டாப்பை வெப் கமெரா மூலம் விரும்பியவர்களுடன் நேடியாகப் பகிர்ந்து கொள்ள முடியும்.**


பல சந்தர்ப்பங்களில் எமது கணினியில் ஆற்றப்படும் வேலைகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படலாம். இதற்கு பல்வேறு மென்பொருட்கள் காணப் படுகின்றன.

எனினும் ScreenCamera 3.0.4 எனும் இலவச மென்பொருள் புதிதாக வெளியிடப்பட்டிருக்கின்றது.

இந்த மென்பொருள் மூலம் கணினியின் டெக்ஸ்டாப்பை வெப் கமெரா மூலம் விரும்பிய வர்களுடன் நேடியாகப் பகிர்ந்து கொள்ள முடியும்.

இது தவிர குறித்த கணினியில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை வீடியோ பதிவாகவும், புகைப்படப் பதி- வாகவும் சேமித்து பயன்படுத்த முடியும் என்பது விசேட அம்சமாகும்.

**மென்பொருளை தரவிறக்கம் செய்வதற்கு:**
**http://www.pcwinsoft.com/download.asp**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முதலாவது Infinitec USB memory drive

## Wi-Fi network மூலமாக HD media உட்பட பல தரவுகளைப்பரிமாறுவதற்கு உதவுகிறது.




Infinitec IUM plug and play device ஆனது சகல device களுடனும் இணக்கமாக அமைவதோடு flash drive களுக்கு உறுதுணையாக இருப்பது மட்டுமல்லாது USB port ஐயும் கொண்டுள்ளது.


இது இரு device களுக்கிடையில் Wi-Fi network மூலமாக HD media உட்பட பல தரவுகளைப்பரிமாறுவதற்கும் உதவுகிறது.

இதற்காக பரிந்துரைக்கப்பட்ட device களாக computers, laptop, netbooks, gaming consoles, DVD Bluray players மற்றும் digital photo frame களாகும்.

கவனத்தில் கொள்ளவும், laptop இல் இந்த tim தொழிற்பட windows XP , Vista அல்லது windows 7 operating system அவசியம். இது அமெரிக்கா,கனடா, ஐரோப்பா, மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் தற்போது அறிமுகமாகி உள்ளது.


## இசையை வீடு முழுக்க ஒலிபரப்பலாம்

Nuforce அறிமுகப்படுத்தியுள்ள இந்த Air Dac System த்தில் wireless transmitter மற்றும் receiver ஆனது CD தரத்தில் இசையை உங்கள் computer அல்லது iOS devices களிலிருந்து பெற உதவுகிறது. இதில் இரு வகை உள்ளது. NuForce iTX மற்றும் UTX




NuForce iTX என்பது wireless மூலம் உயர்தரத்தில் இசையை iPhone, iPad அல்லது iPod லிருந்து ஒலிபரப்பாக்குகிறது.

இதிலுள்ள transmitter உங்கள் Apple device இல் உள்ள 30 pin connector இல் சிறிய dongle போல் இணைந்து தொழிற்படுகிறது.



UTX என்பது USB மூலம் transmitter ஆனது உங்கள் computer உடன் இணைக்கப்பட்ட வகையாகும். இந்த இரு வகைகளும் 2.4 GHz radio அலைவரிசையில் தொழிற்படும். Air dac radio receiver களைக் கொண்டுள்ளன.



உங்களுடைய iOS device/computer அதற்குரிய transmitter உடன் இணைக்கப்பட்டுள்ளபோது உயர்தர இசையை wireless இல் AirDac receiver இணைக்கப்பட்டுள்ள audio system த்திற்கு ஒலிபரப்பலாம்.

ஒவ்வொரு transmitter ம் audioவை 4 receiver களுக்கு அனுப்பமுடியும். அதாவது உங்கள் வீட்டின் எந்தவொரு அறையிலிருந்தும் wireless இல் multiple device களுக்கு அனுப்பமுடியும்.

33 ம் பக்கத்தொடர்....

இதனை ஒத்த கருவிகள் மற்றும் அவற்றின் ஆபரேடிங் சிஸ்டம்-கள், இதற்கு முன்னர் கண்டிப்பான உரிமையுடைமை விதிகளால் கட்டுப்படுத்தப்பட்டு இருந்தன.


ஐஃபோன்-னுக்கான புரோகிராம்களை கண்டுபிடிப்பதில் ஆர்வமுள்ள மேம்படுத்துநர்கள், ஆப்பிள் நிறுவனத்திற்கு சொந்தமான பயன்பாடுகளை நெருக்கமாக பிரதிபலிக்கிற ஐஃபோன் புரோகிராம்களை உருவாக்க முயற்சிக்கும் போதெல்லாம் அடிக்கடி எதிர்ப்புகளைச் சந்தித்து வந்தனர்.

எடுத்துக்காட்டாக, ஆப்பிள் நிறுவனத்தின் ஐடியூன்ஸ் (iTunes) போன்று செயல்படுகிற அல்லது தோற்றமளிக்கிற புரோகிராம்களை



உருவாக்குவதில் இருந்து மேம்படுத்துநர்கள் தடை செய்யப்பட்டுள்ளனர். அண்ட்ராய்ட் TM பிளாட்ஃபார்ம்-மின் மற்றொரு முக்கியமான தனித்துவம் என்னவெனில், அது எந்தவொரு குறிப்பிட்ட உற்பத்தியாளருடனும் இணைக்கப்படவில்லை என்பதாகும்.

ஒரு அண்ட்ராய்ட் TM தொலைபேசியின் தனது சொந்த பதிப்பை உற்பத்திசெய்ய ஆர்வமுள்ள எந்தவொரு உற்பத்தியாளரும்



தங்கள் சொந்த கருவிகளுக்காக இந்த பிளாட்ஃபார்-மை தாராளமாக பயன்படுத்திக் கொள்ள எந்த தடையும் இல்லை. இதன் விளைவாக, ஏராளமான போட்டி செல்ஃபோன் நிறுவனங்கள் தங்கள் மொபைல் தொலைபேசிகளை முழுமையாக அண்ட்ராய்டு TM கொண்டு செயல்படுத்தி தங்கள் கருவிகளை சந்தைப்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# iPad-3 -வேகம், பலம் , துல்லியம் -



**San francsco வில் iPad இன் 3 ஆம் தலைமுறை வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் கருவியானது மிகவும் வேகமான Processor ஐயும் HD தரத்தில் video வை பதிவு செய்து இயங்கவல்லது.**

அதுமட்டுமல்லாது வேகமான கம்பியில்லாத் தகவல் பரிமாற்றமான LTE தொழில்நுட்பத்தையும் கொண்டுள்ளது. 3.1 மில்லியன் திரைப்புள்ளிகளைக் (pixel) கொண்டு மிக அற்புத படைப்பாக வெளிவந்துள்ளது. இதில் மிக முக்கிய அம்சமாக Retina திரையையும் கொண்டுள்ளது. இதன் முக்கியத்துவம் என்னவெனில் திரையில் தோன்றும் புள்ளிகளை ( pixel ) மனிதக் கண்களால் பார்க்கமுடியாது. அதாவது HD தரத்தை விட மிகவும் துல்லியமானது. தற்போது ஐரோப்பிய நாடுகளில் விற்பனைக்கு வந்துள்ளது.

பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் “ஐ பேட்” இனை வெளியிட்டது அப்பிள். ஆரம்பத்தில் இதன் பெயர் “ஐ பேட் 3” அல்லது ஐ பேட் எச்.டி ஆக இருக்குமெனக் கூறப்பட்டது. எனினும் இது “ஐ பேட்” என பெயரிடப்பட்டுள்ளமையானது பலருக்கும் வியப்பாக இருந்தது. காரணம் அப்பிளின் முதல் tablet பெயரும் “ஐ பேட்” ஆகும் சில சாதனங்கள் வெளியாகிய பின்னரே ஆர்வத்தை ஏற்படுத்தும். ஆனால் சில தயாரிப்புக்கள் வெளியாவதற்கு முன்னரே ஆர்வத்தைத் ஏற்படுத்தும் அப்பிளின் தயாரிப்புகளும் அவ்வாறானதே.


அப்பிள் தயாரிப்புகள் வெளியாவதற்கு முன்னரே அது தொடர்பில் பல்வேறு வதந்திகள் வெளியாகும். கடைசியாக வெளியாகிய “ஐ பேட்” உம் இதற்கு விதிவிலக்கல்ல. ஐ-பேட் வெளியாகும் முன்னரே அது தொடர்பில் பல்வேறு செய்திகள் கசிந்தன. எனினும் தற்போது வெளியாகியுள்ள ஐ-பேட்டுடன், அச் செய்திகளை ஒப்பிடும் போது சில உண்மை யாகவுள்ளன. அப்பிளின் முன்னைய வெளியீடுகளான ஐ பேட், மற்றும் ஐ பேட் 2 வரிசையிலேயே இதுவும் வெளியாகியுள்ளது.

LTE தொழில்நுட்பமானது தற்போது நாம் பாவிக்கும் UMPS தொழில்நுட்பத்தை விட 10 மடங்கு வேகமானது.தரவுகளை upload செய்யும் வேகமான தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தினாலும் ஐரோப்பாவிலும் ஒரு சில நாடுகளிலேயே இத்தொழில்நுட்பம் காணப்படுகிறது. அமெரிக்காவில் AT and T நிறுவனம் இந்த LTE தொழில்நுட்பத்தை வழங்குகிறது. (“LTE தொழில்நுட்பம் என்றால் என்ன “ என்ற விபரத்தை 35வது பக்கத்தில் தெரிந்து கொள்ளலாம்.)

முன்னைய மாதிரிகளின் தோற்றத்துடன் ஒப்பிடும் போது பெரிய அளவில் மாற்றங்கள் எதுவும் காணப்படவில்லை. எனினும் இதில் அனைவரது கவனத்தினையும் ஈர்த்தது “ஐ பேட் ”டின் திரையாகும். அப்பிளின் ஐ போன் கொண்டுள்ள “ ரெட்டினா“ வகை திரையையே இதுவும் கொண்டுள்ளது. இதன் ரெசலூசன் 2048 X 1536 என்பதுடன் இத்திரையின் படவணு அடர்த்தி (Pixel density) 264 ஆகும்.



இது தற்போது சந்தையில் உள்ள பல எச்.டி. தொலைக்காட்சிகளை விடத் துல்லியமானதாகும். இது Dual-core, 1GHz Cortex-A9 புரசசரின் மூலம் இயங்குகின்றது. இதனுடன் 1080 p வீடியோ ரெக்கோர்டிங் செய்யக்கூடிய 5 மெகா பிக்ஸல் கெமராவையும் கொண்டுள்ளது.



**இதன் மற்றைய தொழில்நுட்ப அம்சங்கள் சில :**

- Apple A5X Chipset
- Dual-core 1 GHz Cortex-A9 CPU
- PowerVR SGX543MP4 GPU
- 5 MP,2592 x 1944 pixels,autofocus touchfocus, geo-tagging. HDR, face detection Camera
- HSDPA, 21 Mbps HSUPA, 5.76 Mbps, LTE, 73 Mbps Rev. A, up to 3.1 Mbps

இவ்வருட ஜனவரி மாதம் வரை சுமார் 55 மில்லியன் ஐ பேட்களை அப்பிள் விற்பனை செய்துள்ளது. அதன் முன்னைய tablet களுக்கும் சந்தையில் நல்ல கேள்வி நிலவுகின்றது. இந்நிலையில் தற்போது புதிய “ஐ பேட்” டையும் அறிமுகப்படுத்தியுள்ளது. எனவே பொறுத்திருந்து பார்ப்போம், இது சந்தையில் நல்ல வரவேற்பைப் பெறுகின்றதா என!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mbps மற்றும் MBps ஆகிய இரண்டுக்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன?




**MBps என்பது "தலா ஒரு நொடிக்கு இடமாற்றப்படும் மெகாபைட்கள் (Megabytes) என்பதன் சுருக்கக் குறியீடாகும், அதே நேரத்தில் MBps மற்றும் Mbps ஆகியவை "தலா ஒரு நொடிக்கு இடமாற்றப்படும் மெகாபிட்-கள் (megabits)" என்பதன் சுருக்கக் குறியீடாகும்.**

எட்டு மெகாபிட்-கள் என்பன ஒரு மெகாபைட்-க்கு சமமாகும். இரண்டு புள்ளிகள் இடையே தலா ஒரு நொடிக்கு எவ்வளவு தரவுகள் இடமாற்றம் செய்யப்பட முடியும் என்பதைகுறிப்பிட இத்தகைய சுருக்கக் குறியீடுகள் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன. மெகாபிட்கள் மற்றும் மெகாபைட்-கள் ஆகியவற்றை குறித்து அலசுவதற்கு முன்பாக, நாம் சற்று பின்னோக்கி செல்வோம்.

தரவுகளின் ஒரு பிட் (bit) என்பது ஒரு ஒற்றை "ஆன்" (on) அல்லது "ஆஃப்" (off) இலக்கம், ஒரு ஒன்று அல்லது சுழியம் ஆகும். ஒரு ஒற்றை தன்மை, அல்லது ஒரு தரவு பைட் என்பதை குறிப்பிட எட்டு பிட்-கள் தேவைப்படுகிறது.

- 1 byte = 8 bits
- 1 kilobyte (K / Kb) = 2^10 bytes = 1,024 bytes
- 1 megabyte (M / MB) = 2^20 bytes = 1,048,576 bytes
- 1 gigabyte (G / GB) = 2^30 bytes = 1,073,741,824 bytes
- 1 terabyte (T / TB) = 2^40 bytes = 1,099,511,627,776 bytes
- 1 petabyte (P / PB) = 2^50 bytes = 1,125,899,906,842,624 bytes
- 1 exabyte (E / EB) = 2^60 bytes = 1,152,921,504,606,846,976 bytes

குழப்பம் ஏற்பட சாத்தியமுள்ளபடியால், தரவுகளின் மடங்குகளை கணக்கிடுவதற்கு உள்ள இரண்டு வெவ்வேறு முறைகளில் எது என்பது குறிப்பிடப்படவேண்டும். அதாவது மேலே குறிப்பிட்டுள்ளதைப் போன்று தசம எண்முறை மற்றும் ஈரியல் எண்முறை ஆகியவை. கணினிசேமிப்பகம் மற்றும் நினைவகம் ஆகியவற்றில் பயன்படுத்தப்படுகிற ஈரியல் எண்முறையின்படி, ஒரு KB என்பது 1000 பைட்-களுக்கு சமமானது அல்ல, ஆனால் அது 1024 பைட்-களுக்கு சமமானது ஆகும்.

இது ஏனென்றால், 1000 தரவு பைட்-கள் குறித்து அட்டவணைப்படுத்துதல் (indexing) அல்லது கோர்வையாக விளக்குதல் (mapping) தகவல்களை சேமித்துவைக்க 24 கூடுதல் பைட்-கள் பயன்படுத்தப்படுகின்றன. தொழில்நுட்ப ரீதியாக, இந்த நேர்வில் உள்ள பெயர்கள் கிபிபைட் (KiB) மற்றும் மெபிபைட் (MiB) ஆகும்,

ஆனால் இவை பொதுமக்களுக்கு முறையாக பயிற்றுவிக்கப்படாத காரணத்தால், பலரும் "MB" என்பதற்கு 1024 கிலோபைட்-கள் எனவும், ஒரு சிலர் 1000 கிலோபைட்-கள் எனவும் பொருள்கொள்ளும் நிலை உள்ளது. எனினும், MBps அல்லது mbps ஆகிய இரண்டில், தசமஎண் முறையே பொருந்தக்கூடியது, ஏனெனில் இங்கு மேற்கோள் என்பது தரவுகள் இடமாற்ற விகிதங்களே அன்றி தரவுகள் சேமிப்பு அல்ல.

பல்வேறு வன்பொருள் கருவிகளின் செயல்பாட்டு அளவுகளை அளவிடுவதற்காக, தரவுகள் இடமாற்ற விகிதங்கள் மிகவும் எளிதாக உள்ளன. USB மற்றும் ஃபயர்வயர் போர்ட்கள் (Firewire® ports) முதல் மெமரி கார்ட் ரீடர்-கள் (memory card readers) மற்றும் மொபைல் கருவிகள் வரை அனைத்தும் அதற்கேற்ற இடமாற்ற விகிதங்களோடு தொடர்புடையவையாகும்.

மற்றும் பெரும்பாலும் தலா ஒரு நொடிக்கு இடமாற்றப்படும் மெகாபிட்கள் அல்லது மெகாபைட்களால் அளக்கப்படுகின்றன.

கம்பியில்லா G வலைப்பின்னல் (802.11g) என்பது 54 mbps உடைய அதிகபட்ச இடமாற்ற விகிதத்தை கொண்டுள்ளது. இது, மற்ற அனைத்து இழை ஒளியியல் இணைய திட்டங்களைக் காட்டிலும் மிக அதிகமானதாகும். நல்வாய்ப்பாக, கம்பியில்லா திட்டம் உங்கள் இணைய உலாவலின் வேகத்தை குறைக்காது.

தற்போது வந்திருக்கும் கம்பியில்லா ஸ்டாண்டர்ட் (802.11n) உங்கள் இணைய இணைப்பின் வேகத்தை அதிகரிக்காத போதிலும், ஒரிட வலைப்பின்னல் செய்யப்பட்ட கணினிகள் (local networked computers) இடையே 100 mbps வரை, அல்லது G வலைப்பின்னல்களின் தரவுகள் இடமாற்ற விகிதத்தை விட இருமடங்கு வேகமான தரவுகள் இடமாற்ற விகிதங்களை அனுமதிக்கிறது. எடுத்துக் காட்டாக, ஒரு வழக்கமான டிஜிட்டல் சந்தாதாரர் இணைப்பு (DSL) திட்டம் 1,500 kbps அளவுள்ள உயர் இடமாற்ற வரம்பை கொண்டிருக்கக்கூடும், மற்றும் இது 1.5 mbps எனவும் குறிப்பிடப்படலாம்.

ஒரு கேபிள் திட்டம் 5,000 kbps அல்லது 5 mbps என விளம்பரப்படுத்தப்படலாம் மற்றும் இழை ஒளியியல் இணையம் (fiber optic Internet) என்பது 50 mbps அல்லது அதற்கு அதிகமான வேகங்களையும் கூட எட்ட முடியும்.

இவற்றின் சுருக்கக் குறியீடுகள் கிட்டதட்ட மிகவும் நெருக்கமாக உள்ள காரணத்தால், அவை பெரும்பாலும் தவறான நேர்வில் வெளிப்படுத்தப்படுகின்றன.

சந்தேகம் ஏற்படுகிற போது, கிலோபிட் அல்லது கிலோபைட் போன்றவற்றிற்கு இணையான மொழிபெயர்ப்புகளை பார்த்தறிய வேண்டும், அல்லது குறிப்பிடப்பட்டுள்ள தரவரைவுகள் உண்மையிலேயே தலா ஒரு நொடிக்கு இடமாற்றப்படும் மெகாபிட்களா அல்லது தலா ஒரு நொடிக்கு இடமாற்றப்படும் மெகாபைட்களா என யாரிடமாவது கேட்டறிவது நல்லது.

இணைய சேவை திட்டங்களை கருத்தில் கொள்ளும்போது, நாம் வேகத்தை ஒரு மதிப்பாக மாற்றி அளவிட வேண்டியுள்ளது. ஏனெனில், அத்தகைய திட்டங்கள் யாவும், தலா ஒரு நொடிக்கு இடமாற்றப்படும் கிலோபிட்கள் (kbps) அல்லது தலா ஒரு நொடிக்கு இடமாற்றப்படும் மெகாபிட்களை குறிப்பிடுகிற பதிவிறக்க மற்றும் பதிவேற்ற வேகங்களால் விளம்பரப் படுத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயில்பிரேக்கிங் என்றால் என்ன?


## (Jailbreaking)

மின்னணுவியலில், ஜெயில்பிரேக்கிங் என்பது ஹேக்கிங் (hacking) என்பதை குறிக்கிற அல்லது ஒரு மின்னணுக் கருவியின் இயல்பான பத்திரத்தன்மை மற்றும் செய்பணி வரையறைகளை தந்திரமாக மீறி சுற்றிவளைக்கிற செயலைக் குறிக்கிற பேச்சுவழக்கு சொல் ஆகும்.


பொதுவாக இந்த சொல், ஆப்பிள் நிறுவனத்தின் iOS மொபைல் ஆபரேடிங் சிஸ்டம் ஹேக்கிங் செய்யப்படுவதை குறிப்பதாக இருந்தாலும், இது இதர கேட்ஜெட் (gadgets) வகைகளுக்கும் பொருந்தும். கருவியை ஜெயில்பிரேக்கிங் செய்வதன் மூலமாக, ஒரு பயனரால் வழக்கமாக அணுகிப்பெறவே முடியாத அம்சங்களையும் அதன்பிறகு அணுகிப்பெற முடிகிறது.

ஜெயில்பிரேக்கிங்-கின் முக்கிய நோக்கம் என்பது, கருவியில் அங்கீகரிக்கப்படாத மென்பொருளை நிறுவி இயக்க பயனரை அனுமதிப்பதாகும். வலை பயன்பாடுகள் (Web applications) அல்லது சுருக்கமாக ஆப்ஸ் (apps) என அழைக்கப்படும் மென்பொருட்களே iOS-சில் மிகவும் பொதுவாக பதிவிறக்கப்படுகின்றன. ஆப்பிள் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆப்ஸ் மட்டுமே ஆப் ஸ்டோர் (app store)-ரில் புதிப்பிக்கப்படுகின்றன. அதன் விளைவாக, அதிகாரப்பூர்வ ஆப்ஸ்-களுக்கான தேர்வு என்பது ஓரளவு வரையறுக்கப்பட்டுள்ளது.

ஒரு ஜெயில்பிரேக்கிங் செய்யப்பட்ட தொலைபேசியால் மூன்றாம் தரப்பு மேம்படுத்துநர்களிடம் இருந்து ஆப்ஸ்-களை பதிவிறக்கம் செய்ய முடியும். இதனால் பயனரின் விருப்பத்தேர்வுகள் மேலும் விரிவாக்கப்படுகிறது. மற்றொரு சாதகம் என்னவெனில், விருப்பத்திற்கு ஏற்ப தனி பயனாக்கப்பட்ட தீம்(theme)-கள் மற்றும் ரிங்டோன(ringtone)-கள், வீடியோ பதிவு (video recording), மற்றும் பல்பணி ஒருங்கிணைப்பு போன்ற புதிய அம்சங்களை அணுகிப் பெற முடிவதாகும். இத்தகைய அம்சங்கள் எல்லாம், பெரும்பாலான அனைத்து ஸ்மார்ட் தொலைபேசிகளிலும் கிடைக்கிறதே என பலர் வாதிடலாம்.



**ஜெயில்பிரேக்கிங் என்பது குறிப்பாக, ஒரு ஜெயில்பிரேக்கிங் செய்கிற புரோகிராம்-மை கருவியில் பதிவிறக்குவதன் மூலமாக செய்யப்படுகிறது. சிஸ்டம்(system)-த்தின் குறியீட்டில் உள்ள பலவீனங்களை புரோகிராம் தன்னலப்படுத்தி, புதிய கட்டளைகளை நிறுவுகிறது. ஒருமுறை ஃபேர்ம்வேர் (firmware) மாற்றியமைக்கப்பட்டவுடன், உற்பத்தியாளரின் கட்டுப்பாடுகள் அகற்றப்படுகின்றன. இது எந்தவொரு புரோகிராம்-மை இயக்குவதற்கும் கருவியின் புரோகிராம் செயலாக்க குறியீட்டை மாற்றுவதற்கும் பயனரை அனுமதிக்கிறது.**



2007ம் ஆண்டில் ஐஃபோன் (iPhone®) வெளியிடப்பட்டு ஒரு மாதத்திற்கும் குறைவான காலத்திற்குள் முதல் iOS குறியீட்டு குறைபாடு கண்டறியப்பட்டது. அதற்கு அடுத்த ஆண்டில், புரோகிராம் எழுதுபவர்கள் குழு, பெரும்பாலான பயனர்கள் ஐஃபோன்-னை ஜெயில்-பிரேக்கிங் செய்வதற்கு எளிதான ஒரு புரோகிராம்-மை விநியோகித்தது. அந்த புரோகிராமின் அடுத்தடுத்த பதிப்புகள் பின்னர் ஐபொட் டச் (iPod touch®) மற்றும் ஐபேட் (iPad®) ஆகியவற்றை ஹேக் (hack) செய்வதற்கு பயன்படுத்தப்பட்டது.

ஒரு தொலைபேசியை அன்லாக்கிங் (unlocking)செய்தல் என்பதும் ஜெயில் பிரேக்கிங் செய்தல் என்பது முற்றிலும் வெவ்வேறானது. இது அடிக்கடி தவறாக மாற்றி புரிந்துக்கொள்ளப்படுகிறது. எனினும், ஒரு தொலைபேசியை முதலில் ஜெயில்பிரேக்கிங் செய்யாமல் பெரும்பாலான அன்லாக்கிங் முறைகள் செயல்படுத்தப்பட முடியாது. ஒரு அன்லாக் செய்யப்பட்ட தொலைபேசி, வேறு ஒரு வலைப்பின்னல் வழங்குநரிடம் இருந்து மற்றொரு சிம் கார்ட்(SIM-card)-டை தொலைபேசியில் இயங்க அனுமதிக்கிறது. பேர்ம்வேர் பக்ஸ் (firmware bugs)-ஸை முற்றிலும் கட்டுப் படுத்துகிற புதுப்பித்தல்களை வெளியிடுவதன் மூலமாக, உற்பத்தியாளர்கள் இந்த பாதிப்பை தடுக்க முயற்சிக்கின்றனர். இந்த புதுப்பித்தல்கள் எல்லாம் தவறில்லாதவைகள் அல்ல. வழக்கமாக நடந்துவருவதைப் போல, அவற்றில் உள்ள மற்றொரு குறியீட்டு பலவீனத்தை கண்டறிய புரோகிராம் எழுதுபவர்களுக்கு வெறும் ஒரு சில மாதங்களே தேவைப்படும். இவையெல்லாம் ஜெயில் பிரேக்கிங்-கில் உள்ள அபாயங்கள் ஆகும்.

2010ம் ஆண்டு நிலவரப்படி, ஐக்கிய அமெரிக்காவில் (US) ஒரு ஆப்பிள் நிறுவன தயாரிப்புப்பொருளின் ஜெயில்பிரேக்கிங்-கில் சட்டப்பூர்வ கடப்பாடு எதுவுமில்லை.

ஐக்கிய அமெரிக்க காப்புரிமை அலுவலகம் டிஜிட்டல் புத்தாயிரமாண்டு காப்புரிமைச் சட்டத்தில் (DMCA) இருந்து ஜெயில்பிரேக்கிங்-கிற்கு விலக்கு அளித்துள்ளது. ஆப்பிள் இன்க். (Apple Inc.) தமது தயாரிப்புப் பொருட்களை மாற்றம்செய்தால், அதன் விளைவாக, உத்தரவாதம் செல்லாதது ஆகிவிடும் என கூறியுள்ளது.

பதிவிறக்கம் செய்யப்படுகிற ஆப்ஸ்கள் சான்றளிக்கப்படாதவைகளாக உள்ளபடியால், கருவியில் மால்வேர் (malware) ரை நிறுவுவதில் பயனர் இடர்களை எதிர்கொள்கிறார். இதனைத் தொடர்ந்து, தொலைபேசியை செயலிழக்கச் செய்யவும் வாய்ப்புள்ளது. அதாவது கேட்ஜெட்-டின் ஃபேர்ம்வேர்(firmware) மிகவும் பலமாக சேதமடைகிற சூழலில், தொலைபேசியானது அடிப்படையிலேயே பயனற்றுப் போய்விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 10ன் இடைமுகம் குறித்த தகவல்கள்,

**மைக்ரோசாப்ட் நிறுவனம் தன்னுடைய அடுத்த இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 10ல், புதிய இடைமுகம்(Interface) ஒன்றை வழங்குகிறது. இது குறித்த தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.**

விண்டோஸ் 8 பயன்படுத்த இருவகை இடைமுகம் கிடைக்கின்றன. வழக்கமான தொடு திரை இல்லாத பயன்பாடு மற்றும் தொடுதிரை பயன்பாடு. இவை இரண்டிலும் டைல் பட்டன்கள் பயன்படுத்தப்படுகின்றன.

டெஸ்க்டாப் திரையில் தெளிவாக இவை காட்டப்படும். கும்பலாக குழப்பம் ஏற்படுத்தும் வகையில் இருக்காது.

மைக்ரோசாபட் அங்கீகரிக்கும் சாப்ட்வேர் தொகுப்புகளை இன்ஸ்ரால் செய்வதும், அவற்றை நீக்குவதும் மிக எளிதாக மேற்கொள்ள விண்டோஸ் 8 உதவிடும்.

மெட்ரோ இடைமுகத்தை விரும் பாதவர்கள், வழக்கம் போல டெஸ்க்டாப் தோற்றத்தை வைத்துக் கொண்டு பயன்படுத்தலாம்.

ஆனால் தற்போது விண்டோஸ்-8ஐ பயன்படுத்திப் பார்த்த பயனாளர்கள் அனைவரும் மெட்ரோ இடைமுகப் பயன்பாட்டினையே அதிகம் விரும்பு வதாகக் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதனாலேயே இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 10ல் இதனுடன் இணைந்த வகை இடைமுகம் தரப்படுகிறது.

இதுவரை தரப்பட்ட கண்ட்ரோல் பட்டன்கள், டூல்பார் மற்றும் ஸ்குரோல் பார்கள் பயன்படுத்தாத போது, திரையில் தெரியாத வகையில் அமைந்திருக்கும்.

இதுவே இதில் தரப்பட இருக்கும் மிகப் பெரிய மாற்றமாகும். எனவே வழக்கமான இணைய தேடல் என்பது, ஏறத்தாழ முழுத் திரைக் காட்சியாக அமையும். இப்போது F11 கீயை அழுத்திப் பெறும் முழுத் திரைக் காட்சியாகவே இது இருக்கும்.

வழக்கமாக இன்டர்நெட் எக்ஸ்புளோரர் திறந்தவுடன், நாம் அமைத்துள்ள ஹோம் பேஜ் கிடைக்கும் அல்லது காலியான ஒரு பக்கம் கிடைக்கும்.

புதிய இன்டர்நெட் எக்ஸ்புளோரரில் இரண்டு பிரிவு டைல்ஸ் அமைப்பு கிடைக்கும். ஒரு பிரிவில் பயனாளர் அடிக்கடி பயன்படுத்தும் தளத்திற்கான லிங்க் இருக்கும்.

அடுத்த பிரிவில் பயனாளர் தேர்ந்தெடுத்த தளங்களின் தொடர்புக்கான பட்டன்கள் இருக்கும். இது ஏறத்தாழ தற்போதைய புக்மார்க்குகளைப் போன்றது. பயனாளர் இந்த தளங்களைப் பின் ("pin") செய்திட வேண்டியதிருக்கும்.

ஒரே நேரத்தில் பல இணைய தளங்களைத் திறப்பது, புதிய இன்டர்நெட் எக்ஸ்புளோரரில் ஒரு புதிய அனுபவமாக இருக்கும். இதுவரை திரையின் மேல் பகுதியில், ஒவ்வொரு தளத்திற்குமான அடையாளம் டெக்ஸ்ட்டாகக் காட்டப்பட்டு இருந்தது. இனி ஒவ்வொரு இணைய தளமும் ஒரு சிறிய தளப் படமாகக் காட்டப்படும்.

இவை திரையின் கீழாக இடம் பெறும். பயனாளர்கள் இந்த தளத்திற்கான சிறிய படங்களில் கிளிக் செய்து தாங்கள் விரும்பும் இணைய தளங்களைப் பார்வையிடலாம். இது ஏறத்தாழ ஐ-பேட் சாதனத்தில் தரப்படும் வசதியினை ஒத்ததாகும்.

ஒரு டச் ஸ்கிரீன் திரையில் இணைய உலா மேற்கொள்ளத் தேவையான அனைத்தும் மிக எடுப்பாக காட்டப்படும் வகையில் புதிய இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 10 கிடைக்க இருக்கிறது.

ஆனால் பயனாளர்கள் இன்னும் பழைய பாரம்பரிய இன்டர்நெட் எக்ஸ்புளோரரைத் தான் அதிகம் பயன்படுத்துவார்கள் என மைக்ரோசாப்ட் எதிர்பார்க்கிறது. மாற்றத்திற்கு உடனே மசிய மாட்டார்கள் என்று எண்ணுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைத்தொலைபேசியில் பேனையால் கிறுக்கவோ அல்லது எழுதவேண்டுமா?

### வெளிவந்துள்ளது *samsung Galaxy S*

**Samsung Galaxy S Smart phone இன் upgraded version ஆக Galaxy S Wifi 4.2 வெளிவந்துள்ளது. அத்துடன் புதிய tablet ஆக Galaxynote 10.1 காணப்படுகிறது.**

இந்த Samsung Galaxy S wifi 4.1 ஆனது WVGA இன் resolution அற்ற 4.2 inch அளவுடைய IPS TFT Screen ஐ கொண்டுள்ளது. அத்துடன் single core 1GHz processor உடன் Android 2.3 Gingerbread Operating system ஐக் கொண்டுள்ளது. இது இரு வகைளில் வெளிவந்துள்ளது. 8GB மற்றும் 16 GB உள்ளக சேமிப்புடன் (Internal storage) micro SD card slot மூலம் 32 GB வரை விரிவாக்கமுடியும். இதன் handset 512 MB Ram யும் 2mp அளவுடைய camera வையும் கொண்டுள்ளது.



Samsung Galaxy Note 10.1 tablet ஆனது S Note system ஐக் கொண்டுள்ளது. அதாவது பேனையால் இதில் எழுதவோ, கிறுக்கவோ முடியும். இதில் recipe, cards, diary, magazine மற்றும் பலவற்றுக்கான template கள் அடங்கியுள்ளன.

இதன் hardware ஐப் பார்ப்போமானால் 1.4 GHz dual-core processor, 1280X800 resolution உடன் அடங்கிய 10.1 inch அளவுடைய screen, 3mp அளவுடைய பின்பக்கம் பார்க்கக்கூடிய camera, 2mp அளவுடைய முன்பக்கம் பார்க்கக்கூடிய camera, 1GB Ram, Wifi, Bluetooth மற்றும் HSPA+ தொடர்பையும் கொண்டுள்ளது.

இதில் Android 4.0 ICS Operating system 3G model இல் aGps ம் wifi model sGps ம் உள்ளது.

இது அதன் உள்ளக சேமிப்பகத்தின் அடிப்படையில் 3 வகைகளாக உள்ளது. 16 GB , 32 GB மற்றும் 64 GB ஆகும். இவை அனைத்தும் micro SD மூலம் 32 GB வரை விரிவாக்கக்கூடியவை.

## கருத்தரங்கு நடாத்த பாரிய projector தேவையில்லை இனி கைத்தொலைபேசி மட்டும் இருந்தால் போதும்

**வாடிக்கையாளர்களின் தேவைகள், எதிர்பார்ப்புகள் மாறிக்கொண்டேயிருக்கின்றன. இதனால் Samsung இன் பரிணாம வளர்ச்சியின் புதிய தொரு திருப்பமாக உலகின் மிகமெல்லிய projector உடன் கூடிய phone ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் தடிப்பு 12.5mm ஆகும்.**




இது உங்கள் படங்கள், வீடியோக்களை கையில் எடுத்துச்செல்ல மிக வசதியாய் இருக்கும். வர்த்தகர்கள் தங்கள் presentation களை தங்கள் phone லியே காட்டக்கூடியதாக இருக்கும். Android 2.3 Gingerbread, 4 inch WVGA Screen, 5 mp Camera, 1 GHz dual core processor மற்றும் micro SD card மூலமாக விரிவாக்கத்தக்க 8GB உள்ளடக்க நினைவகத்தையும் இந்த கைத்தொலைபேசி கொண்டுள்ளது.

அத்துடன் 2000 mAh battery மற்றும் இதன் projector 15 lumens bulb களைக் கொண்டுள்ளதுடன் வலுவான 50 inch image களைத் தரக்கூடியதாகவும் உள்ளது.



## இன்னுமோர் புதிய அம்சம் iPad ல்

உங்கள் iPad ஐ destop video conferencing phone ஆக மாற்றமுடியும். இதற்கு முதலில் செய்யவேண்டியது iPad ஐ Bluetooth dock உடன் முதற்தடவையாக உபயோகிக்கும் போது இணைக்கவேண்டும்.



இதன் மூலம் உங்கள் iPad ஐ destop video conferencing phone ஆக உபயோகிக்கலாம். உண்மையில் Bluetooth ஆனது வர்த்தக ரீதியில் பாவனையாளர்கள் எடுத்துச் செல்லக் கூடியதாக உள்ளது.


எந்த வேளையிலும் அலுவலகம்/வீடு செல்லும் வேளையிலும் கூட ipad ஐ destop video conferencing phone ஆகப் பயன்படுத்தலாம். Bluetooth dock, ipad இணைப்பில் இருக்கும் போது வலுவேற்றியாகவும் தொழிற்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Megaupload இணையத்தளம் முடக்கம் தாபகர் நியுசிலாந்தில் கைது...




*6.7 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களைக்கொண்ட Filesharing , இணையத்தளமான Megaupload.com இன் தாபகருடன் 3 சந்தேகநபர்களையும் நியூசிலாந்து பொலிசார் சில ஆடம்பர சுகபோக பொருட்களுடன் கைது செய்து அமெரிக்க நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளனர்.*




ஆயதம் தாங்கிய பொலீசார் Auckland லுள்ள KimDotcom இன் மாளிகையை முற்றகையிட்டனர். இவர் பதிப்புரிமையுள்ள இணையத் தளங்களை திருடிய குற்றத்திற்காக கடந்த மாதம் இவருடைய இணையத்தளம் அமெரிக்க அதிகாரிகளால் மூடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பொலிசாரால் 6 மில்லியன் நியுசிலாந்து டொலர் மதிப்புள்ள ஆடம்பரக்கார், 1959 pink cadillac, Rolls Royce மற்றும் 11 million டொலர் கைப்பற்றப்பட்டுள்ளது.


Dotcom என்பவர் 37 வயதான Kimschmitiz என்னும் ஜேர்மனியர் .இவர் நியுசிலாந்து மற்றும் Hongkong வதிவிட உரிமையாளராவர். கைது செய்யப்பட்ட 4 பேருக்கும் Auckland நீதிமன்றத்தில் பிணை மறுக்கப்பட்டுள்ளது என பொலிசார் தெரிவித்துள்ளனர். இவரது குற்ற நடவடிக்கைகளுக்காக 20 ஆண்டுகாலம் சிறைத்தண்டனை வழுங் குமாறு வாஷிங்டன் Auckland நீதிமன்றத்தை கேட்டுள்ளது.

FBI யினால் இன்னும் 7 நபர்கள் Megaupload.com மூலமாகவும் மற்றும் இதை சார்ந்த ஏனைய இணையத்தள குற்றச்செயல்கள் புரிபவர்களாக கண்டறியப் பட்டுள்ளனர். இந்த சந்தேக நபர்கள் குற்றச்செயல்கள் மூலம் 175 million டொலர்களுக்கு மேலாக திரைப்படங்கள் மற்றும் TV நிகழ்ச்சிகளை கொள்ளையடித்து சம்பாதித்துள்ளனர். மேற்படி 7 நபர்களும் ஐரோப்பியர்களாவர்.

Megaupload ஆனது Hongkong இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் AFP இனால் இது தேடப்பட்டபோது ஒரு தபால்நிலைய முகவரியுடன் shell company யாக ஒரு சீன நகரத்தில் இருப்பதாக தெரிந்தது. எனினும் மறைமுகமாக இணையத்தளங்களைக் களவாடும் போது இவ்விணையத்தளமானது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் இணையத்தளத்தில் அத்துமீறி நுழைந்து களவாடும் குற்றச்செயல்களுக்கு இனி வரும் காலத்தில் புதிய சட்டங்கள் உருவாக்கப்படும் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். Megaupload ஆனது கொலிவூட் நட்சத்திரங்கள் மற்றும் பாடகர்கள் மத்தியில் மிகப்பிரபல்யம் வாய்ந்தது.Mega upload Ltd மற்றும் Vester Ltd எனும் கம்பனிகள் இரண்டும் இணையத்தளங்களை களவாடி பணம் சம்பாதிப்பவையாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.




Vestor Ltd இன் முழுமையான பங்குதாரராக இருப்பவர் KimDotcom இவருடன் மற்றும் 6 சந்தேக நபர்கள் Estonia, Germany, Netherland மற்றும் Slovakia நாட்டை சேர்ந்தவர்கள்.




Megaupload இணையத்தள தாபகர்

"file sharing என்றால் என்ன? " விபரம் 9 ம் பக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத்தளங்களை உடைத்து உள்நுழைபவருடன் (Hacker) சில நிமிடங்கள்......



**இணையத்தளங்களை உடைத்து உள்நுழைபவர்கள் உலகம் முழுவதிலும் பரந்து காணப்படுகின்றனர். தற்போது இது அநேகமானோருக்கு பரவலான ஒரு நோயாகவே உள்ளது. இதனால் இவர்களுக்கு என்ன லாபம்? எது இவர்களை இவ்வாறு செய்யத்தூண்டுகிறது?**

**இந்தக் கேள்விகளுக்கான விடையை கடந்த மாதம் 13 ஆம் திகதி Microsoft இன் இந்திய இணையத்தளத்தை உடைத்து சீனாவைச் சேர்ந்த Evil shadow எனும் குழுவைச்சேர்ந்த Masakojun ( 7zl ) என்பவரை நாம் சந்தித்து உரையாடினோம். அவர் எம்முடன் பல சுவாரஸ்யமான தகவல்களையும் ஒரு " hacker " ஆக தமது வாழ்கையைப்பற்றி பயமற்ற இந்த சீன நாட்டு இளைஞன் எமக்கு கூறுவதைப் பார்ப்போம்.**

**கணினிக்களம்** : எல்லாவற்றிற்கும் முதலாக தயவு செய்து எமது வாசகர்களுக்கு உங்கள் பெயரைக் கூறுங்கள் ?

**7zl** : எனது network code 7zl ஆனால் எனது பெயர் Masako Jun.

**கணினிக்களம்** : பொதுவாக hackers அவர்களுடைய உண்மையான பெயரை கூறமாட்டார்கள். சட்ட அதிகாரிகளுக்கு நீங்கள் பயமில்லையா ?

**7zl** : ஏன் பயப்படவேண்டும் ? நான் கள்வன் இல்லை. நான் Microsoft இற்குச் செய்த செயலினால் அவர்களின் பாதுகாப்பானது மேலும் உயர்வடைந்திருக்கிறது. நான் எந்த தகவல்களையும் (data) பிரசுரிக்கவில்லை. ஆனால் இந்த தகவல்கள் ஐரோப்பிய அமெரிக்க hacker களின் கையில் சிக்கியிருந்தால் உண்மையில் இது அவர்களுக்கு பெறுமதி மிக்கதாக இருந்திருக்கும்.

**கணினிக்களம்** : 7zl என்றால் என்ன ? இதன் அர்த்தம் என்ன ?

**7zl** : எனது பழைய நண்பியின் விருப்பமான எண் 7, எனது செல்லப்பெயரின் விருப்பமான எண்ணும் 7 , இரண்டாவது சொல் " zl " எனது செல்லப்பெயர்.

**கணினிக்களம்** : நீங்கள் Black hat hacker ? grey hat hacker ? white hat hacker ? அல்லது அநாமதேயமாக செய்யும் hacker ? இதில் நீங்கள் எது?

**7zl** : நான் Black hat hacker

**கணினிக்களம்** : நீங்கள் குழுவாக இயங்குகிறீர்களா? அல்லது தனித்து இயங்குகிறீர்களா?

**7zl** : தற்போது நான் ஒரு குழுவில் உள்ளேன். இந்த hacker சமுதாயத்தை நான் தனித்து நின்று வெல்ல வேண்டும். சுவாரஸ்யமான தகவல்களை அறிய வேண்டும்.

**கணினிக்களம்** : இணையத்தளத்தை hack பண்ணுவதற்கு எங்கே கற்றீர்கள்? உங்களுக்கு யாராவது கற்பித்தார்களா? அல்லது நீங்களாகவே இதைக் கற்றுக்கொண்டீர்களா?

**7zl** : நானாகவே கற்றேன். நானாகவே இவற்றை விளங்கிக்கொண்டேன். சிலவேளைகளில் தேடு இயந்திரங்கள் (Search Engines ) மூலம் நானாகவே பிரச்சினைகளை விளங்கிக்கொண்டு கற்றேன்.

**கணினிக்களம்:** சீன இணையத்தளங் களையும் நீங்கள் hack பண்ணுவீர்களா ?

**7zl:** இல்லை. நாம் வெளி இணையத்தளங்களையே கூடுதலாக தாக்குகிறோம். முக்கியமாக அரசியல் சம்பந்தப்பட்டவை. சீன நாட்டு hackers ஐ கூடுதலாக அதன் சட்டம் தண்டிக்கிறது. இது மிகவும் கஷ்டமான விடயம் . எனினும் நாம் இதைத் தொடர்ந்து கொண்டே இருக்கிறோம்.

**கணினிக்களம்:** நீங்கள் ஐரோப்பிய, அமெரிக்க hackers ஐ மதிக்கிறீர்களா ? இதில் கூடுதலாகக் கவர்வது யார் ?


**7zl:** வெளிநாட்டு hackers ஐ நான் பாராட்டுகிறேன். அவர்களில் சிலபேரை நான் மேலும் மதிக்கிறேன். சுயமாக இந்த தொழில்நுட்பத்தை அறிந்த hacker நான் என்று நினைக்கும்போது நான் பெருமையடைகிறேன். என் வாழ்வில் சிலவேளை பணக்கஷ்டத்தால் சில இரகசியமான தொழில்களை செய்துள்ளேன். ஆனால் அவை அரசியல், கல்வி வலையமைப்பிற்கு அப்பாற்பட்டவை. தேசிய உணர்வை பாதிக்கும் எந்தவொரு வேலையையும் நான் செய்ததில்லை. இப்படிப்பட்ட வாழ்க்கை முறையே என்னை இப்படிச்செய்யத் தூண்டியது.

**கணினிக்களம்:** நீங்கள் hack பண்ணியவற்றுள் மிக முக்கியமான தளம் எது?

**7zl:** நான் hack பண்ணியவற்றுள் மிக முக்கியமானவை, பிலிப்பைன் நாட்டு ஜனாதிபதியின் தொலைத்தொடர்பு திணைக்களம், NOD 32 மற்றும் இந்தியாவில் Microsoft நிறுவனம்.

**கணினிக்களம்:** உங்களைப்பற்றி சிறிது எமக்குச் சொல்லுங்கள். உங்களுக்கு எத்தனை வயது? எப்போது ஏன் hack பண்ண ஆரம்பித்தீர்கள்?

**7zl:** எனக்கு 21 வயது Zunyi மாகாணத் திலுள்ள Yuqimg நகரத்தில் Guizhou எனுமிடத்தில் பிறந்தேன். எனது 14 ம் வயதில் நான் எனது தாயாரை இழந்தேன். எனது




தந்தையே எனது சகோதரியையும் குடும்பத்தையும் கவனித்தார். 17 ம் வயதில் எனது பள்ளியை விட்டு விலகினேன். ஒவ்வொரு நாளும் எனது மனதை இணையத்தளங்களே ஆக்கிரமித்தது. Internet cafe களில் எனது நேரத்தை செலவிட்டேன். இதனால் பல்வேறு hackers இன் தொடர்பு எனக்குக் கிடைத்தது.

அதிலிருந்து " hacker " எனும் சொல்லை நான் பிரயோகிக்கத் தொடங்கினேன். எனது 18 ம் வயதில் கனவு மிகவும் எளிமையாக இருந்தது. எனக்கென்று ஒரு குடும்பத்துடன் சந்தோசத்துடன் வாழ ஆசைப்பட்டேன்.சில காலங்களுக்கு பிறகு தொழில்நுட்பம் மேலும் வளர்ச்சியடைந்தது.


எனக்கு சில வெளிநாட்டுத்தளங்களிலும், தனியார் சம்பந்தப்பட்ட தளங்களிலும் ஆர்வமாக இருந்தது. சில வருடங்களுக்கு முன் அனுமதியற்ற சில இணையத் தங்களான விளையாட்டு, அரசியல், கல்வி, antivirus மற்றும் உத்தியோகபூர்வ மென் பொருள் (softwares official networks) சம்பந்தமான தளங்களில் தொழிற் படத்தொடங்கினேன். எனக்கென்று ஒரு தொழில் இல்லை. பணத்தட்டுப்பாடு காரணமாக hacker வலையங்களை நான் பார்வையிடத் தொடங்கினேன்.

( இதன்தொடர்ச்சி 50ம் பக்கத்தில்..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# Open Source Software ஏன்பது என்ன?



Open source என்பது அதன் source code அதாவது அந்த program ஐ எழுதுபவர் உபயோகிக்கும் program language ஐ அனைவரும் இலவசமாக உபயோகிக்கும் வண்ணம் உள்ள ஒரு program அல்லது software ஆகும்.

Open source code ஆனது கூடியளவு பயன்பெறத்தக்க வகையில் சமுதாயத்துடன் இணைந்து இந்த program ஐ எழுதுவோர் ஏதாவது மாற்றங்களை செய்யக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டதாகும். இந்த program ஐ எழுதித் தொகுக்கும் குழுவானது அதாவது programmer கள் தமது உரிமையையோ வியாபார நோக்கத்தையோ கருத்திற்கொள்ளாது வைரசின் தாக்கமின்றி அனைவரும் உபயோகிக்கும் வண்ணம் வழங்குகின்றனர். இந்த பொதுக்கொள்கையானது program code இலுள்ள virus களை இனங்கண்டு அழிக்கின்றது.

*source code என்பது என்ன?*



முதலில் programmer இந்த program ஐ மென்பொருளின் மொழியில் அதாவது pro-gramme language இல் எழுதுவார். இம்முறையானது source program எனப்படுகிறது மேலும் விரி-வாகச் சொல்லுவதானால் இது source code எனப்படும். இந்த program ஐ நிறை வேற்றுவதற்காக programmer இயந்திரத்தின் மொழியில் அதாவது machine lan-guageல் மொழி பெயர்க்க வேண்டும்.

இம் மொழியே computer இனால் இனங்காணப்படும். முதற்படியான மொழி பெயர்ப்பானது compiler எனும் ஒரு முறை வழிச்செயல் மூலம் நடைபெறும் compiler இந்த source code ஐ object code ஆக மாற்றியமைக்கிறது.

சில வேளைகளில் object code ஆனது ma-chine code இற்கு சமமாகும். ஆனால் சில சந்தர்ப்பங்களில் assembler எனும் ஒரு முறைவழிச்செய்கை மூலம் machine lan-guage இற்கு மாற்றியமைக்க வேண்டும்.

source code மட்டுமே மனிதர்களால் வாசிக்கமுடிந்த ஒரு format ஆகும். நீங்கள் ஒரு programme ஐ வாங்கும் போது பொதுவாக machine language லியே அது இருக்கும் அதாவது அந்த software ஐ நீங்கள் நேரடியாக செற்படுத்தமுடியும் ஆனால் அதை வாசிக்க முடியாது. சில software அமைப்பாளர்கள் source code ஐ உருவாக்குவார்கள். ஆனால் நீங்கள் ஒருதலைசிறந்த programmer ஆக இருந்தால் மட்டுமே இது உங்களுக்கு பயனளிக்கும்.

இந்த open source இன் பின்னணியிலுள்ள programmers அதன் soure code ஐ வாசிக்கவோ, ஏதாவது திருத்தம் செய்யவோ அல்லது இதை மீளாய்வு செய்து வழங்கவோ உரிமை உள்ளனர். இதனால் இந்த software மேலும் விருத்தியடைகிறது.

இந்த தொழில்நுட்பம் வடிவமைப்பு என்பன ஓர் கம்பனியால் நிர்வகிக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாது இந்த software ஐ பிரதி செய்யும் வேறு கம்பனிகளைக்கூட இவை தடுப்பதில்லை.


பணம் சம்பாதிக்கும் நோக்கம் கருதாத இலவச சேவையாக இதைக் கூறலாம்

## SugarSync

### இணையசேமிப்பகங்களில் ஓர் இனிப்பான சேமிப்பகம்

இது தரவுகளைக் காப்பெடுத்தல் மட்டுமல்லாது கணினிகளுக் கிடையில் ஒத்திசைக்கவும் செய்கிறது. இதில் mobile access, mp3, streaming online digital albums, file sharing மற்றும் collaboration போன்ற அம்சங்களை காணலாம். குறித்த நேரத்தில் கோப்புக்கள் காப்பு செய்யப்படுகிறது.

அதுமட்டுமல்ல கோவைகளை செயற்படுத்தல் மீண்டும் அவற்றை சேமித்தல் போன்றவை எந்த இணையத்தேடல் மூலமோ அல்லது இணையச் செயற்படுத்தல் மூலமோ நடைமுறைப்படுத்த முடியும். இதன் இடை முகப்பானது (Interface) பாவனை யாளர்களுக்கு இலகுவாக அமைந்துள்ளது.



இது இலகுவான இடைமுகப்பு,கோப்புகளை எந்தவொரு இணையச் செயல்படுத்தப்பட்ட சாதனம் மூலமும் செயற்படுத்தமுடியும். ஆனால் மிகக்கூடிய பதிவேற்றங்கள் சில பின்னடைவைத்தரும்.

https://www.sugarsync.com/




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பச்சைத் திரை தொழில்நுட்பம் ஒரு பார்வை Chroma key

**பச்சைத்திரை தொழில்நுட்பம் (Green screen technology), இதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறிர்களா? இந்த பச்சைத்திரை தொழில்நுட்பத்தை கேள்விபட்டிருக்கிறிர்களோ, இல்லையோ, ஆனால் கண்டிபாக பார்த்திருப்பிர்கள். சமீபகாலமாக ஹாலிவுட்டில் வரும் அத்தனை படங்களிலும் இதன் ஆதிக்கம் மிக அதிகம்.**

பச்சைத்திரை தொழில்நுட்பத்தை பயன் படுத்தித்தான், ஸ்ரூடியோவில் எடுக்கப்பட்ட ஒரு வீடியோவை மலைப் பிரதேசத்தில் எடுத்ததை போலவும், மனிதர்கள் ஒளிப்பதிவு செய்ய சிரமமான இடங்களில் எடுத்ததை போலவும் காண்பிக்கப்படுகிறது. ஆரம்பத்தில் மிக சிரமமான ஒளிப்பதிவுகளுக்கு மட்டும் பயன்படுத்தப்பட்ட இந்த தொழில்நுட்பம், இன்று மிக எளிதான காட்சிகளுக்கெல்லாம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் காலமும் செலவும் கணிசமான அளவு மிச்சமாவது இதன் சிறப்பம்சமாகும்.

பச்சைத்திரையின் முன்பு ஒருவரை நிற்க வைத்து எடுக்கப்படும் வீடியோ, பின்பு தனியாக எடுக்கப்பட்ட வேறு ஒரு வீடியோ வில் எளிதாக சேர்க்கப்படுகிறது.







**இந்த தொழில் நுட்பம் திரைப்படத்துறை மட்டும் அல்லாது விளம்பர மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பெரும் பங்கு வகிக்கிறது.**


இவ்வாறு எடுக்கப்படும் வீடியோக்களை மற்றவற்றுடன் இணைப்பது எளிதாக இருப்பதால் தான் இதை பச்சை திரை தொழில் நுட்பம் என்று கூறுகிறார்கள்.


**ஆனால் உண்மையில் இந்த தொழில் நுட்பத்தின் பெயர் "Chroma key compositing". பச்சை தவிர நீல நிற திரையும் இதற்கு பெரும்பாலும் பயன் படுத்தப்படுகிறது.**





பச்சைத் திரை








**இன்று இந்த தொழில் நுட்பம், வீட்டிலேயே நமது கணினியில் கூட பயன்படுத்தும் அளவுக்கு எளிதாகிவிட்டது. இதற்காக சில பிரதான மென்பொருள்கள் (softwares) உள்ளன. Pinnacle Studio என்பது அவற்றில் ஒன்று.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பியில்லாத தொலைத் தொடர்பு வலை அமைப்புகளை உடைத்து உள்நுழைபவர்களிடமிருந்து பாதுகாப்பது எப்படி?




**எமது கம்பியில்லா வலையமைப்புகளை நாங்கள் பாதுகாப்பதற்கான காரண-மாக அவற்றைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்படாதவர்கள் எமது வலையமைப்பின் சேவைகளை பயன்படுத்துவதைத் தடுப்பது இருக்கிறது.**

முதல்தரமான கம்பியிணைப்பு வலையமைப்போடு ஒப்பிடும் பொழுது, கம்பியில்லா வலையமைப்புகளை உடைத்து உள் நுழைபவர்களிடமிருந்து பாதுகாப்பது என்பது அதிக கடினமானதாகும்.

ஒரு கம்பியில்லா வலையமைப்பின் அலைவாங்கி (Antenna) யின் வீச்சுக்குள் எங்கிருந்தும் அவ்வலையமைப்பை எட்டக்கூடியதாக இருப்பதே இதற்கு காரண-மாகும்.

இதனுடைய பின் விளைவுகளில், வேறு வலையமைப்புகளைத் தாக்க, எமது வலையமைப்பு பயன்படுத்தப் படுவதும் அடங்கக்கூடும். கம்பியில்லா வலையமைப்புகளைப் பாதுகாக்க, நீங்கள் இங்கே உள்ள கம்பியில்லா வலையமைப்பைப் பாதுகாப்பதற்கான எளிமையான உதவிக் குறிப்புகளை பின்பற்ற வேண்டும்.




ஒரு கம்பியில்லா வலையமைப்பை (wireless-network) உடைத்து உள் நுழைபவர்களிடமிருந்து பாதுகாக்க வேண்டுமாயின், பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் இருந்து எங்களை பாதுகாப்பதற்குரிய சரியான படிமுறைகளை நாம் மேற்கொள்ள வேண்டும். உடைத்து உள்நுழைபவர்களிடமிருந்து வலையமைப்பை பாதுகாக்க நீங்கள் தவறினால், அதனுடைய சேவைகளை நீங்கள் பெறமு-டியாமல் போகலாம்.

**கேந்திர முக்கியத்துவமான இடத்தில் அலைவாங்கியை அமைத்தல்.**

இதில் நீங்கள் செய்யவேண்டிய முதலாவது விடயமாக, எட்டுகை நிலையத்தின் அலை வாங்கியை, அதனது சமிக்கைகளை தடுக்காமல் தவிர்க்க, அலைவாங்கிகளை ஜன்னல்களுக்கு அருகாக வைக்கக்கூடாது. கட்டடத்தின் மைய இடமொன்றில் அதனை வையுங்கள்.

**WEP ஐப் பயன்படுத்துங்கள்.**

WEP என்பது கம்பியில்லா தொடர்புக்கான, மறையாக்க விதிகளின் தொகுதி, என்பதைக் குறிக்கும். ஒரு கம்பியில்லா வலையமைப்பின் பரிமாற்றங்களை மறையாக்கம் செய்வதற்கு, வழமையாக பயன்படுத்தப்படும் உத்தியாக அது இருக்கிறது. இதனை ஒருபோதும் கைக்கொள்ளாமல் விடக்கூடாது. இதனைக் கைக்கொள்ளாமல் விட்டால், உடைத்து உள்நுழைபவர்கள் உடனடியாக வலையமைப்பை எட்டுவதற்கு வழிவகுத்து விடும்.

**SSID ஐ மாற்றுங்கள் SSID ஐ ஒளிபரப்புவதை தடைசெய்யுங்கள்.**

SSID என்பது, சேவைத் தொகுதி அடையாளம் காணும் முறை என்பதைக் குறிக்கிறது. கம்பியில்லா எட்டுகை நிலையத்தால் அடையாளம் காண்பதற்கு பயன்படுத்தப்படும் இந்த இழையானது, வாடிக்கையாளருக்கு தொடர்புகளை ஏற்படுத்தும் இயலுமையைக் கொடுக்கிறது, ஏற்படுத்தப்படும் ஒவ்வொரு கம்பியில்லா எட்டுகை நிலையத்துக்கும் பிரத்தியேகமான, தனித்துவமான SSID ஒன்றை தெரிவு செய்யுங்கள். அத்துடன் அதனை எவரும் பெறக்கூடிய வாய்ப்பு இருந்தால், அதை அலைவாங்கி மூலம் ஒளிபரப்பு செய்வதை நிறுத்துங்கள். இப்படிச் செய்தால் சேவைகளை வழங்கும் வலையமைப்புகளின் பட்டியலில் அது தோன்ற மாட்டாது. ஆனால் வழமைபோலவே சேவைகளை வழங்கக்கூடியதாக இருக்கும்.

**DHCP ஐசெயலிழக்கச் செய்யுங்கள்**

இதனை செய்வதன் மூலம், உடைத்து உள்நுழைபவர்கள் உங்கள் வலையமைப்புக்குள் உடைத்து உள்நுழைய வேண்டுமானால், TCP/IP சாராமாறிகள், உப வலையமைப்பு மறைப்பு மற்றும் IP முகவரி முதலியவற்றை முதலில் மறைநீக்கம் செய்ய வேண்டிய நிலையை ஏற்படுத்தி விடும்.

**SNMP அமைப்புகளை செயலிழக்கச் செய்யுங்கள் அல்லது மாற்றியமையுங்கள்.**

SNMP யினுடைய தனிப்பட்ட மற்றும் பொதுவான சமூகஅமைப்பை மாற்றுங்கள். நீங்கள் அதனை செயலிழக்கச் செய்யவும் முடியும். இப்படிச் செய்யாவிட்டால், உங்கள் வலையமைப்பு தொடர்பான முக்கியத்துவமான தகவல்களைப் பெற, உடைத்து உள்நுழைபவர்கள் SNMP ஐப் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும்.

**எட்டுகை பட்டியல்களை பயன்படுத்துங்கள்**

உங்களுடைய கம்பியில்லா வலையமைப்புக்கான மேலதிக பாதுகாப்பாக, உங்களது எட்டுகை நிலையம் இந்த அம்சத்துக்கு அதரவளிப்பதாக இருக்குமெனின், எட்டுகை பட்டியல்களைப் பயன்படுத்துங்கள். ஒரு எட்டுகை பட்டியலானது, ஒரு குறிப்பிட்ட எட்டுகை நிலையத்துடன் இணைப்புச் செய்ய, எந்த பொறிகள் அனுமதிக்கப் பட்டிருக்கின்றன, என்று அச்சொட்டாக நிர்ணயிக்க உதவும். எட்டுகை பட்டியல்களை உள்ளடக்கிய எட்டுகை நிலையங்கள், உடைத்து உள்நுழைபவர்களைத் தவிர்க்கும் விதத்தில், நவீனமயப்படுத்தப்பட்ட பட்டியல்களைத் தரவிறக்கம் செய்ய இடைக்கிடை பொது நிலைப்பட்ட கோவை இடமாற்ற விதிகள் தொகுதி(FTP)யைப் பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்ளுங்கள் eSATA



**வெளிப்புற தொடர் மேம்பட்ட தொழில்நுட்ப இணைப்பு (External Serial Advanced Technology Attachment) அல்லது eSATA (ஈசாட்டா) எனப்படுவது SATA (சாட்டா) தொழில்நுட்பங்களுக்கான ஒரு வெளிப்புற இடைமுகம் (external interface) ஆகும்.**

இது விரைவான தரவுகள் இடமாற்ற வேகங்களை வழங்குவதற்காக, /gaHtaH 400 tim) மற்றும் பொது தொடர் பாட்டை (USB) 2.0 ஆகியவற்றுடன் போட்டியிடுகிறது. SATA மரபுவழி தொழில்நுட்பத்தை புறந்தள்ளிவிட்டு, ஹார்ட் டிரைவ்-களுக்கான அடுத்த தலைமுறை உட்புற பாட்டை இடைமுகமாக (internal bus interface) SATA கோலோச்சுகிறது.

SATA இடைமுகம் ATA-வைக் காட்டிலும் அதிகம் நெறிப்படுத்தப்பட்டுள்ளது, மற்றும் பழைய இணைதொழில்நுட்பத்தைவிட மிக அதிகமான வேகத்திற்கான தொடர் கட்டமைப்பை (serial architecture) வழங்குகிறது. eSATA கேபிள்கள் ஒடுங்கியும் 6.56 அடிகள் (2 மீட்டர்கள்) நீளம் வரையும் இருக்கும்,

அதே நேரத்தில் இணை கேபிள்கள் மேலும் அதிக அகலத்துடனும் 18 அங்குலங்கள் (45.7 செ.மீ) நீளம் வரையும் இருக்கும். eSATA உடன், SATA-வின் வேகம் வெளிப்புற சேமிப்பு தீர்வுகளை உள்ளடக்கும் அளவுக்கு மேலும் அதிகமாகிறது.

eSATA இடமாற்ற விகிதங்கள் குறைந்தபட்சம் USB-2.0 மற்றும் /gaHtaH400 ஆகியவற்றை விட மூன்று மடங்கை அடையும் போது ஒரு குறைபாட்டைஎதிர்கொள்கிறது. அதாவது அச்சூழலில், மேலேகுறிப்பிடப்பட்டுள்ளஇடை முகங்களைப் போல அல்லாமல் eSATA -வுக்கு என தனியாக மின் இணைப்பான் (Power-connector) தேவைப் படும்.

எனினும், இதுவெளிப்புற டிஸ்க் சேமிப்புக்கான ஒரு மிகச்சிறந்த தேர்வாக இன்னும் உள்ளது. USBமற்றும் /gaHtaH இடைமுகங்களைப் போல அல்லாமல், eSATA வானது இடைமுகம் மற்றும் கணினி இடையே தரவுகளை இடமாற்றத் தேவையில்லை.

இது தரவுகள் இடமாற்ற வேகங்களை மேம்படுத்துகிறது, அதேவேளையில் கணினி புரோசசர் (computer processor) வளங்களை சேமிப்பதோடு, கூடுதல் ஆஃப்-லோட் (off-load) சிப்(chip)-பிற்கான தேவையையும் நீக்குகிறது.eSATA இணைப்பான் (eSATA connector) இல்லாத மேசைக்கணினி மதர்போடு (motherboards)-களுக்கு, ஒரு புறக் கூறு உள்ளிணைப்பு (PCI) காட்(PCI card)-டை வாங்கி, ஒரு eSATA இடைமுகத்தை வழங்குவதற்கேற்ப இருக்கக்கூடிய PCI ஸ்லாட்-டில் (PCI slot) நிறுவிக்கொள்ளலாம். மடிக்கணினி மாதிரியைப் பொருத்து, நோட்புக்குகள்(Notebooks) PCMCIA, PC காட் (PC Card), அல்லது எக்ஸ்பிரஸ்காட் ஸ்லாட் (ExpressCard slot) க்கான ஒரு வெளிப்புற eSATA கருவியை பயன்படுத்திக்கொள்ளலாம்.

மூல தரநிலையை (original standard) பழைய வன்பொருள் ஆதரிக்கிற, வேறுபடும் தர நிலைகளை SATA கொண்டுள்ளது. ஒவ்வொரு புதிய SATA மறுசெய்கையுடனும், வேகம் அதிகரிக்கிறது. மூல SATA, அல்லது SATA 150, தலா ஒரு நொடிக்கு 150 மெகாபைட்-கள் இடமாற்றப்படும் தரவுகள் இடமாற்ற வேகத்தை கொண்டுள்ளது. SATA 3G, இருமடங்கு வேகமான 300 MB/s அல்லது ஏறத்தாழ 3 GB/s கொண்டுள்ளது. இது சில நேரங்களில், SATA 300 எனவும் குறிப்பிடப்படுகிறது.






வெளிப்புற டிஸ்க் அணிகளுக்கான (disk arrays) விரைவான SATA டிரைவ்களை பயன்படுத்திக் கொள்ள eSATA உதவுகிறது.

ஒரு eSATA கண்ட்ரோல், (eSATA controller) அல்லது பாட்டை காட் (bus card) வாங்கும்போது, அது உங்கள் SATA ஹாட் டிரைவ்(கள்)-ஆல் தேவைப்படும் SATA தரநிலையை ஆதரிக்கிறதா என்பதை உறுதிசெய்து கொள்ளவும்.

அத்தியாவசியமான சேமிப்புத்திறனை அதிகப் படுத்துவதோடு மட்டுமல்லாமல், உண்மையிலேயே விரைவான பெயர்த்தகு சேமிப்பையும் (portable storage) ஏதுவாக்குகிறது.

புதிய தரநிலைகளை ஆதரிக்கிற வன்பொருள் பொதுவாக பழைய கருவிகளுடன் பின்னோக்கு இணக்கத் தன்மையுடன் செயல்படுகிறது, ஆனால் இதற்கு தலைகீழான நிகழ்வு சாத்தியமில்லை. எடுத்துக்காட்டாக, SATA 150க்காக தயாரிக்கப்பட்ட ஒரு eSATA கன்ட்ரோலரால் அதிவிரைவான SATA 300 ஹாட் டிரைவ்-வை ஆதரிக்க முடியாது.







eSATA-வின் உடன்-மாறுகொள்ளக்கூடிய அம்சம் மூலமாக, பணியிடத்தில் இருந்து வீட்டுக்கும், அல்லது ஒரு கணினியில் இருந்து மற்றொரு கணினிக்கும் டிஸ்க்களை எளிதாக எடுத்துச் செல்ல முடியும். நிர்வாகிகள், தகவல் தொழில்நுட்பவியலாளர்கள், விளம்பரப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் நிர்வாகிகள், மற்றும் விளையாட்டாளர்களுக்குக்கூட இது மிகவும் நன்மை பயக்கக்கூடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட ஆளுமையும் அனுபவமும் கொண்ட

# முதன்மை கணினி பயிற்சி நிறுவனம்

# TECHNO WORLD
## Studies (Pvt) Ltd
முன்னணிக் கணினிப் பயிற்சி நிறுவனம்



**கிராமம் முதல் நகரம் வரை**



**நாடளாவிய ரீதியில் பயிற்சி மையங்களைக்கொண்ட ஒரே கணினி நிறுவனம்**

14வது ஆண்டில் வெற்றிநடைபோடும் இந்நிறுவனமானது கிராமம் முதல் நகரம் வரை பாடசாலை மாணவர்களிற்காகவும் கணினியில் ஆர்வமுடைய அனைத்துத் தரப்பினர்களிற்காகவும் சர்வதேச தரத்திலும் குறைந்த கட்டணத்திலும் இலகுவானமுறையிலும் நவீன பயிற்சிகளுடன் வழங்குவதே **TECHNO WORLD** இன் பிரதான நோக்கமாகும்

**மற்றும் மொழி வகுப்புக்களான,**
ஆங்கிலப்பாடநெறி வகுப்புக்கள்; இதற்கான சான்றிதழ்கள் Cambridge University (UK) யால் வழங்கப்படும். மற்றும் சிங்கள மொழி வகுப்புக்களும் ஒவ்வொரு வாரமும் ஆரம்பமாகின்றன.

**அனைத்துப் பிரிவினருக்குமான கணினி வகுப்புக்கள்**
* Hardware & Networking
* Multimedia (தொழில்சார் கணினி பாடநெறி)
* Accounting
* Office Application
* Graphics, Basic

**சிறுவர்களுக்கான கணினிவகுப்புக்கள்**
* Junior Certificate in Computer Studies
* Junior Certificate in Computer Graphic
* Junior Certificate in Graphic Animation
* Junior Certificate in Compute Programming
* Junior Certificate in Computer Hardware
* Junior Certificate in Move Making

**aat** **Foundation, Intermediate, Final** ஆகிய மூன்றுபிரிவு வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

# எமது கிளை வலையமைப்பு

**யாழ்ப்பாணத்தில்** கஸ்தூரியார் வீதி 021 – 4921124, மானிப்பாய் 021 – 4922400, திருநெல்வேலி 021 – 4922401, நெல்லியடி 021 – 4925145, சாவகச்சேரி 021 – 4925114,
**முல்லைத்தீவில்** தண்ணீரூற்று 024 – 3243660, **கிளிநொச்சியிலும்** திருநகர் வீதி 021 – 4925112

**வவுனியாவில்**
1ம் குறுக்குத்தெரு(நகர்) 024-2221486, குடியிருப்பு(நகர்) 024-2225854, காப்பன்காடு 024-2222683, தோணிக்கல் 024-4921893, நெளுக்குளம் 024-4921892, பண்டாரிகுளம் 024-4927259, புதுக்குளம் 024-4924451, கோவில்குளம் 024-4924482, செட்டிகுளம் 024-4924975.

**மன்னார்**
**முருங்கனில்** முருங்கன்பிட்டி 023 – 3238152,

இலங்கைதொழில்நுட்பதொழிற்கல்வி அமைச்சில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம்

CORPORATE HEAD OFFICE, NORTHERN REGION
NO:-05, STATION ROAD, VAVUNIYA
SRI LANKA
T.P:-024 222 5845/ 024 4924976 Fax :- 024 4588636
WEB :- http-://www.technoworldstudies.com
E MAIL :- info@technoworldstudies.com

**கணினி உலகில் என்றும் உங்கள் நண்பன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூகிள் நிறுவனத்தின் சாரதியற்ற காருக்கு அமெரிக்காவில் அனுமதிப்பத்திரம் !




சாரதியின்றி சுயமாக இயங்கும் காருக்கு அமெரிக்காவின் நெவடா மாநில போக்குவரத்துத் துறை அனுமதிப்பத்திரம் வழங்கியுள்ளது. மேற்படி டொயோட்டா பிரையுஸ் ரக காரை சாரதியின்றி இயங்கக்கூடியதாக பிரபல இணையத்தள நிறுவனமான கூகிள் நிறுவனம் வடிவமைத்திருந்தது. இக்காருக்கு நெவடா மாநில அரசாங்கம் அனுமதிப்பத்திரம் வழங்கியதன் மூலம் அம்மாநில வீதிகளில் இக்கார் விரைவில் பயணம் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கணினியின் மூலம் இயங்கும் இக்காரின் மீது வீடியோ கமரா. ராடர் மற்றும் லேசர் உணர்கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இதன் மூலம் வீதியிலுள்ள ஏனைய வாகனங்களை கண்காணித்து இக்கார் தனது பயணத்தை மேற்கொள்ளும் ஏனைய பல கார் தயாரிப்பு நிறுவனங்களும் சாரதியற்ற காருக்கு நெவடா மாநிலத்தில் அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு முயற்சித்து வருகின்றன.

கூகிள் நிறுவன பொறியியலாளர்கள் கலிபோர்னியா மாநில வீதிகளிலும் இந்த காரை பரீட்சித்தனர். இந்த கார் 140000 மைல் தூரம் பயணித்துள்ளதாக மென்பொருள் பொறியியலாளரான செபஸ்டீன் த்ருன் கூறியுள்ளார். ஒரு தடவை போக்குவரத்து சமிக்ஞை விளக்கொன்றின் அருகில் நிற்கும்போது பின்னால் வந்த கார் இடித்ததை தவிர வேறு எந்த விபத்தை சாரதியற்ற தமது கார் எதிர்கொள்ளவில்லை எனவும் அவர் கூறினார்.

சாரதியற்ற கார்களானவை “எதிர்கால கார்கள்“ என தான் நம்புவதாக நெவடா மாநில போக்குவரத்து திணைக்கள பணிப்பாளர் புரூஸ் பிரெஸ்லோ தெரிவித்துள்ளார். சுயமாக இயங்கும் கார்களுக்கு அனுமதி வழங்குவதற்காக நெவடா மாநிலம் தனது போக்குவரத்து சட்டங்களில் கடந்த மார்ச் மாதம் மாற்றங்களை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. கலிபோர்னியா போன்ற ஏனைய மாநிலங்களும் இத்தகைய மாற்றங்களை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளன. சாரதியற்ற கார்களை இனம்காண்பதற்காக சிவப்பு நிறத்திலான விசேட இலக்கத் தகடுகளை நெவடா மாநிலம் அறிமுகப்படுத்தியுள்ளது.

மனிதர்கள் காரை ஓட்டுவதை விட சாரதி அற்ற இவ்வகையான கார்கள் மிகவும் பாதுகாப்பானவை எனக் கருதப்படுகிறது. காரணம் அது வேகக் கட்டுப்பாட்டை கடைப்பிடிக்கும். மற்றும் அது ரேஸ் ஓடவோ இல்லை மனிதரைப் போல மன நிலை அழுத்தங்களில் அல்லது குடிபோதையில் ஓடப்போவது இல்லையே !

44ம் பக்க தொடர்ச்சி...

ஒரு சகோதரர் சில ரகசியமான தொழில் முறைகளைச் செய்யுமாறு எனக்கு அறிவுறுத்தினார். அதில் ஒரு பங்கையும் நான் வகித்தேன். ஆனால் அரசியல் கல்வி வலையமைப்புகளை தாக்குவதற்கு எனக்கு பிடிக்கவில்லை.

இதனால் இந்த தொழிலை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. நான் நாட்டுப் பற்றுடைய ஒரு இளைஞன். பிலிப் பைன் நாட்டு பொலீஸ் ஒருவரால் சீன நாட்டவர்கள் பயணித்த ஒரு பஸ் கடத்தப்பட்ட சம்பவத்தில் பிலிப்பைன் நாட்டு ஜனாதிபதியின் தொலைத்தொடர்பு திணைக்களத்தை hack செய்ததில் நான் பங்கு வகித்தேன்.

**கணினிக்களம்**: நீங்கள் வாழும் மாகாணத்தைப்பற்றிச் சொல்லுங்கள் ? அங்கு சராசரி பிரஜையின் வாழ்க்கை முறை எப்படிப்பட்டது ?

**7zl** : இங்கு உயர்தர நகர வாழ்க்கை முறை. படித்த தொழிலாளர்களுக்கு அதிகூடிய சம்பளம், பொதுவாக உணவு விற்பனை வியாபாரம் அல்லது துணிமணி வியாபாரம் ஆனால் வருட இறுதியில் எந்தவொரு சேமிப்பும் இருக்காது.

**கணினிக்களம்** : Hack பண்ணாதபோது நீங்கள் என்ன செய்வீர்கள் ? உங்களின் பொழுதுபோக்கு என்ன ? தற்போது உங்களுக்கு ஏதேனும் தொழில் உண்டா ?

**7zl**: இல்லை. ஒரு கம்பனி என்னுடன் தொடர்பு கொண்டபோதிலும் நான் இன்னும் பதிலளிக்கவில்லை.

**கணினிக்களம்** : எப்படிப்பட்ட கம்பனியில் / எந்த domain இல் உங்களுக்கு வேலைசெய்ய விருப்பம் ?


**7zl** : பாதுகாப்பு வலைப்பின்னலில் (network security) வேலை செய்ய விருப்பம்.

**கணினிக்களம்**: மக்கள் உங்களைப் பற்றியும், உங்கள் குழுவைப்பற்றியும் அறிவதற்கும் இன்னும் ஏதாவது உள்ளதா ?

**7zl**: அறிமுகத்தை விட வேறு ஏதும் எம்மைப்பற்றிக் கூறுவதற்கு இல்லை. இயற்கையில் நாம் ஒரு அநாமதேயக் குழுவாகவே உள்ளோம். வெளிநாட்டு இணையத்தளத்தை உடைத்து உள் நுழைபவர்களும் (foreign hackers) நாமும் எப்பொழுதும் பராமுகமாக எமது நீதிக்காகவே ஒத்துழைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Harddisk என்றால் என்ன அது எப்படி தொழிற்படுகிறது

**ஹார்ட் டிஸ்க் டிரைவ் அல்லது HDD எனவும் அழைக்கப்படும் ஒரு ஹார்ட் டிரைவ், நவீன கணினிகளின் அடிப்படையான பகுதியாக விளங்குகிறது.**

உங்கள் அனைத்து புரோகிராம்களும் மற்றும் கோப்புகளும், ஹார்ட் டிரைவில் சேமிக்கப்படுகின்றன. ஆகவே, ஏதாவது காரணத்திற்காக ஹார்ட் டிரைவ் சேதமடைகிற பட்சத்தில், உங்கள் கணி-னியில் உள்ள அனைத்தையும் நீங்கள் இழந்துவிடுவீர்கள்.


கெசட் டேப்-கள் (cassette tapes) மற்றும் வீடியோ டேப்-களில் (video tapes) உள்ளதைப் போன்ற அதே நினைவக சேமிப்பு (memory storage) தொழில்நுட்பத்தை ஒரு ஹார்ட் டிரைவ் பயன்படுத்துகிறது.

டேப்-கள் தமது மேற்பரப்பில் நுட்பமான காந்தப் பொருளுடன் கூடிய நீளமான, மெல்லிய பட்டைகளில் தகவல்களை சேமித்து வைக்கின்றன என்பது உங்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கக்கூடும்.




அதேபோல, ஹார்ட் டிரைவ்-களும் அதே மாதிரியான காந்தப் பதிவு ஊடகத்தால் மூடப்பட்டுள்ள வட்டமான, கண்ணாடி போன்ற பிளேட்டர்-களை (platters) கொண்டுள்ளன.

ஹார்ட் டிஸ்க் டிரைவின் உள்ளே இருக்கிற பிளேட்டர்-கள் (Platters) வழக்கமாக கண்ணாடி அல்லது அலுமினியத்தால் செய்யப்படுகின்றன. பிளேட்டரின் மேற்பரப்பில் உள்ள ஒரு மெருகூட்டப்பட்ட காந்தப் பொருள் காரணமாக அது ஒரு கண்ணாடியைப் போல பிரகாசமாக காட்சியளிக்கிறது. ஒரு சுத்தமான, மெருகூட்டப்பட்ட மேற்பரப்பு என்பது ஹார்ட் டிரைவின் முறையான செயல்படுதலுக்கு மிகவும் முக்கியமாகும் - மிகச்சிறிய தூசு அதன்மேல் பட்டால்கூட பழுது நீக்கப்படமுடியாத சேதத்தை ஏற்படுத்தக் கூடும்.





உங்கள் கேசட் பிளேயர் (cassette player) அல்லது VHS பிளேயரில் உள்ள ஹெட் எவ்வாறு டேப்-பில் உள்ள தரவுகளை வாசிக்கிறதோ, அது போல உங்கள் ஹார்ட் டிஸ்க் டிரைவின் உள்ளே இருக்கிற ஒரு ஹெட், பிளேட்டர்-களுக்கு தரவுகளை வாசித்து எழுதுகிறது. பிளேட்டர்-களுக்கு அடுத்து இணைக்கப்பட்டுள்ள ஒரு கரத்தின் (arm) மீது ஹெட் உள்ளது.

அப்போதுதான் பிளேட்டர்-களின் மீது சுழல்மையம் கொண்டு ஹெட்-டினால் முன்னும் பின்னும் அசைய முடியும். சராசரி நவீன ஹார்ட் டிஸ்க் டிரைவ் தன்னுள் பல்வேறு பிளேட்டர்-களை கொண்டுள்ளது. பிளேட்டர்-கள், ஒரு ஒரியோ குக்கீயைப் (Oreo cookie) போல ஒன்றின் மேல் மற்றொன்று என அடுக்கிவைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிளேட்டருக்கும் இடையே ஒரு சிறிய இடைவெளி உள்ளது. இது, பிளேட்டரின் ஹெட்-டை அதன் மீது கடந்து செல்ல அனுமதிக்கிறது.



அதே கரத்தின் மீது உள்ள அனைத்து ஹெட்-களும் ஒரு முட்கரண்டியின் முனைகள் அதன் பக்கத்தில் திரும்பியது போல ஒவ்வொரு ஹெட்-டுக்கும் ஒரு தனி கிளையுடன் காணப்படும்.




உங்கள் கணினியை நீங்கள் இயக்கத் தொடங்கியதும், பிளேட்டர்-கள் உடனடியாக சுழலத் தொடங்குகின்றன.

ஒரு மேசைக் கணினி (desktop computer) ஹார்ட் டிஸ்க் டிரைவ் குறிப்பாக ஏறத்தாழ தலா ஒரு நிமிடத்திற்கு 7,200 சுழற்சிகளுடனும் (read per minutes), மடிக்கணினிகளில் உள்ள ஹார்ட் டிரைவ்கள் வழக்கமாக தலா ஒரு நிமிடத்திற்கு 5,400 சுழற்சிகளுடனும் (rpm) ஓடுகின்றன

இந்த கரம், பிளேட்டரின் மேற்பரப்புக்குக் குறுக்காக முன்னும் பின்னும் ஒரு நொடிக்கு கிட்டத்தட்ட 50 முறைகள் வீதம் நகர முடியும். இத்தகைய அதிவே-கம் காரணமாக, நீங்கள் அதை எப்போ தாவது கவனிக்கிற வாய்ப்பு கிடைத்தால், மங்கலாக தோன்றுவதை காணீர்கள்.

ஹார்ட் டிஸ்க் டிரைவில் உள்ள அனைத்துமே மிகவும் விரைவாக நகர்கிற காரணத்தால், ஹெட் ஒருபோதும் பிளேட்டர்-களைத் தொடுவது இல்லை. அதற்குப் பதிலாக, பிளேட்டர்-களின் சுழற்சியால் உருவாக்கப்படுகிற நகர்கிற காற்று மெத்தையால் தாங்கப்பட்டு, பிளேட்டர்களுக்குச் சற்று மேலே சீவியபடி பயணிக்கிறது.

உங்கள் ஹார்ட் டிஸ்க் டிரைவின் உள்ளே இருக்கிற பிளேட்டர்-கள் மற்றும் ஹெட்-களின் மிக வேகமான இயக்கம் காரணமாக பிளேட்டர்-களுக்குள் ஹெட்-கள் மோதி "ஹெட் கிராஷ்" (head crash) எளிதில் ஏற்படக்கூடிய வாய்ப்புகளை அதிகரிக்கிறது.

**இதன் தொடர்ச்சி 3ம் பக்கத்தில்..**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உங்கள் வீட்டில் மின்சாரம் தடைப்படுவதினால் தரவுக் கோப்புக்களை (files) இழக்கின்றீர்களா?

MS Office 2007 பிரயோகங்களினுடைய பயனுள்ள அம்சங்களில் ஒன்றாக, Auto Recover (தன்னியக்க மீளப் பெறல்) இருக்கிறது. Office 2007 இல் உள்ள அனைத்து தரவுகளையும் ஒரு குறிப்பிட்ட நேர இடைவெளிக்குப் பின் சேமிப்பதை அது மேற்கொள்ளுகிறது. மின்சாரம் துண்டிக்கப் பட்டால் அல்லது System செயலிழந்து போனால் உங்களுடைய தரவுகளை இதன்மூலம் மீளப் பெறக்கூடியதாக இருக்கும். இந்தக் குறிப்பிட்ட நேர இடைவேளைக்கு பின், உங்களுடைய வேலை அல்லது தரவுகள் தன்னியக்கமாகவே சேமிக்கப்படும். நீங்கள் செய்த வேலையை இழந்து விடாமல் இது பார்த்துக் கொள்கிறது. Office 2007 பிரயோகங்கள் முழுவதிலும் இந்த நேர இடைவெளியின் ஆரம்ப அமைப்பாக 10 நிமிடங்கள் இருக்கின்றது.

எனினும் Office 2007இல் Auto Recover நேர இடைவேளையை மாற்றக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. Office 2007 இலான Auto Recover நேர இடைவேளையை 10நிமிடத்துக்கு குறைவானதாக, உதாரணமாக, 5நிமிடமாக குறைத்தால், அனேகமான சந்தர்ப்பங்களிலே, உங்களது வேலையை அல்லது தரவுகளை சேமித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். உங்களுடைய மின்வழங்கல் அல்லது OS இல் ஏதாவது பிரச்சினையை நீங்கள் எதிர்கொண்டிருந்தால் இது மிகவும் உதவிகரமானதாக இருப்பது மெய்ப்பிக்கப்படும்.

Office 2007இல் Auto Recover இடைவேளையை மாற்றும் விருப்பத் தெரிவு, ஒவ்வொரு பிரயோகத்திலும் வழங்கப்படுகிறது. இங்கே நாங்கள் உதாரணத்துக்கு, Excel 2007 ஐப் பயன்படுத்துவோம். Office 2007 இல் Auto Recover நேரஇடைவேளையை மாற்றுவதற்கு பின்வரும் படிமுறைகளைக் கைக்கொள்ளுங்கள்:

- Office button மீது click செய்யுங்கள்.
- இப்போது தோன்றும் தெரிவுப்பட்டியலின் அடியில் உள்ள "Excel Options" button மீது click செய்யுங்கள்.
- இப்போ Excel Options dialog box தோன்றும். தெரிவுப்பட்டியலின் இடது புறம் உள்ள Save ஐத் தெரிவு செய்யுங்கள்.
- "Save AutoRecover Information" இற்கான box இல் 'சரி' அடையாளமிடுங்கள்.
- எவ்வளவு நேரத்துக்கு ஒரு முறை AutoRecover இற்கான தரவுகளை Excel சேமிக்கவேண்டும் என்பதைத் தெரிவு செய்யுங்கள்.
- Ok ஐ click செய்யுங்கள்.




நீங்கள் குறுகிய ஒரு நேர இடைவேளையை அமைக்கக்கூடாது வழமையை விட பெரிய வேலைத்தாள்கள் (Work sheet) அல்லது ஆவணங்களில் வேலை செய்யும் போது, Auto Recover ஐ, 1 நிமிடம் போன்ற குறுகிய நேரத்துக்கு அமைக்கக்கூடாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அப்படிச் செய்வது கணினியை மெதுவாகச் செயற்படச் செய்யும் என்பதோடு ஒவ்வொரு நிமிடத்துக்குப் பின்னும் பெருமளவிலான தரவுகளை சேமிப்பதென்பது கணினியின் மீது அழுத்தங்களை ஏற்படுத்தும்.

# புத்தகங்களை மிக எளிதாக தரவிறக்கம் செய்வதற்கு...



புத்தகங்களை எளிதாக தரவிறக்கம் செய்வதற்கு புதிதாக ஒரு புத்தகம் வந்திருக்கிறது என்றால் இணையத்தில் சென்று தேடும் நமக்கு நேரத்தை மிச்சப்படுத்தி நாம் தேடும் புத்தகத்தை நொடியில் தேடி தருகிறது ஒரு இணையம்.

கூகுள் தேடிக் கொடுக்காத தகவலே இல்லை என்றாலும் அதற்காக நாம் சில மணி நேரங்கள் செலவு செய்ய வேண்டி இருக்கிறது.

உதாரணமாக நமக்கு ஒரு புத்தகம் வேண்டும் என்றால் கூகுளில் சென்று புத்தகத்தின் பெயரைக் கொடுத்து தேடினால் வரும் முடிவுகளில் பலவற்றை தேடிப் பார்த்தபின் தான் ஏதாவது ஒன்றை தரவிறக்க முடியும். ஆனால் புத்தகங்களை மட்டுமே தேடி கொடுக்க பிரத்தியேகமாக ஒரு தேடுபொறி உள்ளது.

இத்தளத்திற்கு சென்றவுடன் தோன்றும் கட்டத்திற்குள் எந்த வகையான புத்தகம் தேவையோ அதன் பெயரைக் கொடுத்து Search என்ற பட்டனை கிளிக் செய்ய வேண்டியது தான்.

வரும் திரையில் உள்ள முடிவுகள் அத்தனையுமே அந்த புத்தகத்திற்கு தொடர்புடைய இணைப்பாக தான் இருக்கும். சரியானதை தேர்ந்தெடுத்து கிளிக் செய்து எளிதாக புத்தகத்தை தரவிறக்கலாம். Doc, PDF, PPT, XLS போன்ற கோப்புகளையும் தேர்ந்தெடுத்து தேடும் வசதியும் உள்ளது.

இணையத்தில் நமக்கு வேண்டிய புத்தகத்தை எளிதாக தரவிறக்க உதவும் இந்தத்தளம் நம் அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

http://www.saveitt.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினியை வாங்கிய பின் கவலையா? வாங்கு முன் தெரிந்து கொள்ளுங்கள்

**Tablet கள் மற்றும் Note book கள் என்பவை இடத்துக்கிடம் எடுத்துச் செல்லப்படும்போது அனேகரின் கணினி செயற்பாட்டு தேவைகளைப் பூர்த்தி செய்பவையாக இருக்கின்றன.**



Notebook

Notebook என்பது அடிப்படையில் மடிக் கணினிக்கான இன்னொரு பெயராகும். மடிக்கணினி என்பது சிறியதொரு பொதிக்குள் நசித்துப் புகுத்தப்பட்டுள்ள ஒரு கணினியாகும்.



Tablet PC

Tablet என்பது சிறியதும் மெல்லியதுமான வகை கணினியாகும். அனேகமான Notebook களில் அதிக இடவசதியை எடுத்துக்கொள்ளும் QWERTY தட்டச்சுப்பலகையை நீக்கிவிட்டிருப்பதே அது மெல்லியதாக இருக்கக் காரணமாகும். அதற்கு பதிலாக Notebook களின் பிரதான உள்ளீட்டு சாதனமாக அதனுடைய தொடுகை-கூருணர்வு கொண்ட திரை (Touch screen) இருக்கிறது. ஒரு Tablet இல் Stylus உள்ளடக்கப்பட்டிருக்கிறது. இதனை ஒருவர் சுட்டிக்காட்டும் சாதனமாகவும் அல்லது உள்ளீடுகளை எழுதும்போது ஒரு பேனையைப் போலவும் பயன்படுத்தலாம்.

Tablet களில் பயன்படுத்தப்படும் இயங்குதள அமைப்புகளில் (OS) மிகுந்த இயலுமை கொண்ட கையெழுத்து அடையாளம் (finger-print) காணும் மென்பொருள் உள்ளடக்கப் பட்டிருக்கிறது.

இந்த மென்பொருளானது ஒருவர் எழுதுவதை புரிந்துகொண்டு அதை Text (எழுத்துரு)ஆக மாற்றுகிறது.கையெழுத்தை அடையாளம் காணுதலை யாரும் விரும்பாவிட்டால் திரையிலேயே தட்டச்சுப் பலகையை இழுத்தெடுத்து அதனை உள்ளீடுகளைச் செய்யப் பயன்படுத்தலாம்.

Tablet களின் அனுகூலமாக அதன் நெகிழ்ச்சித்தன்மை இருக்கிறது. Notebook ஐ ஒருவர் சௌகரியமாக பயன்படுத்த வேண்டுமெனில் அதனை நிலைபேறான மேற்பரப்பொன்றின் மீது திறந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் ஒரு Tablet ஐ ஒரு கையில் பிடித்துக்கொண்டு மற்றக் கையை அதனைக் கையாளப் பயன்படுத்தலாம். எப்போதும் நகர்ந்துகொண்டிருப்பவர்கள் tablets ஐ விரும்ப இதுதான் காரணமாகும்.


Note book ஐப் பொறுத்தவரை notebook ஐ விட மிகச் சிறப்பான செயற்பாட்டை tablet கள் கொண்டுள்ளன. Tablet களின் அனுகூலங்கள் இதுவரையில் சொல்லப்பட்டன. அவை பிரதிகூலங்களையும் கொண்டுள்ளன.

குறிப்பாக அவற்றின் விலையைச் சொல்லலாம். ஒரு குறிப்பிட்ட விவரக் குறிப்புகளுடனான tablet களை அதே விவரக் குறிப்புகளுடனான notebook களுடன் ஒப்பிடும்பொழுது அவை குறிப்பிடத்தக்களவில் அதிக விலை கொண்டவையாக இருக்கின்றன.

ஒருவர் இறுக்கமான வரவு செலவுகளுடன் செயற்படுபவராக இருந்தால் அவர் செலவழிக்கும் பணத்துக்கு tablet இலிருந்து பெறுவதைவிட அதிகமாக notebook இலிருந்து பெறமுடியும். தொடுகைத் திரைகாட்சிப் பீடத்துடன் கூடிய notebook கள் தோன்றத் தொடங்கியிருப்பதன் காரணமாக tablet களுக்கும் notebook களுக்குமிடையேயான எல்லைக்கோடுகள் மங்கலடையத் தொடங்கி யுள்ளன.

இந்தக் காட்சிப்பீடங்களைச் சுண்டிவிட்டு அல்லது சுழற்றி tablet போல் செயற்படுமாறு செய்யலாம். notebook, tablet இரண்டையும் ஒருங்கே கொண்ட நெகிழ்ச்சித் தன்மை கொண்ட கருவியை ஒருவர் பெற்றுக்கொள்ளலாமெனினும் அதனுடைய எடை குறிப்பிடத்தக்களவில் அதிகமானதாகவும் notebook களைவிட அதிக விலை கொண்டதாகவும் இருக்கும்.

சுழலுகின்ற LCD காட்சிப்பீடத்தின்(Rotatable screen) பிணைச்சலானது பலவீனமான இடமொன்றாக இருக்கிறது. இங்கே விரைவாக சேதம் ஏற்படக்கூடிய வாய்ப்பும் இருக்கின்றது.



**தெரிந்துகொள்ளுங்கள் :**

- Notebook களில் இருக்கும் QWERTY ஆளிப்பலகைகளின் இயலுமைகளை tablet களின் ஆளிப்பலகைகள் முழுமையாகக் கொண்டிருக்காது.
- Tablet களில் இருக்கும் தொடுகைத்திரை இடைமுகப்பு அநேகமான notebook களில் காணப்படுவதில்லை.
- மடிக்கணனிகளுடன் ஒப்பிடும்பொழுது tablet கள் அதிக நெகிழ்ச்சித் தன்மையைக் கொண்டிருக்கின்றன.
- Notebook களுடன் ஒப்பிடும்போது tablet கள் மிக அதிக விலையைக் கொண்டவையாக இருக்கின்றன.

1ம் பக்க தொடர்...

உங்கள் ஹார்ட் டிரைவுக்குள் தூசி நுழைந்து பிளேட்டர்-கள் மீது படிகிற பட்சத்தில், டிஸ்க் இயங்கும்போது உண்மையில் கரத்தைத் துள்ளச்செய்யும். காந்தப் பதிவு ஊடகம் மிகவும் பலவீனமானது, மற்றும் ஹெட்-கள் பிளேட்டர்-கள் மீது மோதுகிற போதெல்லாம் அடிக்கடி அது சிதைக்கப்படுகிறது.

மடிக்கணினிகள் பயன்படுத்துகிற மக்களும் மிகவும் கவனமுடன் இருக்கவேண்டும், ஏனெனில் தாறுமாறாக உங்கள் மடிக்கணினியை நகர்த்துவதன் காரணமாக ஹெட் கிராஷ் ஏற்படக்கூடும். உங்கள் மடிக்கணினி இயக்கப்பட்டு உள்ள நிலையில் நீங்கள் அதை நகர்த்துகிற போதெல்லாம், அதை நீங்கள் எடுத்து மிகவும் மென்மையாக வைக்க வேண்டும். நீங்கள் அவ்வாறு செய்யாத பட்சத்தில், அதனை தொடர்ந்து உங்கள் ஹார்ட் டிஸ்க் டிரைவ் ஒட்டுமொத்தமாக செயலிழந்து போகக்கூடும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன் வளர்ச்சியைக் கட்டுப்படுத்திய உலகின் மிக உயரமான மனிதர்

துருக்கி நாட்டைச்சேர்ந்த 29 வயதான Sultan kosan என்பவர் 8 அடி 3 அங்குலம் உயரமானவர். இவர் கின்னஸ்புத்தகத்தில் மிக உயரமான மனிதராக இடம் பிடித்துள்ளார். ஆனால் இவருடைய உயரமான தோற்றம் இவருக்கு ஆபத்தானது. இதற்கு காரணம் இவருக்கு உள்ள Acromegaly எனும் நோயாகும்.


மூளையின் அடிப்பகுதியில் pituitary சுரப்பியில் ஓர் கட்டியின் (Tumor) வளர்ச்சியானது அதிகளவு ஓமோன்களை (Hormones) சுரக்கிறது. இதுவே அவரின் அதீத வளர்ச்சிக்குக் காரணமென மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக இவரின் வன்கூடு (Skeleton) ஒத்துழைக்க மாட்டாது. இந்த அதீத வளர்ச்சியைத் தடுப்பதற்காக University of Virginia Medical Center மருத்துவர்கள் அதிகளவு ஓமோன் களைச்சுரக்கக் காரணமான கட்டியை (Tumor) சத்திரசிகிச்சை மூலம் அகற்றியுள்ளனர். ஆனால் இது மிகவும் ஆபத்தானதொன்றாக இருந்தது. ஏனெனில் இவரின் மூளையில் உள்ள கட்டியானது மூளையின் மற்றைய இடங்களிற்கும் பரவியுள்ளது. இதை ஓர் சவாலாக எடுத்து நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் Dr. Jason sheehan " Gamma knife radiosurgery " மூலம் அகற்றியுள்ளார்.

கடந்த 3 மாதங்களிற்கு முன் Kosen இன் துருக்கி மருத்துவர்கள் இவரின் அதீத ஓமோன் வளர்ச்சி நிறுத்தப்பட்டுள்ளதை UVA மருத்துவர்களிடம் தெரிவித்துள்ளனர்.



# Retina Display

## என்றால் என்ன?




Retina Display - Apple இனால் June 2010 ஆம் ஆண்டு iPhone 4 இல் உயர்தர மொத்த திரைப்புள்ளிகளுக்கான தொழில்நுட்பத்தை ( High resolution screen technology ) அறிமுகம் செய்யப்பட்டபோது இந்த பெயர் கொடுக்கப்பட்டது.

இந்த Retina Display ஆனது கையடக்க கருவிகளில் முன்னரைவிட சிறந்த திரைப்புள்ளிகளுடன் கூடிய உயர்தர விம்பத்தை ( High quality image ) பெறும் நோக்கோடு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த தொழில்நுட்பத்தின் பிரதிபலிப்பைப் பல்வேறு பாவனைகளில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. முக்கியமாக எழுத்து வடிவங்களில் (fonts) அதன் வளைவுகள், நுனிகள் என்பன முன்னைய தொழில்நுட்பத்தைப் பார்க்கிலும் மிகவும் துல்லியமாகவும் நேர்த்தியாகவும் அமைந்துள்ளது.



***Retina Display யிலிருந்து பின்வரும் அம்சங்களைப் பெறக்கூடியதாக உள்ளது.***

- iPhone இன் திரையானது உயர் அடர்த்தியுடன் கூடிய திரைப்புள்ளிகளைக் (Pixel) கொண்டது.
- பிரகாசமான வெளிறிய நிறங்களுக்கும் ஆழமான கறுப்பு நிறங்களுக்கும் இடையேயான வித்தியாசம் உயர் அளவில் உள்ளது.
- In - Plane Switching ( IPS) தொழில்நுட்பத்தின் மூலம் பார்வைக்கோணங்கள் சிறப்பாக அமைந்துள்ளன.
- உயர்தர விம்பங்களைப்பெறும் நோக்கோடு இரசாயனப்பதார்த்தங்களினால் ஆன கண்ணாடி மற்றும் LED ஒளியமைப்பபைக்கொண்டது



### மொத்தத்திரைப்புள்ளிகள் (Resolution)

iPhone மற்றும் ipod இன் Retina Display ஆனது 960X640 திரைப்புள்ளிகளைக் கொண்டது. இவ்விரு கருவிகளும் 3.5 inch அளவுடைய மூலைவிட்ட அளவுடையது. அதாவது 326 திரைப்புள்ளிகள் ஒரு inch இனுள் அடங்கும். இது மனிதக்கண்ணை ஒத்தது என Apple நிறுவனம் தெரிவிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# CPU Cooler ஐ install செய்வது எப்படி


நிலையாக சரிவர install செய்யப்பட்ட CPU cooler ஆனது system த்தில் மிக முக்கியமாகும். இங்கு நாங்கள் CPU cooler மற்றும் AMD processor ஐ எப்படி install செய்வது என்பதைப் பார்ப்போம்.

இதற்காக உங்களுக்கு எந்தவொரு பட்டப்படிப்பும் தேவையில்லை. எளிமையாக வேறெந்த ஆயத்தவேலை களின்றி CPU cooler ஐ பூட்டுதல் மிகத்திறமையான system ஐத் தரும். ஆனாலும் கொஞ்சநேரம் எடுத்து CPU வின் heat spreader மற்றும் heat sink ஐ சுத்தம் செய்வதனால் CPU வின் வெப்பத்தை தணிக்கமுடியும்.

அதுமட்டுமல்லாமல் systemத்தின் சத்தத்தையும் குறைக்கமுடியும். இது எல்லாவற்றிற்கும் மிக முக்கியமானது CPU cooler சரிவர பொருத்தப்படல் ஆகும். இதற்கான படிமுறைகளை நாம் இங்கு காட்டியுள்ளோம். மனதில் கொள்ளவும் இது destop processor களுக்கு மட்டுமே பொருந்தும்.

## Cooler ஐ AMD processor இல் install செய்தல்

தற்போதைய AMD destop processor கள் AM2, AM3, AM3+ மற்றும் FMI socket வகைகளுக்குப் பொருந்தும். CPU cooler installation ஆனது அனைத்திற்கும் ஒரே மாதிரியாகும்.



1) CPU ஆனது முழுமையாக அதன் socket ல் insert செய்யப்பட்டுள்ளதை உறுதிசெய்யவும்.

சரியாக install செய்வதற்கு CPU இல் கீழ்புறமாக சிறிது அழுத்தத்தைக் கொடுக்கவும். இறுதியில் CPU வானது socket ல் மட்டமாக பொருந்தியிருப்பதை உறுதி செய்யவும்.

2) CPU மற்றும் Heat sink மேல் புறங்களைச் சுத்தம் செய்யவும். CPU வின் heat spreader ஆனது cooler இன் heat sink உடன் நேரடித்தொடர்புடன் இருப்பதால் இரு மேற்பரப்புகளும் சுத்தமாக இருத்தல் வேண்டும். சுத்தமான துணியில் சிறிது Isopropyl Alcohol ஐ நனைத்து heat sink ன் அடிப்புறத்தையும் CPU வின் heat spreader ஐயும் துடைத்தல் வேண்டும்.

எண்ணெய்ப்பசையோ, சிறு துணிக்கைகளோ இன்றி சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

(இதன் தொடர்ச்சி 8 ம் பக்கத்தில்..)

# பதிவகத்துள் உடைத்து உள்நுழைதல் மூலம் Microsoft 2007 இன் பின்னணி நிறத்தை மாற்றுவது எப்படி?

Office 2007 இன் ஆரம்ப அமைப்பாக இருக்கும் நீலநிற பின்னணி பற்றி நாங்கள் சிலவேளைகளில் சலிப்புக் கொள்கிறோம். Office 2007 இனுடைய இந்த வர்ண பின்னணியை மாற்றியமைப்பதற்குப் பல வழிகள் உள்ளன. இந்த வழிகளில் ஒன்றாக, பதிவகத்தினுள் (Windows Registry) உடைத்து நுழைவதன் மூலம் Office 2007 இன் பின்னணியை மாற்றியமைக்கலாம். இந்த வழியைத் தவிர, GUI ஐ பயன்படுத்துவதன் மூலம் அல்லது குழுக்கொள்கை உருப்படிவத்தை (Group Policy Template) பயன்படுத்துவதன் மூலமும் பின்னணியை மாற்றியமைக்கலாம்.

கீழே உள்ள படிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் பதிவகத்துள் உடைத்து உள்நுழைதல் மூலம் Office 2007 இன் பின்னணி வர்ணத்தை மாற்றியமைக்கலாம்.

1.) நீங்களே நேரடியாக பதிவகத்துள் உடைத்து உள்நுழைதலைப் பயன்படுத்தல்.

2.) நீங்களே நேரடியாக பதிவகத்துள் உடைத்து உள்நுழைவதன் மூலம் Office 2007ன் பின்னணி நிறத்தை மாற்றியமைக்கும் விதத்தில் regedit.exe ஐ திறப்பதற்கு Start Menu - Search box அல்லது Run box ஐ பயன்படுத்துங்கள்.

3.) கணினிபதிவகத்தை ஒழுங்கமைக்க முதலில் நீங்கள் நிர்வாக உரிமையுடன்(Administrator Account ) உங்கள் கணினியில் இணைய வேண்டும்.

4.) Start button ஐ click செய்து , run விருப்பத் தெரிவில் regedit ஐ தட்டச்சு செய்து, அடுத்த கட்டத்துக்கு போக, Enter ஐ அழுத்துங்கள்

கீழே உள்ள அமைப்புக்குச் செல்லுங்கள்:

HKEY_CURRENT_USER\Software\Microsoft\Office\12.0\Common

விண்டோவின் வலப்புறத்திலிருந்து, Theme என்பதைத் தெரிவு செய்யுங்கள்

நீங்கள் விரும்பும் நிறத்தைப் பெறுவதற்கு, கீழே உள்ள பெறுமதிகளில் ஒன்றை அமையுங்கள்.

நீல நிறப் பின்னணிக்கு : 1
வெள்ளி நிறப் பின்னணிக்கு : 2
கறுப்பு நிறப் பின்னணிக்கு : 3

நீங்கள் செய்த மாற்றங்கள் நடைமுறைக்கு வருவதற்கு, பதிவக ஒழுங்காக்கியை (Registry Editor) மூடிவிட்டு, உங்கள் கணினியை மீளத் தொடங்குங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Cooler ஐ Intel processor இல் install செய்தல்

**1) CPU அதன் socket இல் சரியாக உள்ளதா என்பதை உறுதிசெய்தல்**

Intel processor இல் pin கள் இல்லை. AMD இல் உண்டு. Processor ஆனது அதன் அடிப்புறத்தில் மின்னைக்கடத்தும் pad களை கொண்டிருக்கும். Intel CPU ஆனது அதன் socket இல் சரியாக அமைந்துள்ளதா என்பதை அறிய locking load lever ஐ பக்கமாக மேல்நோக்கி எடுக்கவேண்டும். CPU socket இல் key கள் உள்ளதால் CPU ஆனது ஒரு பக்கமாக மாத்திரமே insert பண்ணமுடியும். எல்லா பக்கத்திலும் மட்டமாக பொருத்தப்படல் வேண்டும்.

**2) CPU மற்றும் heat sink மேற்பரப்புகளை சுத்தம் செய்தல்.**

Cooler இன் heatsink இன் அடிப்பாகமும் CPU வும் மிகவும் சாதகமான தொடுகையில் இருக்கவேண்டுமானால் அவ்விரு மேற்பரப்புகளும் சுத்தமாக இருத்தல் அவசியம். சுத்தமான துணியில் isopropyl alcoholஐ நனைத்து இவ்விரு மேற்பரப் புகளையும் துடைக்கவேண்டும்.


**3) CPU விற்கும் heatsink மேற்பரப்பிற்கும் thermal paste இடுதல்.**

இரு மேற்பரப்பிற்கும் சிறியளவு thermal paste ஐ இட்டு வட்ட ஒழுங்கில் அதன் மேற்பரப்புகளுக்கிடையில் தடவவேண்டும். CPU வின் மேற்பரப்பில் சிறிய அளவு தடவினால் போதும் இருமேற்பரப்பு களுக்கிடையில் உள்ள காற்றமுத்தத்தை இல்லாமல் செய்கிறது.


**4) CPU cooler ஐ பொருத்துதல்**

பொதுவாக Intel processor களின் air cooler களில் அதன் துவாரங்களில் plastic pushpin கள் உள்ளன. Intel cooler ஐ install செய்யும் போது அதன் pushpin கள் ஆனது ஒழுங்காக உள்ளனவா என்பதை உறுதி செய்யவேண்டும். பின்னர் 4 mounting hole களிலுள்ள கொழுக்கிகளை அழுத்தி pushpin களை insert செய்ய வேண்டும் அல்லாவிடில் heatsink சரிவர அமையாது. இதனால் உங்கள் processor சூடாகிவிடும். Cooler ஐ CPU விற்கு சமாந்தரமாய் பதித்து socket இலுள்ள நான்கு mounting hole களிலுள்ள plastic கொழுக்கிகளை insert செய்யவேண்டும்.

ஒரு கையில் கீழ்ப்புறமாக அழுத்தத்தை கொடுத்து heat sink ஐ flat ஆக வைத்திருக்கவேண்டும் மறுகையால் criss-cross வழவில் heatsink ஐச் சுற்றி pushpins ஐ செருகவேண்டும். Heat sink சரிவர அமைந்ததும் கொழுக்கிகளை மேல் புறமாக இழுத்து அதை lock செய்யவேண்டும். எல்லாம் அமைந்ததும் cooler இன் fan connector ஐ motherboard உள்ள CPU fan header இல் பொருத்தவேண்டும்.



## Bluetooth இன் புதிய பரிமாணம்



வயர் இணைப்பு எதுவுமின்றி இணைப்பைத் தரும் புளூடூத் தொழில் நுட்பம், எப்படி நம் வாழ்வையே மாற்றும்? என்ற கேள்வி நம்மில் பலருக்கு எழலாம். அதுதான் உண்மை என அடித்துக் கூறுகிறார் புளூடூத் எஸ்.ஐ.ஜி. (Special Interest Group) குழுமத்தின் செயல் இயக்குநர் போலே. இந்த குழுமத்தில், புளூடூத் தொழில் நுட்பத்தில் இயங்கும் சாதனங்களைத் தயாரிக்கும் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் உள்ளன.

புளூடூத் முதலில் நமக்கு அறிமுகமான போது, கோப்புகள் மற்றும் டிஜிட்டல் தகவல்கள் பரிமாற்றத்திற்கு மிக அருமையான வசதி என அனைவரும் பாராட்டினோம் பயன் படுத்தினோம். பின்னர், இதில் பல பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டி இருந்தது.

தகவல் பரிமாற்றத்திற்கான சாதனங்கள் இணையாக இருந்து இணைப்பதில் சிக்கல், பாஸ்வேர்ட் அமைத்து இயக்குவதில் பிரச்சினை, திடீரென தகவல் இணைப்பு அறுந்து போதல்,மற்றும் பிற உடனடியாகத் தீர்க்க இயலாத சிக்கல்களும் இருந்தன. இவை அனைத்தும் புளூடூத் 4 தொழில் நுட்பம் தீர்த்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சரி, எப்படி தீர்க்கும்? என்ன என்ன வகையில் இது முந்தைய தொழில் நுட்பத்தைக் காட்டிலும் கூடுதல் திறன் கொண்டது? புளூடூத் தொழில் நுட்பம் இயங்கும் தொலைவு அதே 300 அடியாக உள்ளது. புளூடூத் 2ஐக் காட்டிலும் பதிப்பு 3, சற்றுக் கூடுதல் வேகத்தில் டேட்டாவினைக் கடத்தியது. பதிப்பு 2.1 ன் வேகம் 2Mbps ஆக இருந்தது. பதிப்பு 3ன் வேகம் 26Mbps ஆக உள்ளது. இது வீடியோ ஸ்ட்ரீமிங் போன்ற பணிகளுக்கு மிகவும் உதவியது. புளூடூத் 4 இவற்றைக் காட்டிலும் கூடுதல் திறன் கொண்டதாக இருக்கும். ஐந்திலிருந்து பத்து மடங்கு வேகக் கூடுதல் இருக்கும். அதிக நாட்கள் மின்திறன் தரும் பட்டரியுடன் இயங்கும் திறன் கொண்டதாக இருக்கும். இதனால், ட்ரெட்மில் போன்ற, தனி நபர் உடல்நலன் கணக்கிடும் சாதனங்களில் இதன் செயல்பாடு நமக்கு மிக மிக உதவியாக இருக்கும்.அடுத்ததாக, என்.எப்.சி. எனப்படும் அண்மைக்காலத் தகவல் பரிமாற்றம் (Near Field Communication) திறன் கொண்ட சிப்களின் செயல்பாட்டிற்கு இந்த புளூடூத் பதிப்பு 4 மிகவும் பயன்படும்.

புளூடூத் 4 இந்த தொழில் நுட்பம் கொண்ட போன்களுடன் எளிதில் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள முடியும். லப்டாப், மொபைல் போன் மற்றும் ரெளட்டர் போன்ற சாதனங்களின் இணைப்பு, புளூடூத் பதிப்பு 4 மூலம் அதிகத் திறன் கொண்டதாக அமையும். இந்த தொழில் நுட்பத்திற்கேற்ப வடிவமைக்கப்படும் சாதனங்கள் அனைத்தும், புளூடூத் பதிப்பு 2 மற்றும் 3 ஆகியவற்றையும் கையாளும். புளூடூத் 4 ஏற்கனவே Motorola_Droid_ Razr_Maxx ஆகிய மொபைல் போன்களில் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய தொழில் நுட்பத்திற்கு Bluetooth Smart Ready எனப் பெயர் இடப்பட்டுள்ளது. இது குறித்த கூடுதல் தகவல்களுக்குக் கீழ் உள்ள தளத்தை அணுகவும்.

http://www.bluetooth.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவை அண்ணாந்து பார்க்க வைத்த தமிழன்

கே.ஆர். ஸ்ரீதர் - இன்றைய தேதியில் அமெரிக்கா முழுமைக்கும் வியப்போடு கவனிக்கப்பட்டு வரும் பெயர். இதுவரை யாருமே செய்திராத ஓர் அதிசயத்தை செய்து காட்டியதன் மூலம் அமெரிக்க பிஸினஸ் உலகமே இவரை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கிறது. இதில் பெருமைக்குரிய விஷயம், இவர் ஒரு தமிழர் என்பதே.

அப்படி என்னதான் சாதனை செய்துவிட்டார் இந்தத் தமிழர் திருச்சியில் உள்ள ரீஜினல் என்ஜினீயரிங் காலேஜில் (தற்போது என்.ஐ.டி.) மெக்கானிக்கல் என்ஜினீயரிங் படித்து முடித்தவுடன் அமெரிக்காவில் உள்ள இல்லினாய்ஸ் பல்கலைக்கழகத்தில் நியூக்ளியர் என்ஜினீயரிங் படித்து விட்டு,அதே பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டமும் பெற்றார் ஸ்ரீதர்.



மிகப் பெரிய புத்திசாலியாக இருந்த இவரை நாசா அமைப்பு உடனடியாக வேலைக்கு எடுத்துக் கொண்டது. அரிசோனா பல்கலைக் கழகத்தில் ஸ்பேஸ் டெக்னாலஜீஸ் லேபரட்டரியின் இயக்குநராக அவரை நியமித்தது. செவ்வாய்க் கிரகத்தில் மனிதன் வாழ முடியுமா? அதற்குத் தேவையான சாத்தியக்கூறுகளைக் கண்டுபிடிப்பது எப்படி? என்பது பற்றி ஆராய்ச்சி செய்வதே ஸ்ரீதரின் வேலை

முக்கியமாக செவ்வாய்க் கிரகத்தில் மனிதன் சுவாசிக்கத் தேவையான ஆக்ஸிஜனை தயார் செய்ய முடியுமா என்கிற ஆராய்ச்சியை மேற்கொண்டார். இந்த ஆராய்ச்சியில் மிகப் பெரிய வெற்றியும் பெற்றார்.


ஆனால் அமெரிக்க அரசாங்கமோ திடீரென அந்த ஆராய்ச்சியை ஓரங்கட்டிவிட்டது. என்றாலும் தான் கஷ்டப்பட்டு கண்டுபிடித்த விஷயத்தை ஸ்ரீதர் அப்படியே விட்டுவிடவில்லை. அந்த ஆராய்ச்சியை அப்படியே ரிவர்ஸில் செய்து பார்த்தார் ஸ்ரீதர். அதாவது, ஏதோ ஒன்றிலிருந்து ஆக்ஸிஜனை உருவாக்கி வெளியே எடுப்பதற்குப் பதிலாக அதை ஒரு இயந்திரத்துக்குள் அனுப்பி, அதனோடு இயற்கையாகக் கிடைக்கும் எரிசக்தியைச் சேர்த்தால் என்ன நடக்கிறது என்று ஆராய்ந்து பார்த்தார்.

அட, என்ன ஆச்சரியம்! மின்சாரம் தயாராகி வெளியே வந்தது.

இனி அவரவர்கள் தமக்குத் தேவையான மின்சாரத்தை இந்த இயந்திரம் மூலம் தயார் செய்து கொள்ளலாம் என்கிற நிலையை ஸ்ரீதர் உருவாக்கி இருக்கிறார்.

தான் கண்டுபிடித்த இந்தத் தொழில் நுட்பத்தை அமெரிக்காவில் செய்து காட்டிய போது அத்தனை விஞ்ஞானிகளும் அதிசயித்துப் போனார்கள்.

ஆனால் இந்த புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, வர்த்தக ரீதியில் மின்சாரம் தயாரிக்க வேண்டுமெனில் அதற்கான இயந்திரங்களை உருவாக்க வேண்டும். இதற்கு பெரிய அளவில் பணம் வேண்டும். இப்படிப்பட்ட தொழில்நுட்பத்தை உருவாக்கும் பிஸினஸ் பிளான்களுக்கு வென்ச்சர் கேப்பிட்டல் நிறுவனங்கள்தான் பணத்தை முதலீடு செய்யும். ஸ்ரீதருக்கும் அப்படி ஒருவர் கிடைத்தார்.




அவர் பெயர், ஜான் டூயர். சிலிக்கன் பள்ளத்தாக்கில் பிரபலமாக இருக்கும் மிகப் பெரிய வென்ச்சர் கேப்பிட்டல் நிறுவனமான க்ளீனர் பெர்க்கின்ஸை சேர்ந்தவர் இந்த ஜான் டூயர். அமெரிக்காவில் மிகப் பெரும் வெற்றி கண்ட நெட்ஸ்கேப், அமேசான், கூகுள் போன்ற நிறுவனங்கள் வளர்ந்து நிற்க காரணம்.ஜான் டூயர் ஆரம்பத்தில் போட்ட முதலீடுதான்

கூகுள் நிறுவனத்தை ஆரம்பிக்க ஜான் டூயர் தொடக்கத்தில் போட்ட முதலீடு வெறும் 25 மில்லியன் டாலர்தான். ஆனால், ஸ்ரீதரின் தொழில்நுட்பத்தை வர்த்தக ரீதியில் செயல்படுத்த ஜான் டூயர் போட்ட முதலீடு 100 மில்லியன் டாலர். இது மிகப் பெரும் தொகை. என்றாலும் துணிந்து முதலீடு செய்தார் ஜான். காரணம், ஸ்ரீதர் கண்டுபிடித்த தொழில்நுட்பம் சுற்றுச்சூழலுக்கு உகந்தது.

பொதுவாக மின் உற்பத்தி செய்யும்போது சுற்றுச்சூழல் பிரச்னைகள் நிறையவே எழும். அது நீர் மின் உற்பத்தியாக இருந்தாலும் சரி, அனல் மின் உற்பத்தியாக இருந்தாலும் சரி. எனவே சுற்றுச்சூழலுக்கு எந்த வகையிலும் பங்கம் வராத மின் உற்பத்தித் தொழில்நுட்பத்துக்கு மிகப் பெரிய வரவேற்பு இருக்கும் என்று நினைத்தார். அவர்தவிர ஸ்ரீதரின் தொழில்நுட்பத்தைக் கொண்டு குறைவான செலவில் மின்சாரம் தயார் செய்ய முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OEM Version


5ம் பக்க தொடர்ச்சி.....

3) முக்கியமாக CPU விற்கும் Heat sink மேற்பரப்பிற்கும் இடையில் Thermal paste இடல்.




சிலர் இது தேவையற்றதொன்றாகக் கருதுவார்கள். இந்த Thermal interface material ஐ (TIM) ஐ இடுவதன் நோக்கம் ஆனது CPU விற்கும் heat sink மிடையே உள்ள காற்றமுத்தத்தை இல்லாமல் செய்வது ஆகும்.

இந்த TIM ஆனது காற்றை விட சிறந்த வெப்பகடத்தியாகும். இது வெப்பத்தை CPU விலிருந்து heatsink ற்குக் கடத்துகிறது. இதை சிறிதளவு இட்டு இருமேற்பரப்புகளையும் வட்ட ஒழுங்கில் உரசும் போது அது சமமாக அதன் மேற்பரப்புகளில் படிகிறது. இதன் பின்னர் cooler ஐ CPU வில் பொருந்தவும். இதற்கிடையில் காற்றிடைவெளி இருக்க மாட்டாது.




4) CPU cooler ஐப் பொருத்துதல்

Thermal paste சமமாக இரு மேற்பரப்புக்களில் பரவியிருப்பதை உறுதி செய்யவேண்டும். பின்னர் cooler ஐ CPU விற்கு சமாந்தரமாக பதித்து அதில் உள்ள clip களை mounting bracket இல் உள்ள hook களில் கீழ்புறமாக அழுத்திக்கொழுவ வேண்டும். இறுதியாக cooling fan உள்ள connector ஐ motherboard இல் உள்ள CPU fan header இல் கொழுவவேண்டும்.

## OEM version இன் window 7 ஆனது upgrade version ஐ விட ஏன் மலிவானது ?

இந்த OEM மென்பொருளானது (Original Equipment Manufacturer ) எப்போதும் கணினியுடனேயே அமைந்துள்ள ஒரு பொருளாகும். தனித்து இதனை விற்பனை செய்யமுடியாது. ஆனாலும் வெளிப்படையாக இதன் தயாரிப்பாளர்களான Tiger Direct போன்றவை இந்த OEM மென்பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்கிறார்கள்.




OEM மென்பொருட்களுக்குச் சில வரையறைகள் உண்டு. தொழில்நுட்ப ஒத்துழைப்பு இந்த மென்பொருட்களில் இல்லை. இந்த மென்பொருளானது வன்பொருட்களுடன் (Hardware) இணைந்து இருந்தாலும் வாடிக்கையாளர்கள் கணினி தயாரிப்பாளர்களிடமே உதவியைக் கோர வேண்டும்.


மிக முக்கியமானதொன்று என்னவெனில் OEM மென்பொருளானது ஒரு கணினியிலிருந்து இன்னொரு கணினிக்கு எந்த வித பிரச்சினையுமின்றி மாற்றமுடியும். பழைய கணினியில் அதை uninstall செய்யவும் முடியும். ஆனால் OEM version ஐ ஒரு கணினியில் install செய்தால் அது இறுதிவரைக்கும் இருக்கும்.

## குறித்த கணினியில் பேஸ்புக் இணையத்தளத்தை தடை செய்வதற்கு:

***பிரபல சமூக வலைத்தளமான பேஸ்புக் அதன் பயனாளர்களுக்கு சில வழிகளில் நன்மை தருகின்ற போதிலும், வேறு விதத்தில் தீமை விளைவிக்கக் கூடியதாக உள்ளது.***


எனவே பாடசாலைகள் போன்ற இடங்களிலும் இத்தளத்தை முடக்குவது கட்டாயமானதாக காணப்படலாம்.

இவ்வாறு பேஸ்புக் தளத்தை முடக்குவதற்கு FB Limiter எனும் மென்பொருள் காணப்படுகின்றது.




இம்மென்பொருளைத் தரவிறக்கம் செய்து குறித்த கணினியில் நிறுவிய பின் ஒரே ஒரு கிளிக் மூலம் பேஸ்புக் தளத்தை முடக்க முடியும்.

இது தவிர கடவுச்சொற்களைக் கொடுத்து முடக்கும் வசதியும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




**இந்த மென்பொருளை தரவிறக்கம் செய்ய:**
**http://www.facebooklimiter.com/**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



WiFi என்பது உலகம் எங்கும் பயன்படுத்தப்படுகிற ஒரு கம்பியில்லா வலைப்பின்னல் ஏற்படுத்துதல் தொழில் நுட்பம் ஆகும். Wi-Fi என்பது, மின்சார மற்றும் மின்னணு பொறியியலாளர்கள் கல்வி நிறுவனத்தால் (IEEE) உருவாக்கப்பட்டு 1997ம் ஆண்டில் வெளியிடப்பட்ட 802.11 தரநிலையை பயன்படுத்துகிற எந்தவொரு அமைப்பையும் குறிப்பதாகும்.


WiFi, அல்லது wifi, என பலவாறு சொல்லப்படுகிற Wi-Fi, என்ற சொல், இத்தொழில்நுட்பத்தை வணிகப்படுத்திய முன்னோடி நிறுவனமான Wi-Fi அல்லயன்ஸ் (Wi-Fi Alliance) என்கிற ஒரு வணிகக் குழுமத்தின் பெயரால் பிரபலமடைந்தது.

ஒரு Wi-Fi வலைப்பின்னலில், Wi-Fi® வலைப்பின்னல் கார்ட்-களுடன் (network cards) கூடிய கணினிகள் கம்பியில்லாமல் ஒரு கம்பியில்லா ரூட்டர் (wireless router) உடன் இணைக்கப்படுகிறது. இந்த ரூட்டர்-ரானது, ஒரு மோடம் (modem) வழியாக, அதாவது பொதுவாக ஒரு கேபிள் அல்லது DSL மோடம் வழியாக இணையத்துடன் இணைக்கப் படுகிறது.

அணுகிப்பெறுதல் புள்ளியில் (access point) இருந்து 200 அடிகள் அல்லது அதற்குள் (ஏறத்தாழ 61 மீட்டர்கள்) உள்ள எந்தவொரு பயனரும் இணையத்துடன் இணைக்க முடியும், இருந்தபோதிலும் மேம்பட்ட இடமாற்ற விகிதங்களுக்காக, 100 அடிகள் (30.5 மீட்டர்கள்) அல்லது அதற்கு குறைவான தொலைவுகளில் இருந்து பயன்படுத்துவது சிறந்தது. சில்லறை விற்பனையாளர்கள், ஒரு கம்பியில்லா வலைப்பின்னலின் வீச்சு எல்லையை அதிகப்படுத்துகிற கம்பியில்லா சமிக்ஞை பூஸ்டர்களையும் (wireless signal boosters) விற்பனை செய்கின்றனர்.



WiFi® வலைப்பின்னல்கள், எவரும் எளிதில் பயன்படுத்தக்கூடிய "திறந்த" அமைப் பாகவோ அல்லது ஒரு கடவுச்சொல் தேவைப்படுகிற "மூடிய" அமைப்பாகவோ இருக்கலாம். கம்பியில்லா அணுகிப்பெறுதல் எல்லைக்குட்பட்ட பகுதி, பெரும்பாலும் கம்பியில்லா ஹாட்ஸ்பாட் (wireless hotspot) என அழைக்கப்படுகிறது. WiFi® தொழில்நுட்பம், தொடர்பாடலுக்கு பொதுவாக 2.4GHz அதிர்வெண்ணில் (frequency) இயங்குகிற வானொலியைப் பயன்படுத்துகிறது.




WiFi சான்றளிக்கப்பட்ட மின்னணுவியல் பொருட்கள், அவை எந்த நிறுவன தயாரிப்பாக இருந்தாலும் ஒன்றுடன் ஒன்று உள்ளிணைந்து இயங்க உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு எளிதில் எடுத்துச்செல்லக்கூடிய மற்றும் குறைந்தபட்ச மின்சக்தியை பயன்படுத்தக்கூடிய வகையிலான லேசான எடையுள்ள எதிர்கால கணக்கிடுதல் அமைப்புகளுக்கு உதவக் கூடிய வகையில் WiFi தொழில்நுட்பம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

PDAs, மடிக்கணினிகள், மற்றும் பல்வேறு துணைக்கருவிகளும், WiFi- இணைக்கத் தன்மை யுடன் இருக்கும்வகையில் வடிவமைக் கப்படுகின்றன. செல்ஃபோன் வலைப்பின்னல்களில் இருந்து WiFi வலைப்பின்னல்களுக்கு, ஒரு அழைப்பையும் இழக்காமல் இசைவாக மாறிக்கொள்கிற வகையில் செயலாற்றுகிற தொலை-லபேசிகளை உருவாக்குகிற முயற்சிகள் நடந்துவருகின்றன.

புதிய WiFi தொழில்நுட்பங்களின் வீச்சு எல்லை 300 அடிகளில் (91.5 மீட்டர்கள்) இருந்து 600 அடிகள் வரையிலும் மற்றும், தரவுகள் இடமாற்ற விகிதங்களை அதிகப்படுத்தும் போது மேற்கூறிய வீச்சு எல்லையைக் காட்டிலும் அதி-கமாகவும் செயலாற்றலுடன் விளங்கும். இக்காலத்தில், பெரும்பாலான புதிய மடிக்கணினிகள் தம்முள், உட்புற கம்பியில்லா வலைப்பின்னல் ஏற்படுத்தும் கார்ட்-களை கொண்டுள்ளன.

## Smart phone களுக்கு மின்வலுவேற்ற WICC




smart phone களுக்கு wire களின் மூலம் மின்வலுவேற்றுவதை தவிர்த்து Duracell வழங்கும் super slim wireless charging card adapter (WICC) மூலம் மின்வலு வேற்றமுடியும்.


இது Battery உடன் தொடுகையிலிருந்து மின்வலுவேற்றக்கூடியது. ஆனால் துரதிஸ்ட வசமாக இது எல்லா smart phone களுக்கும் பொருந்தாது. smart phone தயாரிப்பாளர்கள் இதை மாற்றியமைத்தால் மட்டுமே முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Cache memory எனப்படுவது என்ன?

CPU வில் அல்லது அதற்குப் பக்கத்தில் பிரத்தியேகமாக அமைந்துள்ள அதிகூடிய வேகமுள்ள நினைவகமே (Memory) Cache momory. இந்த cache memory ஐக் கொண்டு CPU ஆனது system த்தின் வேகத்தை அதிகரிக்கவும் Program களைச் செயற்படுத்தத் தேவையான படிமுறைகளை சேமித்தும் கொள்கிறது.




இதிலுள்ள அனுகூலமானது motherboard லுள்ள bus ஐக் கொண்டு தகவல்களை CPU ஆனது பரிமாறத்தேவையில்லை.




இந்த cache memory போதுமானது. ஏனெனில் தகவல்களானது system bus இனுடாக பரிமாற்றப்படும்போது mother board இன் கொள்ளளவின் வேகம் குறைகிறது. இதனால் இந்த cache memory மூலம் program களைச் செயற்படுத்தும்போது அதிவேகமாகச் செயற்படுத்தலாம்.

CPU வில் புறம்பாக அமையப்பட்ட cache இலும் பார்க்க CPU விலேயே அமையப்பட்ட cache ஆனது ஓர் micro processor இன் வேகத்துடன் செயற்படுகிறது.




ஆனாலும் புறம்பாக அமைக்கப்பட்ட cache ஆனது Ram இன் வேகத்திலும் இரு மடங்காகும். இது Ram இலும் பார்க்க விலைகூடியது.

எப்போதும் CPU மற்றும் motherboard உடன் built-in cache அமையும் வண்ணம் வாங்குவீர்களேயாகில் உங்கள் system ஆனது மிகத்திறமையாகத்தொழிற்படும்.

# Bus எனப்படுவது என்ன?


கணினியானது தரவுகளை (data) பரிமாறும் வயர்களின் தொகுப்பு ( A collection of wire ) Bus ஆகும்.

இந்த bus ஐ கணினியில் தகவல்கள் பரிமாறப்படும் ஓர் பிரதான பாதையாக நீங்கள் கற்பனை செய்து பார்க்கலாம். Bus ஓர் கணினியில் CPU விற்கும் பிரதான நினைவகத்திற்கும் ( Main memory ) சகல பாகங்களையும் இணைக்கிறது.




Bus இல் இரு வகை உண்டு.
1. Address bus
2. Data bus


உண்மையான தகவல்களைக் குறிப்பது Data bus. தகவல்கள் எங்கு செல்ல வேண்டும்




என்பதை அறிவிப்பது Address bus ஆகும். Bus இன் அளவு width இல் குறிக்கப்படும். இது முக்கியமானது என்னவெனில் ஒரு தடவையில் எவ்வளவு தகவல்கள் பரிமாறப்படுகின்றது என்பதை இதன் மூலம் தெரிந்து கொள்கிறோம்.

உதாரணமாக 16 bit bus ஆனது 16 bits தகவல்களைப் (data) பரிமாறமுடியும். அதேபோல 32 bit bus ஆனது 32 bits தகவல்களைப் (data) பரிமாறமுடியும்.

ஒவ்வொரு bus ம் அதற்குரிய வேகத்தை கொண்டிருக்கும். இது Mhz இல் அளவிடப்படும். வேகமான bus தகவல்களை வேகமாகப் பரிமாறிக்கூடியவை. கணினியில் பழைய ISA bus ஐ புதிய வேகம் கூடிய PCI bus ற்கு மாற்றியமைக்கலாம்.




ஒவ்வொரு கணினிக்கும் முக்கியமாக Video data கள் போன்றவற்றை வேகமாக Processor ற்குப் பரிமாறுவதற்கு bus முக்கியமானதொன்றாகும். Apple Macintosh கணினிகளில் சில வித்தியாசமான bus கள் உள்ளன. பழைய mac இல் PCI bus ம் உபயோகிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கணினி பற்றிய உங்கள் அறிவுத்திறன் எந்த அளவில் இருக்கிறது ? என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்

1. விண்டோஸ் NT, விண்டோஸ் XP , விண்டோஸ் Vista மற்றும் விண்டோஸ் 7 இல் பயன்படுத்தப்படும் விண்டோஸ் கோப்பு அமைப்பு முறையின் (file system) பெயர் என்ன?

| | |
|---|---|
| (A) விண்டோஸ் கோப்பமைப்பு (WinFS) | (B) கோப்பு ஒதுக்கீட்டு அட்டவணை (FAT) |
| ✓ (C) புதிய தொழில்நுட்பக் கோப்பு அமைப்பு (NTFS) | (D) ஃபாஸ்ட் கோப்பு அமைப்பு (FFS) |

2. ஏன் சில பழைய சாதனங்கள் 2 அல்லது 4 ஜிகாபைட்டை (GB) விட பெரிய ஜிகாபைட் (GB) கொண்ட Secure Digital card (SD) அட்டைகளை ஆதரப்பதில்லை?

| | |
|---|---|
| ✓ (A) பழைய சாதனங்கள் உயர் திறன் SD கார்டுகளை ஆதரிப்பதில்லை. | (B) பழைய சாதனங்களில் Adaptor கொண்டுதான் சிறிய உயர் திறன் SD கார்டுகளைப் பொருத்த முடியும். |
| (C) பழைய சாதனங்கள் பல்லூடக அட்டைகளை(MMC)2அல்லது 4 GB வரை மட்டுமே ஆதரிக்கும். புதிய சாதனங்கள் அதே வடிவமைக்கப் படுபவைகளோடு SD கார்டுகளை 32GBவரை ஆதரிக்கும்.(MMC) | (D) பழைய சாதனங்கள் பெரிய SD கார்டுகள் கொள்ள முடியாது என்பது ஒரு கற்பனை. |

3. பின்வருவனவற்றுள் எது சிறந்த கம்பியில்லா பாதுகாப்பினை வழங்குகிறது?

| | |
|---|---|
| (A) வயர் (Wire) சமான பாதுகாப்பு (WEP), 64 bit | (B) வயர் (Wire) சமான் பாதுகாப்பு (WEP), 128 bit |
| ✓ (C) Wi-Fi Protected Access (WPA) | (D) மெய்நிகர் தனியார் பிணையம் (VPN) |

4. பின்வருவனவற்றுள் எது மடிக்கணினி மீது அதிகமான பேட்டரி சக்தியை பராமரிக்கிறது?

| | |
|---|---|
| ✓ (A) திரை பிரகாசத்தைக் குறைப்பதால் | (B) Wi-Fi அணைத்தல் |
| (C) வன்தட்டு இயங்கிக்கொண்டிருப்பதை நிறுத்துவதன் மூலம் | (D) உங்கள் ஃபயர்வால் ( Firewall) செயல் நீக்குவதால் |

5. DSL மற்றும் ADSL இடையே என்ன வித்தியாசம்?

| | |
|---|---|
| (A) ADSL தான் DSL இன் சரியான பெயர். | ✓ (B) DSL இல் பதிவேற்றம் மற்றும் பதிவிறக்கத்தின் வேகம் சமமாக இருக்கும், அதே சமயம் ADSL இல் பதிவேற்றத்தின் வேகம் குறைவாக இருக்கும். |
| (C) DSL இல் பதிவேற்றம் மற்றும்பதிவிறக்கத்தின் வேகம்சமமாக இருக்கும். அதே சமயம் ADSL இல் பதிவிறக்கத்தின்வேகம் குறைவாக இருக்கும். | (D) ADSL வழக்கமான DSL ஐ விட அதிகமாக இருக்கும். |

6. உங்கள் கணினி மிகவும் வெப்பமாக இருந்தால் என்ன நடக்கும்?

| | |
|---|---|
| (A) உங்கள் கணினி வெடித்துச் சிதறும். | ✓ (B) உங்கள் கணினி தானாக அணையும். |
| (C) உங்கள் கணினி உருகும். | (D) உங்கள் கணினி தீ பிடிக்கும். |

7. பின்வரும் பகுதிகளில் இயங்குதளத்தை இயக்குவதற்கு எது முக்கியமல்ல?

| | |
|---|---|
| (A) நினைவகம் ( Memory) | (B) Video card |
| (C) Disk drive | ✓ (D) Keyboard |

இவ்வினாக்களுக்கான விடைகள் கணினிக்கள சஞ்சிகையின் 30,31ம் பக்கங்களில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 8. கைரேகை வருடிகளை உங்கள் கணினியைப் பாதுகாக்க பயன்படுத்துவதனால் என்ன முக்கியமான தீமை ஏற்படும்? | |
|---|---|
| (A) மற்றவர்களின் கைரேகைகளைத் தூசு மற்றும் வெளிப்படையான நாடாவைப் பயன்படுத்தி நகல் எடுப்பது | ✓ (B) கைரேகைகள் மாறும், அதனால் உங்கள் கைரேகை வருடி எப்பொழுதும் கோப்புகளைத் திறந்து வைத்திருக்காது. |
| (C) மோசமான நண்பர்கள் உங்கள் கைரேகைகளைத் துண்டித்து கோப்புகளுக்குள் நுழையக் கூடும். | (D) மேற்கூறிய அனைத்தும். |

| 9. கூகுளில் இருப்பது போல இரண்டு காரணி அங்கீகாரம் (two-factor authentication) என்றால் என்ன? | |
|---|---|
| (A) உங்கள் கடவுச்சொல்லை மாற்றுதல் | (B) ஒரு CAPTCHA அதன் தேவையை அடிப்படை கணிதம் செய்ய வேண்டும். (காரணிப்படுத்துதல்) |
| (C) ஒரு நேரடித் தொடர்பு வங்கிக் கணக்கில் பணம் நகர்த்த இரண்டு வெவ்வேறு மக்களின் கடவுச்சொற்கள் (ஒருதாயும், மகளும் போன்றவை) தேவை. | ✓ (D) ஒரு பாதுகாப்பு அமைப்பில் ஒரு குறிப்பிட்ட கணக்கு உங்களுக்குச் சொந்தமானது என்பதற்கு இரண்டு ஆதாரங்கள் தேவை. |

| 10. அச்சுப்பொறி "டூப்ளக்ஸ்"-ஐ ஆதரிக்கும் போது அதற்கு என்ன அர்த்தம்? | |
|---|---|
| (A) அச்சுப்பொறி நிற உயர் திறன் கொண்ட படங்களை அச்சிடும். | (B) அச்சுப்பொறி டூப்ளக்ஸ் காகிதத்தை ஆதரிக்கின்றது. |
| ✓ (C) அச்சுப்பொறியில் பக்கத்தின் இருபுறமும் அச்சிட முடியும். | (D) அச்சுப்பொறி உயர் தீர்மானம் பிம்பங்களை அச்சிட இரண்டு அச்சுத் தலைகளை உபயோகப்படுத்தும். |


இவ்வினாக்களுக்கான விடைகள் கணினிக்கள சஞ்சிகையின் 30,31ம் பக்கங்களில்..,

# Pixel என்றால் என்ன? DPI என்றால் என்ன?

***Pixel அதாவது திரைப்புள்ளிகளானது திரையின் விம்பத்தின் அடிப்படை அலகாகும். DPI என்பது Dots per Inches அதாவது ஒவ்வொரு inch அலகிலும் உள்ள திரைப் புள்ளிகளாகும்.***

ஒரு விம்பத்தில் ( image ) DPI இன் எண்ணிக்கையை மாற்றாமல் Pixel களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் போது மிகப்பெரிய Image பெறப்படும். இதை எதிர்மாறாகச் செய்யும்போது Image இன் அளவு சிறியதாகக் காணப்படும். Pixel களின் எண்ணிக்கை மற்றும் DPI ஆனது திரைகள் மற்றும் கமராக்களில் பெரும் பங்கு வகிக்கின்றன.

மிக உயர்தரத்தில் Image ஐப் பெறுவதற்கு அதிகூடிய resolution மற்றும் pixel கள் அவசியம் என்பது பொதுவான கொள்கையாகும். அதிகூடிய resolution உள்ள image ஆனது சிறியதாகப் print செய்யப்படும் போது அதன்நேர்த்தி மற்றும் உயர்ந்த தரத்தை நீங்கள் காணக்கூடியதாக இருக்கும்.



திரைகளில் பொதுவாக SD,HDTV set களில் இந்த வித்தியாசத்தை நீங்கள் காணலாம்.




TV set களில் image கள் ஒரே அளவாகவும் HD set களில் SD இலும் பார்க்க உயர்தரத்திலும் image கள் காணப்படும். இதற்கு காரணம் HD இல் Pixel களின் எண்ணிக்கை அதிகமாகும் அதாவது Dots per inch அளவு அதிகமாகும். SD திரைகளில் அதன் திரை அளவிற்கு image பெரிதாக்கப்படுகிறது. இதனால் Pixel கள் அளவில் பெரிதாகும்போது image ஆனது கலங்கிய தன்மையுடன் கண்ணுக்குப் புலப்படுகிறது.

இறுதியான output இல் image சீர்குலையாதவாறு pixel களை இலகுவாக உட்செலுத்தமுடியாது. நிழற்படங்களை எடுக்கும் போது resolution ஐ அதிகரிக்க இது முக்கியமானதொன்றாகும். ஆனால் DPI ஆனது அதன் அளவிற்கு ஏற்ப மாற்றமுடியும்.

- Computer imageல் pixel ஆனது அதன் ஓர் அலகாகும். DPI ஆனது image எவ்வளவு பெரிது என்பதை எமக்குக் காட்டுகிறது.
- Pixelன் எண்ணிக்கையை அதிகரிக்கும் போது imageஇன்அளவும்பெரிதாகிறது. ஆனால் DPI ன் அளவை அதிகரிக்கும் போது image இன் அளவு சிறியதாகிறது.
- உயர்தரத்திலான image ஐப் பெறுவதற்கு உயர் DPI எண்ணிக்கை அதாவது உயர் pixel எண்ணிக்கை அவசியம்.
- DPIன் அளவை இலகுவாக அதிகரிக்க முடியும். ஆனால் pixel களின் எண்ணிக்கையை விம்பம் சீர்குலைவதற்கு முன்னதாக அதிகரிக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலகின் முதலாவது அசையும் அச்சு இயந்திரமுறையைக் கண்டுபிடித்ததன் மூலம் பதிப்புத் துறையின் இன்றைய வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தவர் கூடன்பேர்க் (Johannes Gutenberg. 1398-1468). ஜேர்மனியைச் சேர்ந்த பொற் கொல்லரான இவர் அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்து முதலாவது அச்சகசாலையை நிறுவினார்.

இவர் அச்சிட்டவற்றுள் பிரதான நூலாக பைபிள் பேசப்படுகிறது. கடதாசித் தாள்களிலும், விலங்குத் தோல்களிலும் 180 பிரதிகளை அச்சிட்டார். அக்காலத்துத் தொழில்நுட்பத்தையும், அழகியலையும் பிரதிபலிக்கும் விதமாக அமைந்த இந்த பைபிள்களின் சில பிரதிகள் இப்போதும் அருங்காட்சியகங்களில் பேணப்படுகின்றன.

நவீன அச்சுக் கலையின் முன்னோடி

# கரிகணன்

# Harikanan (Pvt.) Ltd.

Printers of the North

#424, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA.

Phone : 0094-21-2222717 / 21-7397530, Fax : 0094-21-2222891

www.harikanan.com e-mail: print@harikanan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு-12

# மாணவர் களம்

நவீன தொழிநுட்ப ஆய்வுத்தொடர் சஞ்சிகை

2012 | ASIAN EDITION | விலை 85/=



**WiFi** பக்கம் 09

## கற்றல் இனிது





பக்கம் 05

## இவர் இனிமேல் வளரமாட்டார்



பக்கம் 04



## அன்று தோமஸ் அல்வா எடிசன் இன்று?

பக்கம் 07




# தெரிந்து கொள்ளுங்கள்! வன்தட்டைப்பற்றி...

ப- 01



## கணினியை வாங்கிய பின் ஏமாற்றமா?

ப-03



## மூளையை குளிர்மைப்படுத்தி வேகத்தை அதிகரியுங்கள்

ப-05

## உங்கள் கணினி அறிவு எப்படி இருக்கிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org